# மாயமான்

SRIKALA

# மாயமான்

SRIKALA


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

# ஸ்ரீகலாவின் "மாயமான்"

Contents


அத்தியாயம் : 1
அத்தியாயம் : 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் : 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9
அத்தியாயம் : 10
அத்தியாயம் : 11
அத்தியாயம் : 12
அத்தியாயம் : 13

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

# அத்தியாயம் : 1

பேருந்தின் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்த செல்வாவின் முகத்தில் குளிர்ந்த காற்று படிந்து அவனது முகத்தில் மந்தகாச புன்னகையைத் தோற்றுவித்தது. மேற்கு தொடர்ச்சி மலையின் குளுமை அங்கு வீசும் காற்றிலும் விரவி பரவியிருந்தது. மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் இருக்கும் மலையூர் கிராமத்தை ஒட்டியுள்ள காடுகளைப் பாதுகாக்கும் வன அதிகாரியாகப் பணிபுரியத்தான் செல்வா தனது தாய் சுபத்ராவுடன் பயணித்துக் கொண்டிருந்தான். தந்தை திருவேங்கடம் சிறுவயதில் இறந்துவிட்டார். ஒரே ஒரு தம்பி, பெயர் மணிமாறன். அவனுக்கு ஒரு வருடத்திற்கு முன்பு தான் திருமணமானது. அவன் மனைவியுடன் சென்னையில் வசிக்கின்றான். செல்வாவிற்கு மட்டும் இன்னும் திருமணமாகவில்லை. அது அவனது தாயிற்குப் பெரும் குறையே. பின்னே முப்பது வயதாகியும் செல்வா திருமணம் ஆகாமல் இருந்தால் அவருக்கு வருத்தம் இருக்கத்தானே செய்யும்.

"டேய் செல்வா..." சுபத்ரா மகனது காதை கடித்தார்.

"என்னம்மா?" அவன் புன்னகையுடன் திரும்பினான்.

"இப்போ போகிற ஊரில் தான் எனக்கான மருமகள் இருக்கிறாள்ன்னு எனக்குத் தோணுது. உனக்கு ஏதும் அப்படித் தோணுதா?" அவர் மகனுக்குத் தூண்டில் போட்டு பார்த்தார்.

அவரது எண்ணம் போகும் திசை அறிந்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதைக் காட்டி கொள்ளாதவாறு முகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டவன்,

"எனக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகிருச்சும்மா." என்றான் விரைப்பான குரலில்...

"டேய் என்னடா சொல்ற?" சுபத்ரா அதிர்ச்சியுடன் நெஞ்சில் கை வைத்தார்.

PDF தமிழ் .com

"உண்மையைத் தான்ம்மா சொல்றேன்."

"ஐயோ, அருமை, பெருமையா சோறூட்டி, தாலாட்டி தூங்காம கண் முழிச்சு வளர்த்தேனே. அது இந்த வார்த்தையைக் கேட்கத்தானா?" அவர் கண்ணீரும் கம்பலையுமாய்ப் புலம்ப... பேருந்தில் அமர்ந்திருந்தவர்கள் அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தனர்.

"ம்மா..." என்று அவரை அடக்கியவன்,

"என்னோட வேலையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னேன்ம்மா... அதுக்குன்னு இப்படியா ஒப்பாரி வைப்பீங்க?" என்று அவரைச் செல்லமாய்க் கடிந்தான்.

"வேலையவா..." என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட சுபத்ராவிடம் செல்வா தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினான். அதை வாங்கிக் குடித்தவர் திடுமென,

"செல்வா, செல்வா..." என்று அலற...

"ப்ச், என்னம்மா...?" அவன் சலிப்புடன் வினவ...

"அங்கே பாருடா உன்னோட குழந்தைகளை..." என்று சுபத்ரா வெளிப்புறம் கையைக் காட்டினார்.

"குழந்தைகளா?" என்று குழம்பியபடி அவர் காட்டிய திசையில் பார்த்தவன் அடுத்த நொடி கொலை கண்டானான்.

"ம்மா..." பேருந்து என்றும் பாராமல் அவன் கோபமாய் உச்சஸ்தானியில் கத்தினான்.

"ரொம்ப அழகாயிருக்குல்ல..." என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தவரை முறைத்து பார்த்தவன்,

"குரங்குகள் என்னுடைய குழந்தைகளா?" என்று கடுமையுடன் கேட்டான்.

"பாருடா, பெறாத குழந்தைகள் மேலிருக்கிற பாசத்தை..." அவர் மகனை கிண்டலடிக்க...

"ம்மா..." அவன் பல்லை கடித்தான்.

"பின்னே என்னடா? காட்டைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவனோட குழந்தைகள் அந்தக் காட்டோட விலங்குகள் தானே. உன்னைப் புள்ளையா பெத்த பாவத்துக்கு அந்தக் குரங்குகளை என் பேரப்புள்ளையா ஏத்துக்கிட்டேன்." என்று அவர் வராத கண்ணீரை புடவை தலைப்பால் துடைத்துக் கொண்டார். தாயின் அலும்பில் அவனது கோபம் மறைந்து அவனுள் சிரிப்பு தோன்றியது.

"ம்மா, நானாம்மா கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றேன். எனக்கு ஏனோ கல்யாணத்தில் விருப்பம் இல்லை."

"அப்போ சாமியாரா போகப் போறியா செல்வா...?" அறியாமையுடன் கேட்ட தாயை அணைத்து கொண்டவன்,

"அவ்வளவு சீக்கிரம் என் தொல்லையில் இருந்து தப்பிச்சிடலாம்ன்னு கனவு காணாதீங்க மிஸஸ். திருவேங்கடம். நான் உங்க கூடவே இருந்து உங்க ஆயுசு முழுமைக்கும் தொல்லை பண்ணுவேன்."

"கல்யாணம் பண்ணிட்டு தொல்லை பண்ணு தானேன்னு சொல்றேன்." அவர் சிறு முகத்திருப்பலுடன் கூற...

"பார்க்கலாம்..." என்று அவன் பிடி கொடுக்காமல் கூற... அதுவே அந்தத் தாயிற்குப் போதுமானதாய் இருந்தது.

மலையூர் கிராமத்தில் பேருந்து நின்றதும் அம்மா, மகன் இருவரும் இறங்கினர். இருவரும் அவர்களது உடைமைகளைத் தவிர வேறு எதுவும் கொண்டு வரவில்லை. வீட்டிற்குத் தேவையானவற்றை இங்கேயே வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தனர். செல்வா தோளில் ஒரு பையை மாட்டி கொண்டு, இரு கைகளிலும் இரு பெட்டிகளைத் தூக்கி கொண்டான்.

"என் கிட்ட ஒரு பெட்டியை கொடு செல்வா." சுபத்ரா கேட்க...

PDF தமிழ் .com

"இருக்கட்டும்மா..." என்றவன் கடைவீதியை நோட்டமிட ஆரம்பித்தான்.

அங்கு ஆட்டோ, ரிக்சா எனப்படும் முச்சக்கர வாகனம் எதுவும் இல்லை. மாறாக மாட்டு வண்டி, குதிரை வண்டி நின்றிருந்தது.

"ஆச்சரியமா இருக்கு... ஒரு ஆட்டோ கூடக் கிடையாதா?" என்று அவன் வியப்பாய்ப் பார்த்திருந்தான்.

"இன்னமும் பழமை மாறாம அப்படியே இருக்குடா..." என்ற சுபத்ராவின் விழிகளில் வியப்பு இல்லை. மாறாக ரசிப்பு தன்மையே நிறைந்திருந்தது.

"நீங்க இந்த ஊருக்கு வந்திருக்கிறீங்களா?" மகன் கேட்டதும் அவர் உள்ளுக்குள் திடுக்கிட்டாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை.

"அதான் பார்த்தாலே தெரியுதே." என்று அவர் சமாளிக்க... மகனும் அதை உண்மை என்றே நம்பி விட்டான்.

செல்வாவிற்கு இந்த ஊருக்கு மாற்றல் வந்திருக்கிறது என்ற போது வராத சஞ்சலம், அவனுடன் இங்கு வருவதற்காகப் பேருந்தில் பயணித்த போது வராத சஞ்சலம்... இப்போது அவரது மனதினை ஆக்கிரமித்துக் கொண்டது. ஏதோ விபரீதம் நடக்கப் போவதாய் அவரது உள்மனம் எச்சரித்தது. அது ஏனென்று அவருக்குத் தெரியவில்லை. எல்லாம் தெரிந்த திருவேங்கடம் இப்போது உயிரோடு இல்லை.

"ஐயா..." அங்கு நின்று கொண்டிருந்த குதிரை வண்டியினுள் சுகமாய் உறங்கி கொண்டிருந்த பெரியவரை கண்டு செல்வா உரக்க அழைக்க... அவனது குரலில் உறக்கத்தில் இருந்து விழித்தவர் அவனைக் கண்டதும்,

"பேய், பேய்..." என்று அலற துவங்கினார்.

"ஐயா, நான் பேய் இல்லை... மனுசன் தான்..." என்று அவன் அவரைச் சமாதானப்படுத்த... அவரோ தனது வண்டியை

விட்டு இறங்கி அவனைத் திரும்பி பார்த்தபடி தலை தெறிக்க ஓடினார்.

"இவருக்கு என்னாச்சும்மா...?" செல்வா புரியாமல் விழித்து நிற்க... சுபத்ராவோ மகனை மேலும் கீழும் ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ம்மா, இப்போ உங்களுக்கு என்னாச்சு?"

"போயும், போயும் உன்னைப் பார்த்து ஒருத்தர் பயப்படுறாரே..." என்று சொல்லும் முன் சுபத்ராவிற்குச் சிரிப்பு வெடித்தது. செல்வா அன்னையை முறைத்தான்.

"சார், சார்..." என்று மூச்சிரைக்க ஓடி வந்தான் ஒருவன்.

"நீங்க...?" செல்வா அவனைக் கேள்வியாய் பார்க்கவும்,

"நான் ஃபாரஸ்ட் வாட்ச்சர்... என் பெயர் முத்து சார். நீங்க இங்கே வர்ற விசயம் இப்போ தான் எனக்குத் தெரிய வந்தது. உடனே ஜீப்பை எடுத்துட்டு ஓடி வந்துட்டேன்." என்ற முத்து செல்வாவின் கைகளில் இருந்த பெட்டிகளை வாங்கிக் கொண்டான்.

ஜீப்பில் உடைமைகளைப் போட்டு விட்டு, அன்னை சுபத்ரா ஏறுவதற்கு உதவி புரிந்த செல்வா பின்பு தானும் ஜீப்பின் முன்பகுதியில் ஏறியமர்ந்தான். அதிக நடமாட்டம் இல்லாத ஊரை அவனது விழிகள் வியப்புடன் பார்த்தபடி வந்தது.

"இங்கே எல்லாம் இப்படித்தான் சார்... மக்கள் நேரத்தோட வீட்டுக்குள்ள போய் அடைஞ்சுக்காவங்க."

"அப்போ வேலைக்குப் போறவங்க, படிக்கிற புள்ளைங்க...?" செல்வா கேள்வியாய் நிறுத்தினான்.

"இங்கே இருக்கிறவங்க யாரும் வெளியூருக்கு வேலைக்குப் போறது இல்லை. அதே போல் புள்ளைங்க படிக்கப் போறதும் இல்லை."

"குழந்தைங்க படிக்காம என்ன பண்றாங்க?" அவன் திகைப்புடன் கேட்டான்.

PDF தமிழ் .com

"பள்ளிக்கூடம் இருந்தா தானே படிக்கப் போறதுக்கு... இருந்த ஒரே பள்ளிக்கூடமும் வாத்தியார் யாரும் வராததால் இழுத்து மூடிட்டாங்க. அப்புறம் எங்குட்டு இருந்து புள்ளைங்க படிக்க... அப்படிப் படிக்கப் போகணும்ன்னா இங்கிருந்து இருபது கிலோமீட்டர் தள்ளி போய்ப் படிச்சிட்டு வரணும். அது ரொம்பவே சிரமம்." முத்து சொல்ல சொல்ல மலைவாழ் மக்களின் கஷ்டம் செல்வாவிற்குப் புரிந்தது.

அரை மணி நேர பயணத் தொலைவில் செல்வாவிற்கு ஒதுக்கப்பட்டு இருந்த வீடு வந்துவிட்டது. சுற்றிலும் எந்த வீடும் இல்லை. நடுக் காட்டில் தனியே இருந்தது அந்த வீடு. அதைக் கண்டதும் சுபத்ராவிற்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"தனியா இந்த வீட்டில் இருக்கணுமா?" அவர் கேட்டதைக் கண்டு சிரித்த முத்து,

"பயப்படாதீங்கம்மா... என்னோட வீடு கூப்பிடும் தூரத்தில் தான். ஏதாவது ஒண்ணுன்னா நான் ஓடி வந்துர மாட்டேன். அது போக உங்களுக்கு வீட்டு வேலை செய்ய, பேச்சு துணைக்கு மைனாவை வர சொல்லி இருக்கேன்."

"மைனா எப்படி வேலை செய்யும்? என் கூட எப்படிப் பேசும்?" சுபத்ரா அதிமுக்கிய சந்தேகத்தைக் கேட்க...

"ஹா ஹா... அம்மாவுக்கு எப்பவும் குறும்பு தான் போலிருக்கு." முத்து வாய்விட்டுச் சிரித்தான். செல்வா அடக்கப்பட்ட கோபத்துடன் அம்மாவை பார்த்தான்.

"மைனான்னு நான் சொன்னது மலைவாழ் இன பெண்ணை..."

"ஓ... அப்படியா? அப்போ சரி..." என்றவர் மகனது கோப பார்வைக்கு அஞ்சி முன்னே சென்றுவிட்டார்.

சிறிய வரவேற்பறை, முற்றம், அதன் ஒரு புறம் படுக்கை அறை, மறுபுறம் சமையலறை என வீடு சிறியதாக இருந்தாலும் கச்சிதமாக இருந்தது. சுபத்ராவிற்கு வீடு மிகவும் பிடித்துப் போயிற்று.

"நல்ல காற்றோட்டமா இருக்கு செல்வா..." என்றார் முகம் மலர... அவரது மகிழ்ச்சி அவனையும் தொற்றிக் கொண்டது.

"உங்களுக்குத் தேவையான சாப்பாட்டைக் கொடுத்து விடறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க. நான் கிளம்பறேன் சார்." முத்துக் கிளம்பத் துவங்கினான்.

"முத்து, வெயிட்..." என்றவன் முத்து அருகில் வந்து,

"வீட்டுக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் வாங்கணும். எங்கே வாங்கலாம்?" என்று கேட்க...

"இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமை... பக்கத்து ஊரில் இன்னைக்குச் சந்தை நாள் தான். சந்தைக்குப் போய் வாங்கிட்டு வந்திரலாம்."

"சரி..." என்று அவன் கூறவும் முத்து விடைபெற்றுக் கொண்டு வெளியேறினான்.

"செல்வா நான் கொஞ்ச நேரம் படுக்கிறேன்டா..." என்ற சுபத்ரா அறையில் இருந்த கயிற்றுக் கட்டிலில் படுக்க ஆயத்தமாக...

"கொஞ்சம் இருங்கம்மா..." என்றவன் பெட்டியில் இருந்து அவசரத்திற்கு என்று கொண்டு வந்திருந்த போர்வையைக் கட்டிலில் விரித்து, ஆயத்த தலையணையை எடுத்து காற்றடைத்து வைத்தவன்,

"இப்போ படுங்க..." என்க...

"இதை எல்லாம் எப்போடா எடுத்து வச்ச...?" என்று வியந்து கேட்டபடி படுத்தார் சுபத்ரா.

"இதெல்லாம் எப்போதும் என் கூடவே இருக்கும்." என்றவன் அவரைத் தூங்க சொல்லிவிட்டு வெளியில் வந்தான்.

சுற்றிலும் அடர்ந்த மரங்கள் இருப்பதால் அந்த இடமே குளுமையாக இருந்தது. மண்ணின் ஈரப்பதம், இலைதழைகளின் மணம், பூக்களின் வாசம் எல்லாம்

PDF தமிழ் .com

கலந்து ஒருவித சுகந்தமான வாசனையைப் பரப்பியது. மூச்சை நன்றாக இழுத்து ஆழ மூச்செடுத்தவன் மனம் மயங்கி விழி மூடி நின்றான்.

"வந்துட்டியா செல்லா... நான் உனக்காகத் தான் இத்தனை வருசம் காத்திருந்தேன்." ஒரு பெண்ணின் கண்ணீர் குரல் அவனது செவியைத் தீண்ட அவன் திடுக்கிட்டு போய் விழி திறந்தான். அவன் எதிரில் யாரும் இல்லை. அந்தக் குரல் அவனது மனதினை போட்டு பிசைய... அவனது விழிகள் சுற்றுபுறத்தை அவசரமாய் அலசியது. ஆனால் அங்கு யாரும் இல்லை.

'அப்போ நான் கேட்ட குரல் பிரம்மையா?' அவன் தனக்குள் குழம்பியபடி நின்றிருந்தான். அப்போது யாரோ சறகுகளை மிதித்துக் கொண்டு ஓடும் சத்தமும், அதைத் தொடர்ந்து சலங்கை ஒலியும் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி ஓடியவனின் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அடர்ந்த மரங்களே காட்சி அளித்தது. செல்வாவிற்குப் பயத்தில் வியர்க்க துவங்கியது.

வனம் அவனது வாழ்க்கையோடு ஒன்றிய ஒன்றாக இருந்த போதும் இந்த அனுபவம் அவனுக்குப் புதிது. பிரம்மை என்று ஒதுக்க முடியாத, அதே நேரம் உண்மை என்று நம்பவும் முடியாத அனுபவம் இது... அந்தப் பெண்ணின் அழுகுரல் அவனை மிகவும் இம்சித்தது.

'உனக்கு என்ன சோகம் பெண்ணே!' அவன் மானசீகமாகத் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அதை அந்த அரூப உருவத்தில் இருக்கும் பெண் உணர்ந்தாளோ என்னவோ...! அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. அதுவே அவளது சோகத்தைச் சொல்லாமல் சொல்லியது.

'என் சோகம் உன்னால் மட்டுமே போக்க கூடியது செல்லா. நான் இத்தனை காலம் காத்திருந்தது உனக்காகத் தான்... நான் நினைத்தது போல் எனது எண்ணத்தின் சக்தி உன்னை இங்கு இழுத்து வந்து விட்டது. இனி எனக்குக்

கவலை. எனது கண்ணீருக்கும் வேலை இல்லை.' என்றபடி கண்ணீரை துடைத்து கொண்டாள் அந்த வனத்தின் ராணி.

"சார்..." என்றழைத்தது ஒரு பெண்ணின் குரல்...

"யாரது...?" என்றபடி அவன் திரும்ப...

"ஐயா... நீங்களா...?" என்றபடி அதிர்ந்து போனாள் அந்தப் பெண்...

மலைசாதி பெண்ணுக்குரிய லட்சணங்களுடன் அவள் நின்றிருந்தாள். நடுத்தர வயது இருக்கும்... பருத்தி துணி இரவிக்கையும், பாவாடையையும் அணிந்து அதற்கு மேல் புடவை போன்ற ஒன்றை சுற்றி தலையை முக்காடிட்டு இருந்தாள். விழிகளில் மை பூசி, நெற்றியில் இரத்த சிவப்பில் பெரிய பொட்டு வைத்து, கழுத்துக் காதுகளில் வெள்ளியாலான பெரிய அணிகலன்கள் அணிந்து, கால்களில் பெரிய சலங்கை வைத்த கொலுசு அணிந்திருந்தாள்.

'ஒருவேளை இந்தப் பெண்மணி தான் நம்மைப் பயமுறுத்தியதோ?' செல்வா சந்தேகமாக அந்தப் பெண்மணியைப் பார்த்தான். அவளோ அவனைக் கண்டு பயத்தில் நடுநடுங்கி கொண்டிருந்தாள்.

"ஐயா, சாமி... நீங்க எப்படிய்யா இங்கே?"

"நான் தான் புதுசா வந்திருக்கும் ஃபாரஸ்ட் ஆபிசர்." என்று அவன் மிடுக்குடன் கூற...

"அது எப்படிச் சாமி?" அவள் அதிர்ச்சியும், திகைப்புமாய்க் கேட்க...

"கொஞ்ச நேரத்துக்கு முன்னே என்னைப் பயமுறுத்தியது நீ தானா?" அவன் மிரட்டலாய் கேட்டான்.

"நானா?" மீண்டும் அவள் திகைக்க...

"வந்துட்டியா செல்வா (செல்லா என்ற பெயர் அவனது காதுகளில் செல்வா என்று விழுந்திருக்கிறது). நான்

PDF தமிழ் .com

உனக்காகத் தான் இத்தனை வருசம் காத்திருந்தேன்னு சொன்னது நீ தானே? உனக்கு எப்படி என் பெயர் தெரியும்? முத்து சொன்னானா? எவ்வளவு தைரியம் இருந்தால் என் பெயரை சொல்லி கூப்பிடுவ?" என்று அவன் மீண்டும் மிரட்ட துவங்க...

அந்தப் பெண்மணி அவனைக் கண்ணீரும், சந்தோசமாய்ப் பார்த்தபடி, "செல்லி..." என்று தனக்குள் முணுமுணுத்து கொண்டாள்.

"ஆங், என்ன சொன்ன?"

"நீங்க எதுக்குய்யா இங்க வந்தீக? உங்களைப் பார்த்தா உயிரோடு கொன்னு புதைச்சிருவாங்களே." என்றவளின் விழிகள் சுற்றும் முற்றும் பயத்துடன் பார்த்தது.

"என்னைய கொன்னு புதைச்சிருவாங்களா? ஹா ஹா..." என்று அவன் வாய்விட்டுச் சிரித்தான். அவனது பலத்த சிரிப்பொலி அமைதியான கானகத்தில் அதிபயங்கரமாய் எதிரொலித்தது. அந்தப் பெண்மணி அவனை இறைஞ்சுதலுடன் பார்த்திருந்தாள்.

"ஏன்டா தூங்கிட்டு இருக்கிறவளை இப்படிச் சிரிச்சு பயமுறுத்துற...?" என்று கேட்டபடி அங்கு வந்தார் சுபத்ரா.

"இந்த லேடி என்னைப் பார்த்து ஜோக் அடிச்சாங்க... அதான் சிரிச்சேன்."

"என்னடா ஜோக்கு? எனக்கும் கொஞ்சம் சொல்லேன்." சுபத்ரா மகனை கண்டு கேட்க... செல்வா அந்தப் பெண்மணி கூறியதை கூற... அதைக் கேட்டு சுபத்ராவின் முகம் வெளிறிப் போனது. அவரது பார்வை அந்தப் பெண்மணியைப் பயத்துடன் பார்த்தது.

"யார் நீ?"

"என் பெயரு மைனாங்க..." என்று அவள் கூற... அந்த ரணகளத்திலும் சுபத்ராவின் இதழ்களில் புன்னகை தோன்றியது.

"ஆஹா... மைனா அருமையான பெயர்." என்று அவர் சிலாகிக்க...

"அம்மா..." என்று மகன் பல்லை கடித்தான்.

"நீங்க ஐயாவோட அம்மாவா?" மைனா சுபத்ராவை குழப்பத்துடன் பார்த்தாள்.

"ஏன்? என்னைப் பார்த்தா அம்மா மாதிரி தெரியலையா?" உள்ளுக்குள் கலங்கினாலும் வெளியில் கெத்தாகக் கேட்டார் சுபத்ரா.

"அச்சோ அப்படி இல்லைங்கம்மா. சும்மா ஒரு பேச்சுக்கு கேட்டேன்."

"பேச்சுக்கு கூட இப்படிப்பட்ட சந்தேகம் உனக்கு வர கூடாது. இவங்க என்னைப் பெத்த அம்மா." என்று செல்வா கூற... சுபத்ரா நிம்மதியுடன் மகனை பார்த்தார்.

"ஆமா, நீ எதுக்கு இங்கே வந்த...?" செல்வா மைனாவை பார்த்து கேட்க...

"முத்து சார் சாப்பாடு கொடுத்துட்டு அப்படியே அம்மாவுக்கு ஒத்தாசையா இருக்கச் சொன்னாருங்க..."

"முத்து அனுப்பிய ஆளா...? வா, வா..." என்று சுபத்ரா அவளை அழைத்துச் செல்ல...

செல்வா மட்டும் தனித்து நின்றான். அவன் மனம் மட்டும் பெரும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குரல் அவனை விட்டு அகல மறுத்தது. அந்தக் குரலில் இருந்த பரிவு, ஏக்கம், அன்பு எல்லாம் அவனை ஏதோ செய்தது. யாரது? அவன் தனக்குள் யோசித்தபடி நின்றிருந்தான்.

"செல்வா, சாப்பிட வாடா..." சுபத்ராவின் குரல் உரத்து ஒலித்தது.

"இதோம்மா..." என்றவன் வீட்டை நோக்கி நடந்தான்.

தொடரும்...!!!

PDF தமிழ் .com

## அத்தியாயம் : 2

அதே நேரம் வண்டிக்காரன் அந்த ஊரின் பெரிய வீட்டின் முன் போய் நின்றான். அவனது தேகம் எல்லாம் நடுநடுங்கி கொண்டிருந்தது. அவனுக்குப் பயத்தில் வியர்த்து வடிந்தது.

"ஐயா... சாமி..." என்று அவன் பெருங்குரலெடுத்து அலற...

வீட்டினுள் இருந்து எழுபத்தைந்து வயதுடைய முதியவர் ஒருவர் வந்தார். வெள்ளை வேட்டி, சட்டை அணிந்து கம்பீரமாக நடந்து வந்தவர்,

"எதுக்குலே இப்படிக் கத்திட்டு ஓடியாற...?" என்று உரத்த குரலில் அவனை அதட்டினார். அவரது பெயர் கந்தன். அந்தச் சிறிய ஊரின் பெரிய தலை...

"ஐயா... நம்ம தம்பி... சின்னய்யா... பேய், பேய்..." என்று முழுவதும் கூறாது விட்டு விட்டு விசயத்தைக் கூற...

"உனக்கு என்ன மூளை குழம்பி போச்சா? அவன் செத்து வருசமாச்சு. என்ன மறந்துட்டியோ?"

"இல்லை ஐயா... சின்னய்யா சாகலை. அவுக உயிரோட தான் இருக்காக." அவன் மூச்சிரைக்கச் சொன்னதையே திரும்பச் சொல்ல...

"போ... போய்ச் சோத்த சாப்பிட்டுட்டு வந்து நிதானமா சொல்லு." என்றவர் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார். அவரது முகம் யோசனையில் சுருங்கியது.

"வசந்தா..." அவர் உள்நோக்கி குரல் கொடுத்தார்.

"என்னப்பா?" என்று கேட்டபடி அடுத்த நொடி அங்குப் பிரசன்னமானார் அவரது மகன் வசந்தகுமார்.

"நம்ம ராசு எதையோ பார்த்து பயந்து உளர்றான் பாரு... அதை என்னன்னு கேளு?"

"அவனே ஒரு குடிகார பய... அவன் பேச்சை கேட்டுக்கிட்டு..." என்று வசந்தகுமார் கேலியாய் கூற...

"ஆனா அவன் கூறிய விசயம் சாதாரணமானது இல்லை." என்று கூறியவர் விசயத்தைக் கூறினார். அதைக் கேட்டு வசந்தகுமாரின் முகம் பேயறைந்தது போலானது.

"அது எப்படிப்பா சாத்தியம்?" வசந்தகுமாருக்கு குளிர் காய்ச்சலே வந்துவிடும் போலிருந்தது.

"எது?" கந்தன் கேள்வியாக மகனை பார்த்தார்.

"ராசு சொன்ன விசயம்?"

"சாத்தியம் இல்லை தான்..." என்று தாடையைத் தடவிய கந்தனுள் பல யோசனைகள்...

அதற்குள் ராசு சாப்பிட்டு விட்டு வந்தவன் இடுப்பில் முடிந்து இருந்த துண்டை எடுத்துத் தரையில் போட்டு அதில் அமர்ந்தான். கந்தனும், வசந்தகுமாரும் அவனைக் கேள்வியாய் பார்த்தனர்.

"இப்போ சொல்லு..." கந்தன் கேட்க...

"நான் சவாரிக்காகக் காத்திருக்கிறப்போ கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன்."

"அப்போ கனவு, கினவு கண்டிருப்பல..." வசந்தகுமார் அவனைக் கேலி செய்ய...

"இல்லைங்கய்யா... என் ரெண்டு கண்ணால பார்த்தேன். அது நம்ம சின்னய்யா தான். என்னைச் சவாரிக்கு கூப்பிட்டாரு. நான் பயத்தில் அடிச்சு புரண்டு ஓடி வந்துட்டேன்."

"லூசு மாதிரி உளறாதே..." வசந்தகுமார் ராசுவை மிரட்ட...

"கூட யாரும் இருந்தாகளா?" கந்தன் யோசனையுடன் கேட்க...

"ஆமாங்கய்யா... ஒரு பொம்பளை இருந்தாக." ராசு யோசித்தபடி பதில் கூறினான்.

"வசந்தா, இன்னைக்கு ஊருக்குள்ள யாரும் புதுசா வந்தாகளான்னு விசாரில..."

"ம், ஆகட்டும்ப்பா..." என்ற வசந்தகுமார் சென்றுவிட...

"இந்த விசயத்தை யாரு கிட்டேயும் உளறாம வீடு போய்ச் சேரு." என்று ராசுவிடம் கந்தன் உத்தரவிட... ராசு சரியென்றுவிட்டு கிளம்பிவிட்டான்.

அவன் சென்றதும் கந்தன் யோசனையுடன் அமர்ந்திருந்தார். எங்குத் தவறு நடந்தது? என்று அவர் யோசிக்கத் துவங்கினார்.

*************************

"என்ன ருசி...! என் வாழ்க்கையில் இப்படியொரு சாப்பாட்டை நான் சாப்பிட்டதே இல்லை." என்று சிலாகித்தபடி உணவை ரசித்து ருசித்து உண்டு கொண்டிருந்தார் சுபத்ரா.

செல்வாவும் அதை உணர்ந்து இருந்தாலும் வாய்விட்டு சொல்லவில்லை. அமைதியாக உண்டான். அவன் உணவு உண்டு முடிக்கவும் முத்து அங்கு வரவும் சரியாக இருந்தது.

"சந்தைக்குப் போகலாமா சார்?" என்று செல்வாவை பார்த்து கேட்ட முத்து மைனாவிடம் திரும்பி,

"மைனா, சார் டியூட்டியில் இருக்கும் நேரம் நீ தான் அம்மாவுக்குத் துணையா இருக்கணும்." என்று கூற...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் சார். அம்மாவை ஒரு வேலை செய்ய விட மாட்டேன்." என்று மகிழ்ச்சியுடன் கூறிய மைனா பின்பு லேசான படபடப்புடன்,

"ஐயாவை சந்தைக்குக் கூட்டிட்டு போக வேண்டாம் சார்." என்று கூற...

"ஏன்?" முத்து, செல்வா, சுபத்ரா மூவரும் ஒரே நேரத்தில் கேட்க... என்ன பதில் கூறுவது? என்று திகைத்து விழித்தாள் மைனா.

"சொல்லு மைனா..." சுபத்ரா அதட்டலாய் கேட்டார்.

"ஐயா உயிருக்கு ஆபத்து வந்திருமோன்னு பயமாயிருக்கு." மைனா கலங்கிய விழிகளுடன் கூற... அதைக் கேட்டுச் சுபத்ரா பயந்தாலும் வெளிக்காட்டி கொள்ளாதவாறு,

"என் மகனை என்னன்னு நினைச்ச? அவன் சிங்க குட்டி... எத்தனை பேர் எதிர்த்து வந்தாலும் அவன் ஒத்த ஆளா நின்னு ஜெயிப்பான்." என்று பெருமித குரலில் கூற...

"ம்மா, வேணாம்... வலிக்குது..." செல்வா நகைச்சுவை பாணியில் அழுவது போல் கூற... அதைக் கேட்டு எல்லோரும் சிரித்து விட்டனர்.

"மைனா, உனக்கு என் மேல் இருக்கும் அக்கறைக்கு ரொம்ப நன்றி. ஆனா யாரும் என்னைய ஒண்ணும் பண்ண முடியாது. ஏன்னா..." என்றவன் இடுப்பில் சொருகி இருந்த துப்பாக்கியை எடுத்து அவளிடம் காட்டினான். மைனா அவனுக்கு உணவு இட்டதால் அவன் தன்மையாகப் பதில் கூறினான்.

"இது எப்பவும் என் கூடவே இருக்கும்." என்றவனைக் கண்டு மைனாவின் முகம் சற்றுத் தெளிந்தது.

"எதுக்கும் சாக்கிரதையா இருங்க ஐயா..." என்றவளை கண்டு புன்னகைத்தவன் முத்துவுடன் வெளியேறினான்.

ஒரு மணி நேரம் பிரயாணம் செய்து பக்கத்து ஊருக்கு வந்தவர்கள் சந்தை ஆரம்பிக்கும் இடத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கி நடந்தனர். எல்லாவிதமான பொருட்களும் அங்கே குவிந்து இருந்தது. செல்வா ஒவ்வொன்றையும் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அப்போது பொரி மூட்டை பறந்து வந்து அவனது முகத்தின் மீது மோதி கீழே விழுந்தது. அதில் இருந்த பொரி எல்லாம் மேலே தூக்கி எறியப்பட்டு அவன் மீது மழை போல் பொழிந்தது. திடுமெனப் பொழிந்த பொரி மழையில் அவன் எதிரே என்ன இருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. மழை துளிகளாய் மண்ணில்

தமிழ் நாவல்

வீழ்ந்த பொரிகளை இரு கைகளால் தள்ளியபடி அவன் நிமிர்ந்தான்.

"ஆரம்பிச்சிட்டான்களா?" என்றபடி முத்துச் செல்வா தலை மீதிருந்த பொரிகளைத் தட்டிவிட்டான்.

அப்போது பொரி மழைக்கு நடுவே ஒரு இளம்பெண் தோன்றினாள். மைனா மாதிரி உடை அணிந்திருந்தாள் அந்தப் பெண்... ஆனால் மைனாவின் நெற்றியில் இருந்த இரத்த சிவப்பு பொட்டு மட்டும் இல்லை. அதற்குப் பதில் ஏதோ ஒரு பூவினை அழகாக நெற்றியில் வரைந்திருந்தாள். செல்வா அவளைப் பார்க்கும் போதே அவள் தனது இடது கையில் பிடித்திருந்த ஒருவனைத் தனது வலக்கையால் நையப்புடைத்து கொண்டிருந்தாள்.

"இடுப்பை தொட்டு பார்ப்பியாலே. மலையில வாழுற பொண்ணு, தொட்டதும் ஈயின்னு இளிச்சிட்டு ஒட்டிக்குவான்னு நினைச்சியா? கொன்னுருவேன்டா... யாரு கிட்ட உன் ஈன வேலையைக் காட்டுற." என்று மாற்றி மாற்றி அடிக்க...

"இனி அப்படிச் செய்ய மாட்டேன் தாயி..." என்று அந்தப் பொறுக்கி கீழே விழுந்தபடி அடி தாங்காது கையெடுத்து கும்பிட்டான்.

கீழே விழுந்தவன் நெஞ்சில் காலை வைத்து ஓங்கி மிதித்தவள், "இப்போ இடுப்பை தொடுடா பார்ப்போம். இந்தக் கையி தானே தொட்டது." என்றவள் அவனது வலதுகையை வளைத்து பிடித்து முறுக்கத் துவங்கினாள்.

"சூப்பர்... பொண்ணுங்கன்னா இப்படித்தான் தைரியமா இருக்கணும்." என்று செல்வா விசிலடித்து அவளது செயலை பாராட்ட...

"வேணாம் சார். அது சரியான பஜாரி. நாம போகலாம் வாங்க..." முத்து அங்கிருந்து நழுவ முயல... செல்வாவோ அந்தப் பெண்ணை நோக்கி நடந்தான்.

செல்வாவின் குரலில் திரும்பி பார்த்த அந்தப் பெண்ணின் விழிகளில் திகைப்பு தோன்றியது. பின்பு அவள் விழியகல அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள். அவளது சிலை நிலையை அறிந்த அந்தப் பொறுக்கி எழுந்து தப்பித்து ஓட முயல... செல்வா அவனைத் தடுத்து பிடித்தவன் முத்துவை பார்த்து,

"இங்கே போலீஸ் ஸ்டேசன் இல்லையா?" என்று கேட்க...

"இருக்கு சார்..." முத்து கூறிய உடனே காவல்நிலையத்திற்கு அழைத்து விசயத்தைக் கூற... அடுத்தச் சில நிமிடங்களில் காவல்துறையினர் வந்து அந்தப் பொறுக்கியை அள்ளி கொண்டு போயினர். போவதற்கு முன் அந்தக் காவல்துறை அதிகாரி செல்வாவிடம் பேசிவிட்டு அவனிடம் கையைக் குலுக்கி கொண்டு சென்றார்.

இவ்வளவு கூத்து நடந்து முடிந்தும் அவள் தன்னுணர்வு பெறாது அதிர்ச்சியில் அப்படியே நின்றிருந்தாள். இப்போது செல்வாவின் கவனம் அவள் மீது திரும்பியது. அவள் தன்னையே வைத்த கண் வாங்காது பார்ப்பது கண்டு அவனது விழிகளில் சுவாரசியம் தோன்றியது.

"ஹேய் பொண்ணே..." என்று அவன் தனது வலக்கையை அவளது முகத்தின் நேரே ஆட்ட...

"ஏம்மா பொம்மி... என்னாச்சும்மா உனக்கு...?" முத்து பதற்றத்துடன் அருகில் இருந்த குளிர்பான கடையில் இருந்த சோடாவை எடுத்து உடைத்து அவளது முகத்தில் விசிறியடிக்க... அதில் சுயவுணர்வு பெற்று மலங்க மலங்க விழித்தவளை கண்டு,

"நல்லாயிருந்த புள்ளைக்கு என்னாச்சுன்னு தெரியலையே..." என்று முத்து புலம்ப...

"பொம்மி..." செல்வா ரசனையுடன் அவளது பெயரை மென்மையாய் உச்சரித்துப் பார்க்க... அந்தச் சத்தத்தில்

மீண்டும் அவனைத் திரும்பி பார்த்தவள் அடுத்த நொடி 'வீலென்ற' சத்தத்துடன் மயங்கி விழுந்தாள்.

"என்னங்கடா இது...? சோடா தெளிச்சா மயக்கம் தானே தெளியும். இந்தப் பொண்ணு என்ன திரும்ப மயங்கி கீழே விழுது." முத்து தனக்குள் பேசியபடி நிற்க...

செல்வா சுதாரித்துக் கொண்டு அவளைத் தனது கைகளில் தாங்கி கொண்டு,

"முத்து, க்விக் தண்ணிய தெளிங்க..." அவன் பதற்றத்துடன் கூற...

"தண்ணி என்ன சார்... சோடாவே தெளிக்கிறேன்." என்ற முத்து மீண்டும் சோடாவை அவளது முகத்தில் தெளிக்க... அவளது மயக்கம் மெல்ல தெளிந்தது.

"பொம்மி, இங்கே பாரும்மா..." முத்து பதட்டத்துடன் சொல்ல...

"சார்..." என்று முத்துவை பார்த்தபடி நிமிர்ந்தவள் தனது முகத்துக்கு நேரே செல்வாவை கண்டதும் திகைத்து விழித்தாள். பின்பு தான் செல்வாவின் மடியில் தலை வைத்து படுத்திருப்பதைக் கண்டு அவள் பதறியபடி எழுந்தமர்ந்தாள். மீண்டும் அவனைக் கண்டு அவள் மயக்கம் போடும் முன் முத்து முந்தி கொண்டார்.

"அம்மாடி, நீ நினைக்கிற மாதிரி சார் பேயோ, பூச்சாண்டியோ கிடையாது. நம்ம ஊருக்கு வந்திருக்கிற ஃபாரஸ்ட் ஆபிசர்." என்று முத்து கூற...

"இவுக ஆபிசருன்னா... அப்போ அவுக..." அவள் தனக்குள் கேள்வி கேட்டபடி யோசனையில் ஆழ்ந்தாள்.

"பொழுது சாய ஆரம்பிச்திருச்சும்மா... நீ ஊருக்கு கிளம்பு." என்று முத்து கூற...

"சரிங்க சார்." என்றவள் எழுந்து நின்றாள்.

"இந்த நிலைமையில் அவங்க பஸ்சில் போக வேண்டாம். நம்ம ஜீப்பில் வர சொல்லுங்க." செல்வா முத்துவிடம் கூற...

"பஸ்சுல போக மாட்டேன். பொடி நடையா நடந்து போயிருவேன்." என்றவளை கண்டு செல்வா,

"வாட்...?" என்று திகைத்தான்.

"ஆமா, அதுக்கு என்ன?" அவள் அவனைப் புரியாது பார்த்தாள்.

"பத்தி நிமிசம் வெயிட் பண்ண சொல்லுங்க முத்து. நாம சாமான்களை வாங்கிட்டு கிளம்பிரலாம்."

"அதுவும் சரி தான் பொம்மி. இந்த நேரத்தில் நடந்து போக வேண்டாம். எங்க கூடவே வா. உன் அப்பாரு கிட்ட நான் பேசிக்கிறேன்." என்றவர்,

"வீட்டுக்கு தேவையான சாமானுங்க வாங்கணும். கூட வந்து உதவி பண்ணு." என்று அவளிடம் கேட்டுக் கொள்ள... எந்தவித பிகுவும் பண்ணாது அவள் உடன் வந்தாள்.

அடுத்தப் பத்து நிமிடங்களில் எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு ஜீப்பில் ஏறி ஊரை நோக்கி பயணம் மேற்கொண்டனர். பின்னால் அமர்ந்திருந்த பொம்மியை செல்வாவின் விழிகள் தென்றலை போல் ரசனையுடன் வருடி சென்றது. எந்தப் பெண்ணிடத்திலும் தோன்றாத ஒரு உணர்வு அவனுக்கு இவளிடத்தில் தோன்றியது. இவளுக்காகத் தான் அவன் இத்தனை வருடங்களாய் காத்திருந்ததாய் எண்ணினான். இந்த எண்ணம் எல்லாம் ஏன்? என்கிற கேள்விக்கு அவனுக்கு விடை தெரியும் போது அவனால் உண்மையை ஏற்றுக் கொள்ள முடியுமோ? உண்மை எப்போதுமே கசக்க தானே செய்யும்.

அதை உணராதவளாய் பொம்மி வேடிக்கை பார்த்தபடி வந்தாள். அவளது மனதில் பல கேள்விகள் அடுக்கடுக்காய் எழுந்தது.

********************

தமிழ் நாவல்

வசந்தகுமார் பேருந்து நிலையத்திற்குச் சென்று விசாரிக்கத் துவங்கினார். அங்கு டீக்கடை வைத்திருந்த கோபாலிடம் தனது விசாரணையைத் துவங்கினார்.

"இன்னைக்குப் புதுசா யாராச்சும் ஊருக்குள்ள வந்தாங்களா?"

"அப்படியா சாமி... எனக்கு ஞாபகம் இல்லையே." அவன் தனது தலையைச் சொரிந்தான்.

"நான் பார்த்தேன் ஐயா." கடையில் வேலை பார்க்கும் பையன் கூறினான்.

"யாருன்னு உனக்குத் தெரியுமா?"

"புதுசா வந்திருக்கிற ஃபாரஸ்ட் ஆபிசர்ங்க... அவரோட அம்மாவோட வந்திருக்கிறாராம்."

"ஓ... வயசு என்ன இருக்கும்?"

"சின்ன வயசு தான். முப்பது வயசு இருக்கும் ஐயா." என்ற பையனை கண்டு அவர் யோசனையுடன் தாடையைத் தடவினார். பின்பு தனது அலைப்பேசியை எடுத்து தந்தைக்கு அழைத்து விவரத்தை கூறினார்.

"ஆபிசரை சந்திக்க நாளைக்கே ஏற்பாடு செய் வசந்தா..." என்று கூற...

"சரிப்பா..." என்று அழைப்பை துண்டித்த வசந்தகுமார் தந்தையின் சொற்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க முற்பட்டார்.

அந்த நேரம் ஜீப் ஊருக்குள் வந்தது. ஏதேச்சையாய் ஏறிட்ட வசந்தகுமார் செல்வாவை கண்டு அதிர்ந்து போனார். அவரது விழிகளை அவரால் நம்ப முடியவில்லை. கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு மீண்டும் செல்வாவை பார்த்தார்.

அவனே தான்... ஆனால் அவனில்லை...!!!

வீட்டிற்கு வந்து விசயத்தைக் கூறிய வசந்தகுமாரை கண்டு, "என்னடா சொல்ற?" என்று கந்தன் கோபமாய் உறுமினார்.

மருமகள் ராணி, பேத்தி ரம்யா இருவரும் பயத்துடன் இருவரையும் பார்த்திருந்தனர்.

"ஆமாப்பா... ராசு சொன்னது அத்தனையும் உண்மை. என் ரெண்டு கண்ணால் பார்த்தேன். அது அவனே தான். ஆனால் அவன் எப்படி?" வசந்தகுமார் குழம்பி போனார்.

மகனின் குழப்பம் தந்தைக்கு இல்லை போலும். அவர் தனது எண்ணத்தில் தெளிவாக இருந்தார். முடிந்து விட்டதாய் எண்ணிய உறவு முடியவில்லை என்பதை அவர் உணர்ந்து இருந்தார்.

'முடிக்க வேண்டும். முடித்துக் காட்டுகிறேன்.' என்று தனக்குள் சொல்லி கொண்டவர் மகனிடம்,

"நாளைக்கு அவனைச் சந்திக்க ஏற்பாடு பண்ணு." என்று கூற...

"சரிப்பா..." என்று வசந்தகுமார் கூற...

"ராணி, போய்ச் சாப்பாட்டை எடுத்து வையி..." என்றவர் உணவு கூடத்தை நோக்கி நகர... மற்ற மூவரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

************************

ஜீப் நேரே செல்வாவின் வீட்டிற்குச் சென்றது. செல்வா கேள்வியாக முத்துவை பார்த்தான்.

"சார், பொம்பள புள்ளைய நாம தனியா கூட்டிட்டு போய் விடறது சரியில்லை. அவுங்க இனத்தில் அதை அங்கீகரிக்கிறதும் இல்லை. மலைவாழ் மக்கள் நமக்கு நண்பர்கள் தான். நாம அவங்களைச் சீண்டாத வரைக்கும். அவங்களோட சமுதாயக் கட்டுப்பாடு, விதி முறைகளில் நாம தலையிட கூடாது. அது அவங்களுக்குப் பிடிக்கவும் பிடிக்காது. மத்தபடி அவங்க எல்லாம் ரொம்ப நல்ல மாதிரி."

தமிழ் நாவல்

முத்து சொல்வதும் அவனுக்குச் சரியாகவே தோன்றியது. சம்மதமாய்த் தலையசைத்தவன் இறங்கி வீட்டினுள் செல்ல முயன்றவன் பின்பு நின்று,

"பொம்மி... அதானே உன்னுடைய பெயர். அம் ஐ ரைட்...?" என்று கேட்க...

"ஆங்..." என்றவள் ஆமென்று தலையாட்டினாள்.

"உள்ளே வா..." என்றவன் வீட்டினுள் சென்றுவிட... முத்துவும், அவளும் மட்டும் தேங்கினர்.

"பயப்படாதே பொம்மி... ஐயாவோட அம்மா கூட இருக்காங்க. அது போக மைனா இங்கே தான் வேலை செய்யுது."

"அயித்த இங்கே தான் இருக்கா..." என்றவள் சந்தோசமாய்த் துள்ளி குதித்தபடி உள்ளே செல்ல... முத்து சிரித்தபடி பொருட்களை எடுத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

எல்லாப் பொருட்களையும் வைத்துவிட்டு முத்து கிளம்பிவிட்டான். அவனை அனுப்ப வெளியில் வந்த செல்வா அப்படியே வீட்டின் திண்ணையில் அமர்ந்து விட்டான். வீட்டினுள் பெண்கள் மூவரும் இரவு உணவினை தயாரித்துக் கொண்டிருந்தனர். அவனது அன்னை மட்டும் இருந்திருந்தால் அவன் உதவி புரிந்திருப்பான். உடன் இருவர் இருப்பதால் அவன் வெளியில் அமர்ந்து விட்டான். அதிலும் மைனா முன்னிலையில் பொம்மியை ஆர்வமாய்ப் பார்ப்பது அவனுக்குத் தவறாகத் தோன்றியது. ஆனாலும் அவனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் உதடுகளில் தோன்றிய புன்முறுவலுடன், சிறு வெட்கத்துடன் தனது தலையைக் கோதி கொண்டான்.

அவன் தலையைக் கோதி கொள்ளும் அழகினை அந்த அரூபம் சிறு திடுக்கிடலோடு பார்த்தது. பின்பு அது ரசனையோடு அவனைப் பார்த்திருந்தது. அந்தக் கணம் அதன் விழிகளில் கனிவு எட்டிப்பார்த்தது. செல்வாவின்

மனதில் ஓடும் எண்ணத்தைப் புரிந்து கொண்ட அரூபத்தின் இதழ்களில் புன்னகை தோன்றியது.

'உனக்குப் பொம்மி தான் என்பது நான் விதித்த விதி செல்லா... அதனால் தான் எந்தப் பெண்ணிடமும் மயங்காத நீ அவளிடம் மனம் மயங்கி நிற்கிறாய். நான் வாழாத வாழ்வை பொம்மி வாழ வேண்டும். அதுவும் உன்னுடன் மட்டுமே. வேறு யாரும் அவளுக்குப் புருசனா வர முடியாது. வரவும் விட மாட்டேன். அதே போல் தான் உனக்கும்...' என்று நினைத்த அரூபத்தினுள் பழைய நினைவுகள் எழுந்தது. அடுத்த நொடி அதன் விழிகள் பழிவெறியில் நெருப்பு துண்டங்களாய் ஜொலித்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 3

மைனாவுடன் இணைந்து தங்களது இருப்பிடத்திற்கு வந்த பொம்மி ரகசிய குரலில், "அயித்த, நீ போ... நான் வந்த சொவடு தெரியாம வீட்டுல போய் முடங்கறேன்." என்று சுற்றும் முற்றும் பார்த்தபடி கூறினாள். அவளைக் கண்டு மைனாவிற்குச் சிரிப்பு வந்தது.

"பார்த்து, பத்திரம் புள்ள..."

"இந்தா இருக்குற குடிசைக்குப் போகிறதுக்கு எதுக்குப் பத்திரம்? அதெல்லாம் நம்ம மாயம்மா எனக்குத் துணை இருப்பா. நான் பயப்படுறது உம் மதினியை நெனச்சு தான்." என்ற பொம்மி பதுங்கி பதுங்கி தனது இருப்பிடத்தை நோக்கி நடந்தாள்.

ஆங்காங்கே வீற்றியிருந்த இருபது குடிசைகளைக் கண்ட மைனாவிற்குப் பழைய ஞாபகத்தில் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது. நூறு குடும்பங்களுக்கு மேல் இருந்த அவர்களது இனம் இன்று இருபது குடும்பங்களாகக் குறைந்து விட்டது. பெரும்பான்மையானோர் வயிற்று பிழைப்புற்காக நகரத்திற்கு இடம் பெயர்ந்து விட்டனர். அவர்கள் இங்கு வருவதே அரிதாகி போயிற்று. இங்கு இருக்கும் இருபது குடும்பங்களையும் அவர்களது குல தெய்வமான மாயமான் அம்மன் (அதாவது மானின் முக அமைப்பும், பெண்ணின் உடல் அமைப்பும் கொண்ட உருவம்) காப்பாற்றி வருகிறாள். மாயமான் என்ற சொல் நாட்கள் செல்ல செல்ல 'மாயம்மா' என்று மருவி விட்டது.

பல வருடங்களாகப் போராட்ட வாழ்க்கை வாழும் அவர்களை அரணாய் பாதுகாத்து நிற்பது மாயமான் அம்மன் தான். இந்த வனத்தின் இயற்கையை, கட்டுகோப்பை சிதைக்க முயன்றவர்களைச் சிறிதும் இரக்கமின்றி அவர்களது உயிர்களைக் காவு வாங்கி இருக்கிறது. அதனால் தான் என்னவோ மற்ற காடுகளில் நடக்கும் சட்ட விரோத செயல்கள் எதுவும் இங்கு நடப்பது

கிடையாது. அப்படி நடக்கவும் விட மாட்டாள் மாயமான் அம்மன்.

"அம்மா தாயே, நீ தான் எங்களுக்குத் துணை இருக்கோணும்." என்று கோவில் இருந்த பக்கம் நோக்கி கையெடுத்து கும்பிட்டு வேண்டி கொண்டவள் தனது குடிசையை நோக்கி நடந்தாள்.

அவள் அங்குச் செல்லும் போது அவளது கணவன் ராசைய்யா கள்ளை குடித்து விட்டு மல்லாந்து கிடந்தான். ஒரு காலத்தில் எப்படி இருந்த மனிதன்! இன்று இப்படித் தன்னிலை மறந்து கிடப்பது கண்டு அவளுக்கு வருத்தமாக இருந்தது. அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் வருத்தம் நீங்கி விடுமா? வெளியில் இருந்த பானையில் இருந்த நீரை கொண்டு முகத்தைக் கழுவியவள் வீட்டிற்குள் சென்று அடுப்பை மூட்டி அதில் பானையை வைத்து நீரை ஊற்றி உலையைக் கொதிக்க வைத்தாள். உலை கொதிப்பதற்குள் அவளது நினைவுகள் வேறு எங்கோ பயணித்தது.

"செல்லி... செல்லி..." என்று உறக்கத்தில் புலம்பிய கணவனது குரலில் தன் நினைவு கலைந்து திரும்பி பார்த்தவள் முகத்தில் வேதனை படர்ந்தது.

மைனா என்றுமே தனக்காக வருத்தப்பட்டது கிடையாது. அவளது கவலை எல்லாம் கணவனை நினைத்து மட்டுமே. அவன் அவனது துயரத்தில் இருந்து மீண்டு வந்தால் போதும். அதுவே அவளுக்குப் போதுமானது. அவள் வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. அவளது சிந்தனை அது பாட்டிற்கு ஓடி கொண்டிருக்க... அவளது கைகள் கஞ்சி காய்ச்சி முடித்திருந்தது. கஞ்சியை மண் கலயத்தில் ஊற்றி ஆற்றி எடுத்து வந்து ராசைய்யா அருகில் அமர்ந்து அவனை எழுப்பினாள்.

"மாமோய் எந்திருய்யா... எந்திருச்சு ஒரு வாய் கஞ்சி தண்ணி குடிச்சி போட்டு படு." என்று அவள் அவனை எழுப்ப... அவனோ முழுப் போதையில் அசைவின்றி மல்லாந்து கிடந்தான். வேறுவழியின்றி அவள் அவனது

தலையைத் தூக்கி தனது மடியில் வைத்து அவனது வாயில் கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகட்டினாள். அவனுக்கு நல்ல பசி போலும்.... அவன் மடமடவென்று கஞ்சியைக் குடித்து முடித்தான். அதைக் கண்டு அவளது விழிகளில் கண்ணீர் வழிந்தது.

"மைனா..." என்ற குரலில் தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தவள் அங்குத் தனது சகோதரனை கண்டதும்,

"அண்ணோய்..." என்றபடி கணவனைக் கீழே படுக்க வைத்துவிட்டு எழ முயல...

"இருக்கட்டும் தாயி..." என்றபடி வேங்கையன் அங்கிருந்த கல் மீது அமர்ந்தான்.

"என்ன விசயம் அண்ணோய்...?" என்ற தங்கையைப் பார்த்த வேங்கையனின் பார்வை இப்போது ராசைய்யா மீது திரும்பியது.

"தப்பு பண்ணிட்டேன்னோன்னு மனசு கெடந்து அடிச்சுக்குது தாயி." என்று வேதனையுடன் கூற...

"அப்படிச் சொல்லாதே அண்ணோய். நீ எந்தத் தப்பும் பண்ணலை. விதி தான் தப்பு பண்ணிருச்சு." தங்கையின் வார்த்தையில் வேங்கையனிடம் இருந்து பெருமூச்சு எழுந்தது.

அப்போது, "ஐயோ, அம்மா... அடிக்காதே." என்று பொம்மியின் அலறல் அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது.

"இந்தப் புள்ளைக்கு என்னாச்சுன்னு தெரியலையே." வேங்கையன் மகளின் குரலில் கலக்கத்துடன் எழுந்தான்.

"எப்பவும் போல மதினி கிட்ட மாத்து வாங்குறா உம் மவ..." என்று கூறி சிரித்தாள் மைனா.

"வயசு புள்ளைய அடிக்கிறது நல்லாவா இருக்கு. நான் போய் என்னன்னு கேட்கிறேன்." என்று வீரமாய்க் கூறிய

அண்ணனை கண்டு களுக்கென்று சிரித்தாள் மைனா.

"என்ன தாயி... எம் பொழப்பு உனக்குச் சிரிப்பா இருக்காக்கும்." என்றபடி வேங்கையன் தனது மீசையை நீவி விட்டுக் கொள்ள...

"நீயாவது மதினியை எதுத்து பேசுறதாவது..." என்று மீண்டும் மைனா கேலி செய்து சிரிக்கத் துவங்க...

"ஹி ஹி... அது என்னவோ வாஸ்தவம் தான் தாயி... ஊருக்கே பஞ்சாயத்து பண்ற நான், அந்தப் புள்ளைய பார்த்தா மட்டும் பேச்சு வர மாட்டேங்குது. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்குது." என்று அசடு வழிந்தான் வேங்கையன்.

வயதான போதும் தனது மனைவி மீதான காதல் குறையாது இருக்கும் சகோதரனை கண்டு அவளது விழிகள் பனித்தது. அவளது அண்ணி மாயி அவளது தோழியும் கூட... இருவரும் ஒன்றாய் வளர்ந்தவர்கள். அதன் பிறகு மாயி அவளுக்கு அண்ணியாக வந்த பின்பு அவர்களது நட்பு இன்னமும் இறுகி போனது.

"தாயி, உம் ஜோட்டுக்காரி உம் பேச்சை தான் கேட்பா. வா, வந்து நீயே நியாயத்த கேளு." மனைவியின் அடியில் இருந்து மகளைக் காப்பாற்ற எண்ணிய வேங்கையன் தங்கையின் உதவியை நாடினான்.

"பொம்மி, என்ன அக்குறும்பு செஞ்சாளோ?" என்றபடி அவள் அண்ணனுடன் இணைந்து நடந்தாள்.

அங்குச் சென்ற பார்த்த போது மாயி கையில் ஈர்க்கங்குச்சி விளக்குமாற்றுடன் பத்ரகாளியாய் மகளை முறைத்து கொண்டிருந்தாள். மாயி பின்னால் வந்து நின்று விளக்கமாற்றைப் பிடுங்கிய மைனா,

"மதினி, இப்போ எதுக்குப் பொட்ட புள்ளைய போட்டு இப்படி அடிக்கிற?" என்று அண்ணியைக் கடிந்தாள்.

"நீ சொல்றியே பொட்ட புள்ள... அதுக்காண்டி தான் நான் அவளை அடிக்கேன். பொட்ட புள்ள ஊரு மேஞ்சிட்டு பொழுது இருட்டியதுக்குப் பொறவு வீட்டுக்கு வாரது நல்லாவா இருக்கு. இவளை என்ன செய்ய?" மாயி மகளை அடிக்க முற்பட... மனைவியைத் தடுத்த வேங்கையன்,

"சும்மா பொசுக்கு பொசுக்குன்னு புள்ளைய அடிக்காதே தாயி." என்று இறைஞ்சினான்.

"எல்லாம் உன்னைய சொல்லணும்ய்யா... பொட்ட புள்ளைய காலா காலத்துல கட்டி கொடுத்திருந்தா இப்படி நான் பரிதவிச்சிக்கிட்டு இருக்க வேண்டியது இருக்குமா. எல்லாம் உன்னால் தான்ய்யா... தவமா தவமிருந்து பெத்த மகள்ன்னு நீ அவளை இப்படிக் கொண்டாடிட்டு இருந்தா அவ எப்படிக் கண்ணாலம் கட்டிக்கிட்டு போவா?" என்று மாயி மூக்கை உறிஞ்சினாள்.

"இப்போ கண்ணாலத்துக்கு என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் செல்லட்டும்."

"இவ ஜோட்டு புள்ளைங்க எல்லாம் மூணு, நாலு பெத்துக்கிட்டு திரியுதுங்க. இவ மட்டும்..." மீண்டும் மாயி மூக்கை உறிஞ்ச...

"இருந்துட்டு போவட்டும். எம் மவளா கண்ணாலம் வேணும்ன்னு சொல்ற வரை அவ நம்ம கூட இருந்துட்டு போவட்டும்." வேங்கையன் தனது குரலில் சற்று கடுமையை ஏற்றிக் கூறினான். அதில் மாயி சற்று அடங்கிப் போனாள்.

"பொம்மி, இங்கே வா..." தந்தை அழைத்ததும் அவர் அருகில் பதுமை போல் நடந்து வந்து பதவிசாக நின்றாள் பொம்மி...

"பாரு மைனா... இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கிற மாதிரி நிற்கிறத."

"விடு மதினி... பொம்மி என் கூடத் தான் ஒத்தாசைக்கு இருந்தாள்."

"உன் கூடவா? ஆமா, நீ எங்கே போன..."

"ஆபிசரு வர்றாருன்னு முத்து சார் வேலைக்கு ஆள் கேட்டாரு. நான் தான் சும்மா இருக்கேன்னு சரின்னு சொல்லிட்டேன்."

"நீ எதுக்குத் தாயி வேலைக்குப் போயிக்கிட்டு...?" வேங்கையன் வருத்தம் தெரிவித்தான்.

"சும்மா இருந்தா மனசு கண்டத நெனச்சு சங்கடப்படுது அண்ணோய். அதான்..." தங்கையின் மன ரணம் தெரிந்ததால் வேங்கையன் அமைதியாகி விட... மாயி ஆறுதலாகத் தோழியை அணைத்து கொண்டாள்.

"கேட்டுக்கோ அம்மே... நான் அயித்த கூடத் தான் இருந்தேன்." பொம்மி அன்னையிடம் கூற...

"நீ சந்தையில பண்ணுன ரவுசு எல்லாம் எனக்குத் தெரியும்டி. சும்மா நடிக்காதே." மாயி மீண்டும் எகிற துவங்க...

"தாயி, அம்மையை எதித்துப் பேசாதே." வேங்கையன் சத்தம் போடவும் பொம்மி அமைதியாகக் குடிசைக்குள் நுழைந்து கொண்டாள்.

வேங்கையன் வேப்ப மரத்தின் கீழ் போடப்பட்டு இருந்த கட்டிலில் படுத்துக் கொள்ள... பெண்கள் இருவரும் குடிசை முன் அமர்ந்தனர்.

"மாயி..."

"சொல்லு மைனா..."

"இன்னைக்கு ஐயாவை பார்த்தேன்."

"எந்த ஐயா...?" என்று மாயி விழிகள் இடுங்க தோழியைப் பார்த்தாள்.

"செல்லியோட ஐயா..." மைனா கூறியதும் மாயி திகைப்புடன் அவளைப் பார்த்தாள்.

"அவுக எப்படி?" மாயிக்குப் பயத்தில் வார்த்தைகள் திக்கி திணறியது.

"அதான் மதினி எனக்கும் குழப்பமா இருக்கு." மைனா கூறியதை கேட்டு சிறிது நேரம் யோசித்த மாயி பின்பு,

"இப்படியும் இருக்குமோ?" என்றபடி தான் நினைத்ததைச் சொல்ல துவங்கினாள். அவள் கூறியதை முழுவதும் கேட்ட மைனாவிற்கு நெஞ்சடைப்பது போலிருந்தது.

"எனக்குப் பயமாயிருக்கு மதினி. அண்ணோ, ராசைய்யாவை நினைச்சா இன்னமும் பயமாயிருக்கு. ஐயாவை ஏதும் செஞ்சிடுவாகளா? என்ன இருந்தாலும் ஐயா நம்ம செல்லியோட..." என்று இழுத்த மைனாவை கண்டு,

"அதேன் புள்ள எனக்கும் பயமாயிருக்கு." என்று விழிகளில் பயத்தைத் தேக்கி வைத்தபடி கேட்ட தோழியைக் கண்டு மைனாவிற்கும் பயம் பிடித்துக் கொண்டது.

குடிசைக்குள் இருந்த பொம்மி அங்கிருந்த அன்னையின் உடைமைகளைச் சத்தம் இல்லாது உருட்ட துவங்கினாள். அன்னையின் உடையின் அடியில் இருந்த அந்தப் புடவையை எடுத்தாள். மஞ்சள் நிறத்தில் சிவப்பு கரையிட்ட கூரை புடவை அது... அவர்கள் இனத்தில் திருமணத்தின் போது உடுத்தும் புடவை இது. பொம்மி வேகமாய் அந்தப் புடவையை எடுத்து உதறினாள். அவள் உதறிய வேகத்தில் அதனுள் இருந்த அந்தப் புகைப்படம் கீழே விழுந்தது. அவசரமாக அதை எடுத்து பார்த்தவளின் விழிகள் புகைப்படத்தில் நிலைக்குத்தி நின்றது. அதில் செல்வா மணக்கோலத்தில் அழகாய் சிரித்துக் கொண்டிருந்தான். அருகில் செல்லி மணப்பெண் கோலத்தில் வெட்கத்துடன் நின்றிருந்தாள்.

"பொம்மி..." அன்னையின் அழைப்பில் புகைப்படத்தைப் பழையபடி புடவைக்குள் வைத்து மூடியவள் அதை இருந்த இடத்தில் அப்படியே வைத்து விட்டு வெளியில் வந்தாள்.

"கருவாட்டுக் குழம்பு வச்சிருக்கேன். அயித்தைக்கும், உனக்கும் சோத்த போட்டுக் கொண்டு வா." என்று மாயி மகளை ஏவினாள்.

"இப்பத்தான் கஞ்சி காய்ச்சினேன் மதினி."

"கஞ்சி குடிச்சு வயிறு நிறையுமா? சோறு உண்டுட்டு போ மைனா."

"வயிறு நெறையுதோ இல்லையோ மனசு நெறைஞ்சு போகும் மதினி. ஏன்னா ராசைய்யா குடிச்ச மீதி கஞ்சி அது... அவுக உண்கிறது எனக்குப் போதும்." என்ற மைனா எழுந்து தனது குடிசையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ராசைய்யா மீதான தோழியின் காதலை எண்ணி எப்போதும் போல் வியப்பாய் பார்த்தாள் மாயி.

"மாமன்னா அயித்தைக்கு உசிரு... என்னம்மா?" என்று கேட்டபடி அன்னை அருகில் வந்து அமர்ந்தாள் பொம்மி.

"ஆமா..." என்று தலையசைத்தாள் மாயி.

"ஆனா மாமன் தான் அயித்தைய கண்டுக்கிறதே இல்லை." மகள் கூறியதும் மாயிக்கு பழைய நினைவுகள் எட்டிப்பார்த்ததோ என்னவோ!

"வெரசா சோத்தை உண்டுட்டு உறங்குற வழியைப் பாரு..." என்றவள் அங்கேயே வெறும் தரையில் கையைத் தலைக்கு அணைவாக வைத்துக் கொண்டு படுத்து விட்டாள்.

கருவாட்டுக் குழம்பு ருசி கூட உணராது ஏதோ யோசனையுடன் உண்டு கொண்டிருந்தாள் பொம்மி.

******************************

மறுநாள் காலையில் செல்வா தனது வேலைக்குக் கிளம்பி கொண்டிருந்தான். சுபத்ரா சமையல் வேலையில் ஈடுபட்டு இருக்க... மைனா அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

"ம்மா, சாப்பாடு ரெடியா?" உணவு மேசையில் அமர்ந்தபடி செல்வா குரல் கொடுக்க...

"இதோ வந்துட்டேன்டா..." என்றவர் ஒரு கையில் பூரி அடங்கிய பாத்திரமும், மறுகையில் கிழங்கு கறி அடங்கிய பாத்திரத்துடனும் அவன் முன் ஆஜரானார்.

"நீங்க ஏன் எல்லா வேலையும் இழுத்து போட்டுட்டு செய்றீங்க?"

"நான் எல்லா வேலையும் செய்யலை. சமைச்சது மட்டும் தான் நான்... அரைச்சது, வெட்டினது எல்லாம் மைனா." என்றவர் மகனுக்குப் பரிமாற ஆரம்பித்தார். செல்வா அமைதியாக உண்ண ஆரம்பித்தான்.

அப்போது அவனது தம்பி மணிமாறனிடம் இருந்து அழைப்பு வந்தது. அலைப்பேசியை எடுத்து உயிர்ப்பித்துத் தம்பியிடம் நலம் விசாரித்தவன் பின்பு அன்னையிடம் கொடுத்தான்.

"மணி நல்லா இருக்கியாடா? சித்து எப்படி இருக்கிறாள்?"

"நான் நல்லா தான் இருக்கேன். நீங்களே உங்க மருமகள் கிட்ட பேசுங்க." மணிமாறன் மனைவி சித்ராவிடம் அலைப்பேசியைக் கொடுத்தான்.

"சித்து எப்படியிருக்க?" சுபத்ரா கேட்டதும் தான் தாமதம் அந்தப் புறம் சித்ரா ஓவென்று அழ துவங்கினாள்.

"சித்து, இப்போ எதுக்கு அழுற? சொல்லு..." அவர் மருமகளை அதட்ட... அவரது அதட்டல் சற்று வேலை செய்தது.

"இந்தத் தடவையும் நான் ஏமாந்துட்டேன்." என்று தேம்பியவளை கண்டு அவருக்குப் பாவமாக இருந்தது. குழந்தைக்கான மருமகளது ஏக்கம் அவருக்குப் புரிவதாய் இருந்தது.

"உங்க ரெண்டு பேருக்கும் வயசு இருக்கு. கவலைப்படாதேம்மா. எனக்கும் லேட் இஷ்யூ தான்." அவர்

மருமகளைச் சமாதானப்படுத்தி மேலும் அறிவுரை கூறிவிட்டு அழைப்பை துண்டித்தார்.

விசயம் என்னவென்று புரிந்து கொண்ட செல்வா ஒன்றும் பேசாமல் உண்டு கொண்டிருந்தான். அவன் உண்டு முடிக்கும் வரை சுபத்ரா ஏதோ யோசனையில் இருந்தார்.

"அம்மா, மதிய சாப்பாட்டுக்கு வந்திருவேன்." மகனது குரலில் நிகழ்காலத்திற்கு வந்தவர் சரியென்று தலையசைத்தார்.

மகன் சென்றதும் சமையலறைக்கு வந்த சுபத்ரா மைனாவிடம், "கொஞ்ச வருசத்துக்கு முந்தி இங்கே ஒரு பெரியவர் மருத்துவம் பார்த்து கொண்டிருந்தாரே... இப்போ அவர் இருக்கிறாரா?" என்று கேட்க...

அதைக் கேட்ட மைனாவின் முகம் ஒரு மாதிரியாக மாறிவிட்டது. முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள்,

"அவர் இறந்து ரொம்ப வருசமாச்சும்மா..." என்க...

"அடப்பாவமே... நல்ல மனுசன்..." என்றவர் அதைப் பற்றி மறந்தவராய் தனது வேலையைப் பார்க்கலானார். மைனா மட்டும் அந்த நினைவுகளில் தேங்கி போனாள்.

முத்து ஜீப்பை ஓட்ட... செல்வா அவன் அருகில் அமர்ந்து வந்தான். போகும் வழி எல்லாம் செழித்து வளர்ந்திருந்த மரங்களைப் பார்த்தபடி வந்தவன்,

"இங்கே மர கடத்தல் எதுவும் இருக்கிறதா முத்து?" என்று கேட்க...

"என்ன சார், இப்படிக் கேட்டுட்டீங்க? நான் பொறந்து வளர்ந்தது எல்லாம் இங்கே தான். இதுவரைக்கும் இது மாதிரியான சம்பவம் நடந்ததே இல்லை."

முத்து கூறியதை கேட்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அது எப்படி முத்து? ஆச்சரியமா இருக்கு... நம்ம ஊர் அரசியலவாதிங்க, தொழிலதிபர்கள் எல்லாம் எப்படி இன்னமும் இந்தக் காட்டை விட்டு வச்சிருக்காங்க?" செல்வா வியப்புடன் கேட்டான்.

"அதெப்படி விட்டு வைப்பாங்க... இயற்கை வளம் கொழிக்கிற இந்தப் பூமியை இப்படி அனாமத்தா விட மனசு வருமா? அவங்களும் விதம் விதமா முயற்சி செய்து பார்த்தாங்க. ஆனா ஒண்ணும் பண்ண முடியலை."

"ஈஸிட்...?"

"ஆமா சார்... இங்கே மரங்கள் மட்டுமல்ல, ஆற்றோரமாய் நவரத்தினங்கள் கிடைக்கிறதா கூடச் சொல்றாங்க... அப்புறம் தீராத நோய்களைத் தீர்க்கும் அரிய வகை மூலிகை மருந்துகள் கிடைக்கும்ன்னு சொல்றாங்க."

"சொல்றாங்கன்னா...? அப்போ இது வெறும் ஊகம் தானா...?"

"இல்லை சார்... ஒரு காலத்தில் ஊருக்கே மருத்துவம் பார்த்தவங்க இந்த மலைவாழ் மக்கள். இப்போ அவங்களுக்கு மருத்துவம் பார்க்க ஊருக்குள்ள வந்துட்டு போறாங்க."

"ஏன்?"

"பல வருசத்துக்கு முன்னால ஏற்பட்ட காட்டுத்தீயில் மருத்துவக் குறிப்பு அடங்கிய ஓலைச்சுவடிகள் எரிஞ்சிட்டதா சொல்றாங்க. இப்போ ஓலைச்சுவடியும் இல்லை, மருத்துவம் பார்த்தவங்களும் உயிரோடு இல்லை."

"ஓ..."

"நம்ம ஊரு பெரிய தலை கந்தன் ஐயாவுக்குக் கூட இங்கே கிடைக்கும் மூலிகையை வச்சு மருந்து கம்பெனி நடத்தணும்ன்னு ஆசை இருந்தது. காட்டுத்தீ பரவிய சம்பவத்துக்குப் பிறகு அவரும் அதைக் கைவிட்டுட்டாரு.

அது மட்டும் இல்லை சார்... இந்தக் காட்டில் மரம் வெட்ட வர்றவங்க எல்லாம் செத்து போயிடறாங்க."

"என்னது?" செல்வா திகைத்தான்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 4

"ஆமா சார்... எல்லாம் மாயம்மா மகிமை. சட்டம் செய்ய வேண்டிய வேலையை மாயம்மா செய்றாங்க."

"மாயம்மாவா...? யாரது...?"

"மாயம்மாவோட உண்மையான பெயர் மாயமான் அம்மன்... மான் முகத்துடன் இந்த அம்மன் காட்சி அளிப்பாங்க. மலைவாழ் மக்களோட குல தெய்வம். அவங்களுக்கு மட்டும் இல்லை. நமக்கும்... ஏன்னா அவங்க தான் இந்தக் காட்டோட இயற்கை வளத்தை அழிக்காம பாதுகாக்கிறாங்க."

"இதெல்லாம் நம்பும்படியா இல்லையே முத்து." அவன் யோசனையுடன் கூறினான்.

"நீங்க புதுசுங்கிறதால அப்படிச் சொல்றீங்க... போகப் போக உங்களுக்கே மாயம்மாவோட மகிமை புரியும்."

"கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது. நம்மை ஏதோ ஒரு சக்தி நம்மளை வழி நடத்தது. அது ஒரு நல்ல சக்தி. அதில் எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆனா நீங்க சொல்ற கட்டுக்கதையை நம்ப நான் தயாரா இல்லை."

"நீங்க நம்புறதுக்காக நான் இதைச் சொல்லலை. இந்தக் காட்டில் சமூக விரோத செயல்கள் செய்வதற்காக உள்ளே வந்தவங்க எல்லாம் மான் கொம்பால் முட்டி கொல்லப்பட்டவங்க தான். அவங்க வயிற்றில் மானின் கொம்பு முட்டி சேதப்படுத்திற்கான காயங்கள் இருக்கும். இந்தக் காட்டில் புலி, சிங்கம், காட்டெருமை, யானை, ஓநாய்ன்னு எத்தனையோ விலங்குகள் இருக்கு. ஆனா எல்லோரும் சொல்லி வைத்தார் போன்று மான் கொம்பு முட்டி சாகிறாங்கன்னா...?" முத்து கேள்வியாய் நிறுத்திவிட்டு செல்வாவை பார்த்தான்.

"அப்படின்னா இதை எல்லாம் செய்றது யாரோ ஒரு மனுசன்னு அர்த்தம்." செல்வா உறுதியாய் கூற...

"அப்படி இல்லை சார்..." முத்து ஏதோ சொல்ல வர...

"இது மனுசன் பண்ற சதி முத்து. இதனால் நல்லதே நடந்தாலும் தனி மனிதன் சட்டத்தைக் கையில் எடுப்பதை என்னால் அனுமதிக்க முடியாது." என்று செல்வா அழுத்தம் திருத்தமாய்க் கூறினான்.

'ம்ஹூம், அனுபவிக்கும் போது உங்களுக்கே புரியும்.' என்று மனதில் சொல்லி கொண்ட முத்து வேறு எதுவும் பேசவில்லை.

அதற்குள் அலுவலகம் வந்துவிடச் செல்வா ஜீப்பில் இருந்து இறங்கி அதனுள் நுழைந்தான். அலுவலகம் என்றால் பத்து, இருபது பேர் வேலை செய்யும் பெரிய அலுவலகம் இல்லை. அவனுக்குக் கீழ் முத்துவோடு சேர்த்து மூன்று பேர் இருந்தனர். சிறிய அறை... அதில் அத்தியாவசிய பொருட்களுடன், முதலுதவி பெட்டி ஒன்று இருந்தது.

செல்வா அங்கிருந்தவர்களிடம் பேசி கொண்டிருந்த போது கந்தன் தனது மகன் வசந்தகுமாருடன் அவனைக் காண வந்தார். அவரைக் கண்டதும் செல்வா புரியாத ஒரு பார்வை பார்க்க... கந்தனோ அவனைக் கண்டு அதிர்ந்து போனார். அவர் அதிர்ந்ததில் அவரது நடை சிறிது தடுமாறியது. வசந்தகுமார் சொன்ன போது கூட அவர் நம்பவில்லை. ஆனால் இப்போது நேரில் கண்டவரால் அதை நம்பாது இருக்க முடியவில்லை.

"சார், இவர் தான் இந்த ஊரோட பெரிய தலை... நான் சொன்னேன்ல கந்தன் ஐயா." முத்து செல்வாவின் காதை கடித்தான்.

"வாங்க..." செல்வா மரியாதை நிமித்தம் தனது கைகளைக் கூப்பினான்.

அதைக் கண்டவரது விழிகள் யோசனையுடன் இடுங்கியது. பின்பு அவை அனலை கக்கியது. 'என் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரி காம்பே' என்று அவர் மனதிற்குள்

ஆத்திரமாய் நினைத்தார். ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அமைதியாகப் புன்னகைத்தார்.

"எங்க ஊருக்கு தம்பி ஆபிசரா வந்தது ரொம்பச் சந்தோசம்." என்று பதிலுக்குக் கை கூப்பியவர் மகனிடம் இருந்த மலர் மாலையை வாங்கி அவனுக்கு அணிவிக்க முயன்றார்.

"அரசாங்க வேலையில் இருப்பவனுக்கு இதெல்லாம் தேவையில்லை. அரசாங்கம் கொடுக்கிற சம்பளத்துக்கு நான் நேர்மையா வேலை செய்றேன். இந்த மாலை மரியாதை எல்லாம் எனக்குத் தேவை இல்லை." என்று கூற...

"ரொம்பச் சந்தோசம்..." என்ற கந்தன்,

"தம்பிக்கு சொந்த ஊர் எது? அம்மா, அப்பா என்ன செய்றாங்க?" என்று மெல்ல கேள்விக்கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தார்.

செல்வா தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பிக்க... தன்னுடைய எண்ணத்திற்கும், அவன் கூறியதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாது இருப்பதைக் கண்டு அவருள் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் உருவம் ஒன்றாக இருக்கிறதே...! இது எப்படிச் சாத்தியம்!!! எங்குத் தவறு நிகழ்ந்தது? அவர் தனக்குள் யோசிக்க ஆரம்பித்தார்.

"அப்புறம் சார், எனக்கு ட்யூட்டிக்கு நேரமாச்சு..." என்று அவன் கூறவும் தான் அவர் விடைபெற்று கிளம்பி சென்றார்.

இதை எல்லாம் ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது அந்த அரூபம். அதற்குக் கந்தனை வீழ்த்த ஒரு நொடியாகாது. ஆனால் அதன் இலக்கு வேறு. அந்த இலக்கை வைத்துக் கந்தனை மடக்கி பிடிக்கத்தான் அது இத்தனை வருடங்களாய்க் காத்திருக்கிறது.

மதிய உணவிற்கு வீடு திரும்பிய செல்வா அங்கிருந்த மாமரத்தில் சலசலப்பு கேட்கவும் நிமிர்ந்து பார்த்தான்.

அங்குப் பொம்மி மரத்தின் மீது ஏறி மாங்காய்களைப் பறித்துக் கொண்டிருந்தாள்.

"ஏய், கீழே இறங்கு..." அவன் அவளைக் கண்டு அதட்டினான்.

"எதுக்குச் சாமி...?" என்று அவள் பயத்துடன் கேட்க...

"திருட்டு மாங்காயை பறிக்கிற உனக்குத் தண்டனை கொடுக்கத்தான்." என்றவனைக் கண்டு மேலும் பயந்தவள்,

"அப்படி எல்லாம் செஞ்சிராதீங்க சாமி." என்று வேண்டி கேட்டுக் கொள்ள...

செல்வா அவளை யோசனையுடன் ஏறிட்டான். அவளது வார்த்தைக்கும், அவளது செயலுக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை. ஏனெனில் அவளது வாய் அவனிடம் பணிவுடன் பேசி கொண்டிருந்தது. ஆனால் அவளது கை அதற்கு நேர்மாறாய் மாங்காய்களைப் பறித்துக் கொண்டிருந்தது.

"என்ன கொழுப்பா? முதல்ல கீழே இறங்குடி..." என்று அவன் கோபமாய்க் கத்த...

"ஐயோ சாமி, ஒண்ணும் செஞ்சிராதீங்க..." என்று கெஞ்சும் குரலில் இறைஞ்சியவளின் விழிகள் அவனைக் கண்டு கேலியாய்ச் சிரித்தது.

"அடிங்க... எப்படியும் கீழே இறங்கி தானே ஆகணும். அப்போ உன்னைக் கவனிச்சிக்கிறேன்." என்றவன் இரு கைகளையும் கட்டி கொண்டு அவளை அமர்த்தலாகப் பார்த்தான்.

"இப்போ என்ன செய்றது?" என்று பயப்படுவது போல் யோசித்தவளை கண்டு,

"வேறுவழியே இல்லை... கீழே குதி." என்று அவன் கூற...

"வேறவழியே இல்லையா?" அவள் பரிதாபமாகக் கேட்க... அதைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்த போதும்

தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டவன் 'இல்லை' என்பது போல் மறுப்பாய்த் தலையாட்டினான்.

"அது உங்களுக்குச் சாமி... எனக்கு ஆயிரம் வழி இருக்கு..." என்றவள் தான் இருந்த மரத்தில் இருந்து அடுத்த மரத்திற்குக் கிளையைப் பிடித்துக் கொண்டு தாவினாள்.

"ஆங்..." என்று செல்வா அதிர்ச்சியில் சிலையாய் நின்றிருந்தான்.

"பொம்மி, மாங்காய் எல்லாம் பறிச்சிட்டியா?" என்று கேட்டபடி வந்த சுபத்ரா அங்கு மகனை கண்டதும்,

"நீ எப்போடா வந்த? உள்ளே வராம இங்கே நின்னுக்கிட்டு என்ன பண்ற...?" என்று கேட்க...

"ஆங்... என்னம்மா கேட்டீங்க?" என்று அவன் தூக்கித்தில் இருந்து விழிப்பவன் போல் விழித்தான்.

"சரியா போச்சு போ... உள்ளே போடா..." என்றவர் மேலே மரத்தை பார்த்தபடி,

"இந்தப் பொண்ணு எங்கே போச்சுன்னு தெரியலையே?" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொள்ள...

"ம்மா, அது பொண்ணா...? குரங்கும்மா... மரத்துக்கு மரம் தாவுது." செல்வா சற்று எரிச்சலுடன் கூற...

"அதுக்கு நீயேன்டா கொலை காண்டாகிற? இந்தக் காலத்துல பொண்ணுங்க இந்த மாதிரி தற்காப்பு கலை கத்து வச்சுக்கிறது நல்லதுடா."

"ஏது? மரத்துக்கு மரம் தாவுறது தற்காப்பு கலையா?"

"இல்லையா பின்னே? எவனாவது அவள் கிட்ட வம்பு பண்ணினால்... அவள் பயந்து போய் ஓடாம மரத்துக்கு மரம் தாவினால் வம்பு பண்ணினவனால் அவளைப் பின்தொடர முடியுமா?"

"பொண்ண இருந்தா தானே பின்தொடர முடியும். இது தான் வானரமாச்சே..." அவன் முணுமுணுக்க...

"அதே தான்டா... இப்போ நீயே சொல்லு இது தற்காப்பு கலை இல்லாம வேறு என்ன?" என்று மடக்கி கேள்வி கேட்ட அன்னையை ஒரு தினுசாய் பார்த்தவன்,

"தற்காப்பு கலையே தான் தாயே... ஒப்புக்கிறேன்." இருகரம் கூப்பி ஒப்புக் கொண்டு அவன் உள்ளே சென்றுவிட... அவன் சென்று விட்டதை அறிந்து பொம்மி மரத்தின் மேலிருந்து கீழே குதித்தாள்.

"அடிப்பாவி... சொல்லிட்டு குதிக்க மாட்டியா?" என்று அவளைக் கடிந்த சுபத்ரா அவளது மடியில் முடிந்திருந்த மாங்காய்களை எடுத்துக் கொண்டு,

"ஊறுகாய் போட மாங்காய் கேட்டா... நீ வத்தல் போட கொண்டு வந்து கொடுப்ப போலிருக்கு." என்று புலம்பியபடி உள்ளே செல்ல... அவரைப் பின்தொடர்ந்து பொம்மியும் உள்ளே வந்தாள்.

சுபத்ரா சமையலறை நோக்கி செல்ல... பொம்மி மறுபக்கமாய் இழுக்கப்பட்டாள். அவள் கத்த முனைவதற்குள் அவளது வாயை ஒரு வலிமையான கரம் பொத்தி அவளை அங்கிருந்த அறைக்குள் இழுத்துச் சென்றது.

"ஏய், யார் நீ?" குழறலாய் கேட்டவள் தன்னைச் சுவற்றில் சாய்த்து தன் முன் நின்ற செல்வாவை கண்டு திகைத்தவள்,

"இதெல்லாம் தப்பு சாமி..." என்க...

"திருட்டு மாங்காய்ப் பறிக்கிறது மட்டும் தப்பில்லையா?"

"மறுபடியும், மறுபடியும் திருட்டுன்னு சொல்லாதீங்க... அம்மா தான் மாங்காய் பறிக்கச் சொன்னாக." அவள் முறுக்கி கொள்ள... அது அவனுக்குத் தெரிந்திருந்தாலும் வேண்டுமென்றே,

"பொய் சொல்லாதே..." என்க...

"நெசமா தான் சொல்றேன் சாமி..." என்று அப்பாவியாய் விழி விரித்தவளை கண்டு அவனது மனம் சொக்கித்தான் போனது.

"அப்படியா...?" என்றபடி அவன் மேலும் அவளை நெருங்க முயல... பின்னால் சுவற்றோடு சாய்ந்தவள்,

"எனக்கு நிறையத் தற்காப்புக் கலைகள் தெரியும்..." என்க...

"அதுக்கு...?" அவன் கேள்வியாகப் பார்க்க... அவள் தனது கால் முட்டியை தூக்கியபடி அவனை உதைக்க வருவது போல் சைகை செய்ய... அவளது எண்ணம் அறிந்தவனாய் அவன்,

"ஐயோ..." என்று அலறியபடி மறுபக்கம் திரும்பி நின்று கொண்டான். அதைக் கண்டவள் கலகலவெனச் சிரித்தபடி வெளியில் ஓடினாள்.

"கொஞ்ச நேரத்தில் மயக்க மருந்தே இல்லாம எனக்குக் குடும்பக் கட்டுப்பாடு பண்ணியிருப்பாளே... பாதகத்தி..." அவன் அவளைக் கோபமாய் அர்ச்சித்தபடி அறையை விட்டு வெளியில் வந்தான்.

இருவரையும் பார்த்துவிட்ட மைனாவின் முகத்தில் கோபம் இல்லை. மாறாக மகிழ்ச்சியே ஊற்றாகப் பெருகியது.

***************************

அந்தி சாயும் பொழுது மலையூர் பேருந்து நிலையத்தில் வந்து நின்ற பேருந்தில் இருந்து ஒரு பெண் இறங்கினாள். வானம் மேக மூட்டத்துடன் இருட்டி கொண்டு வந்தது. கடைவீதியில் யாரும் இல்லை. அந்தப் பெண்ணிற்குப் பயம் பிடித்துக் கொள்ளத் தனது நடையைத் துரிதப்படுத்தினாள். அப்போது யாரோ தன்னைப் பின்தொடர்வது அறிந்து பின்னால் திரும்பி பார்த்தாள். யாரோ ஒருவன் அவளைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவனது பார்வை இவளையே மையம் கொண்டிருந்தது. அவள் பேருந்து ஏறியதில் இருந்து அவன் அவளைப் பின்தொடர்ந்து வருகிறான். அப்போது அவள் தவறாக எடுத்து

கொள்ளவில்லை. எல்லோரையும் போல் அவன் ஒரு பயணி என்றே நினைத்து கொண்டாள். ஆனால் இப்போது எல்லாமே தவறாகப் பட்டது.

என்ன செய்வது? என்று யோசித்துக் கொண்டே வந்தவள் முன் இரு பாதைகள் பிரிந்தது. ஒன்று ஊருக்குள் செல்வது... மற்றொன்று காட்டிற்குள் செல்வது. அவள் தைரியமாகக் காட்டிற்குள் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்தாள். அதைக் கண்ட பொறுக்கியின் விழிகள் மின்னியது. பின்னே அவனது வேலையை அவள் சுலபமாக்குகிறாளே. அவன் மகிழ்வுடன் அவளைப் பின்தொடர்ந்தான். காட்டுக்குள் நுழைந்தவள் திடுமென ஓட துவங்க... முதலில் புரியாது விழித்தவன் பின்னர்ச் சுதாரித்துக் கொண்டு அவளைத் துரத்தி கொண்டு ஓடினான்.

மாயமான் அம்மனின் கோவில் வந்ததும் அவள் தனது ஓட்டத்தை நிறுத்தி கொண்டு அவனைத் திரும்பி பார்த்தாள். அவனோ இளித்தபடி அவளை நெருங்கினான்.

"இதுக்குத் தான் இம்புட்டுத் தொலைவு ஓடி வந்தியா புள்ள...? ரொம்ப நல்ல இடமா தான் செலக்ட் பண்ணியிருக்க. இங்கே யார் தொந்தரவும் இருக்காது. ரொம்ப நல்லதா போச்சு. வா புள்ள..." என்று அவன் அவளது கையைப் பிடிக்க வர... அவளோ சிறிதும் பயப்படாது,

"அம்மா, தாயே.... உன்னை நம்பி வந்திருக்கும் என்னைக் கைவிட்டுராதே அம்மா. என் கற்பை காப்பாத்தி இந்த அயோக்கியனுக்கு நீ தான்ம்மா தண்டனை கொடுக்கணும்." அவள் அம்மனை நோக்கி இரு கரம் கூப்பி வேண்ட...

"எங்கேயாவது கல்லு வந்து காப்பாத்தி இருக்குதா? இதை எல்லாம் கேனப்பய யாராச்சும் இருப்பான் அவன் கிட்ட போய்ச் சொல்லு. இப்ப நீ வாடி..." என்றவன் அவளது கையைப் பிடித்து இழுக்க வந்தான்.

அப்போது அம்மன் பீடத்தின் முன் வீற்றிருந்த மானின் கூரிய கொம்பு வேகமாய்ப் பறந்து வந்து அவனது வயிற்றை ஆழமாய்ப் பதம் பார்த்தது. அவன் 'ஆ' என்று வீரிட்டபடி மண்ணில் வீழ்ந்தான். கொம்பு வயிற்றைக் கிழித்த வேகத்தில் அவனது குடல் வெளியில் தெறித்து மண்ணில் விழுந்தது. அடுத்தக் கணம் அவனது விழிகள் மேலே சொருக அவனது உயிர் கூடு அவனை விட்டு பறந்து சென்றது.

"அம்மா, தாயே... என் குடும்பமே உனக்குக் கடமைப்பட்டு இருக்கும்மா... நன்றி தாயே..." என்று நன்றி கூறிய அந்தப் பெண் திரும்பியும் பாராது ஊரை நோக்கி ஓட துவங்கினாள்.

கீழே விழுந்து கிடந்தவனைப் பார்த்த அரூபத்தின் விழிகள் திருப்தியை காட்டியது. அவனுக்கு இன்னமும் கொடூரமான தண்டனையைக் கொடுத்திருக்க வேண்டுமோ? என்று அது யோசித்துக் கொண்டிருந்தது. பின்பு மாயமான் அம்மனை பார்த்த அரூபம்,

'உன் பெயரை சொல்லி இப்படியொரு காரியத்தை நான் செய்றதுக்கு என்னை மன்னித்து விடு தாயே.' என்று மனமார மன்னிப்பு கேட்டுக் கொண்டது.

'தவறு செய்பவர்களைத் தண்டிப்பதும் தெய்வத்தின் கடமை தான். அப்படிப் பார்த்தால் நீயும் தெய்வம் தான்.' என்பது போல் அம்மன் அரூபத்தைக் கண்டு சாந்தமாகப் புன்னகை புரிந்தாள். இந்த அரூபம் ஒரு காலத்தில் அவளது செல்லப்பிள்ளை அல்லவா! அரூபத்தின் இன்றைய நிலையைக் கண்டு அந்தத் தெய்வத்திற்கே இரத்த கண்ணீர் வந்தது.

மறுநாள் காலையில் ஊர் மக்களும், மலைவாழ் மக்களும் கோவிலின் முன் கூடி விட்டனர். அங்குக் குடல் தெறித்து விழுந்து கிடந்தவனைக் கண்டு ஆளாளுக்கு ஒரு கதையைத் திரித்துக் கூறி கொண்டிருந்தனர். அப்போது ஜீப்பில் இருந்து செல்வா இறங்கினான். அவனுடன் முத்துவும் வந்தான். இறந்து கிடந்தவனின் பயங்கரத்

தோற்றம் கண்டு செல்வா அதிர்ந்தான். தனது கைக்குட்டையால் மூக்கை பொத்தி கொண்டவன்,

"யார் முதலில் பார்த்தது...?" என்று அவன் கூட்டத்தினரை பார்த்து கேட்க...

"நானுங்க..." ஆடு மேய்க்கும் சிறுவன் முன் வந்தான்.

"எப்போ பார்த்த?"

"ஆடு மேய்க்க வரும் போது எப்பவும் முதலில் அம்மனை கும்பிட்டுட்டு தான் வேலையை ஆரம்பிப்பேன் சார். அப்படி வரும் போது தான் பார்த்தேன்." அவன் தயங்கி தயங்கி கூறினான்.

"சரி, நீ போ..." என்றவன் முத்துவிடம் திரும்பி,

"போலீசுக்கு தகவல் சொல்லிருங்க..." என்று கூற...

அப்போது, "எங்க காட்டுக்குள்ள போலீசு வர கூடாது." இரண்டு குரல்கள் உரத்து ஒலித்தது.

'யாரது?' என்று நினைத்தபடி செல்வா திரும்பி பார்த்தான். மலைவாழ் ஆண்கள் இருவர் அங்கு நின்றிருந்தனர். அவன் அவர்களைச் சாதாரணமாகப் பார்க்க... அவர்களோ அவனைக் கொலைவெறியுடன் பார்த்தனர். அவர்களது வாழ்க்கையை நாசாமாக்கியவன் அவன் அல்லவா! வாழ்க்கையை மட்டுமா... அவர்களது குலத்தையே அழித்தவனாயிற்றே அவன்... அவர்களால் எதையும் மறக்க இயலாதே.

"டேய் நீயா?" என்றபடி ராசைய்யா செல்வாவின் சட்டையைப் பிடித்து விட்டான்.

"மாப்ள..." என்று வேங்கையன் அவனை அதட்ட...

"மச்சா, இவனைச் சும்மா விடக் கூடாது. நம்ம செல்லியை நம்ம கிட்ட இருந்து பிரிச்சவன் இவன் தான்... அவளைக் கொன்னவனும் இவன் தான்... இவனை என் கையால

தான் கொல்லோணும்." என்று ராசைய்யா வெறிக் கொண்டு கத்தினான்.

வேங்கையனுக்கும் அந்த வெறி இருந்த போதும் அவனது அறிவு சிறிது வேலை செய்தது. அதனால் தனது கோபத்தை மூட்டை கட்டி வைத்தவன்,

"விடு மாப்ள..." என்றவன் ராசைய்யாவின் கையை விலக்கி விட்டவன் பின்பு செல்வாவிடம்,

"இது எங்க பூமி... இங்குப் போலீசு வர்றது எங்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கலை." என்றான் தங்களது இன தலைவனாக...

"ஒரு உயிர் அநியாயமா போயிருக்குங்க. அதைப் பார்த்துட்டு சும்மா இருக்கச் சொல்றீங்களா?" செல்வா சற்று கோபத்துடன் கேட்க...

"நிச்சயம் அவன் ஏதோ தப்பு செஞ்சிருப்பான். இல்லைன்னா மாயம்மா அவனோட உயிரை எடுத்திருக்க மாட்டாள்." வேங்கையன் தனது கருத்தை உறுதியாகக் கூறினான். அதை மலைவாழ் மக்களும் ஆமோதித்தனர்.

"மனுசன் செய்ற தப்பை தெய்வம் கொடுக்கிற தண்டனையா நீங்க ஏத்துக்கலாம். ஆனா என்னால் அப்படி ஏத்துக்க முடியாது. முதலில் பாடியை போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப்புவோம். டாக்டர்ஸ் என்ன நடந்துச்சுன்னு சொல்வாங்க. அப்போ தெரியும் இது மனுசன் செஞ்சதா? இல்லை தெய்வம் செஞ்சதான்னு..." செல்வா உறுதியுடன் வேங்கையன் கூறியதை மறுத்து விட்டான்.

அடுத்தச் சில மணித்துளிகளில் இறந்தவனின் உடல் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதைக் கையாலாகாதவராய் கண்டு கொண்டிருந்த வேங்கையன், ராசைய்யா இருவரும் செல்வாவை ஆத்திரத்துடன் பார்த்தனர்.

அன்றும் இப்படித்தான் அவர்களது கட்டுப்பாடுகளை, சம்பிரதாயங்களை மாற்றி அமைத்து விபரீதத்தைத் தேடி

தந்தான். இன்றும் அப்படியே செய்கிறான். இதனால் என்னென்ன விபரீதங்கள் நிகழக்கூடுமோ!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 5

நியூயார்க் நகரத்தில் இருக்கும் பிரபலமான மருத்துவமனையின் கார் தரிப்பிடத்தில் காரை நிறுத்திய செந்தில் அதிலிருந்து இறங்கி காரை பூட்டிவிட்டு மருத்துவமனையை நோக்கி நடந்தார். அவர் இந்த மருத்துவமனையின் தலைசிறந்த மகப்பேறு மருத்துவர்... அவர் பார்த்த பிரசவங்கள் அனைத்தும் சுகப்பிரசவமே. எத்தனை சிக்கலான பிரசவமாக இருந்த போதும் அவரது கைப்பட்டால் அது சுகப்பிரசவமாகிடும். அதற்காகவே அவரைத் தேடி வருபவர்கள் அதிகம். அவரும் எந்த நேரத்திலும் தயங்காது இன்முகத்துடன் தனது கடமையைச் செய்தார். அன்பான, காதல் மனைவி சாந்தி. அவர்களது காதலுக்குச் சாட்சியாக ஒரே ஒரு மகன் இருக்கிறான். பெயர் ராகேஷ். தந்தையைப் பின்பற்றி அவனும் இதே மருத்துவமனையில் தந்தையின் கீழ் மகப்பேறு மருத்துவராகப் பணியாற்றி வருகிறான். செந்தில் சீனியர் என்றால்... இவன் ஜூனியர்... தந்தை இல்லாத போது இவன் தான் பிரசவங்களைக் கையாள்வான். ஆகமொத்தம் இந்த மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவம் இவர்களை நம்பியே இருந்தது.

மருத்துவமனை வந்த செந்தில் வழக்கம் போல் தனது கடமையில் மூழ்கி விட்டார். அப்போது அவரது அலைப்பேசி அழைத்தது. ராகேஷ் தான் அவரை அழைத்திருந்தான். பொதுவாக வேலை நேரத்தில் ராகேஷ் அவரைத் தொந்தரவு செய்வது கிடையாது. அதனால் ஏதேனும் அவசரமோ என்றெண்ணி அவர் அலைப்பேசியை உயிர்ப்பித்தார்.

"டாட், பேஷண்ட் லாராவோட ஃபைல் வேணும். உங்க சிஸ்டமில் எந்த ஃபோல்டரில் இருக்கு?" தந்தையின் கணினி முன் அமர்ந்தபடி அவன் கேட்டான். இருவருக்கும் இடையில் எந்த ரகசியமும் கிடையாது.

செந்தில் லாராவின் கோப்பு பற்றிக் குறிப்பு சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்துவிட... ராகேஷ் அவர் கூறியபடி

சென்று லாராவை பற்றிய குறிப்புகளைப் படிக்க ஆரம்பித்தான். தனக்குத் தேவையானவற்றைக் குறிப்பு எடுத்து கொண்டவன் கணினியை அணைக்க முற்பட்ட போது அவனது கைப்பட்டு வேறு ஒரு கோப்புத் திறந்தது. சித்த மருத்துவக் குறிப்புகள் என்ற தலைப்பிட்டு இருந்ததைக் கண்டவன் ஆவலோடு அதைப் படிக்க ஆரம்பித்தான். படிக்கப் படிக்கப் பிரமித்துப் போனான். தந்தையின் அறிவை எண்ணி அவன் மெச்சி கொண்டான். தந்தை கண்டுபிடித்த மருந்துகளை முறைப்படி அரசாங்க அனுமதி பெற்றுச் சந்தைப்படுத்தினால் உலகில் முதல் பணக்காரர்கள் பட்டியலில் இவர்களுக்குத் தான் முதலிடம்...

"இப்படி ஒரு பொக்கிசம் கையில் இருப்பதை என் கிட்ட சொல்லவே இல்லையே டாட்." என்று தனக்குள் சொல்லி கொண்டவன் கணினியை அணைத்து விட்டு எழுந்தான்.

அறையை விட்டு வெளியில் வந்தவனை அவனது அன்னை சாந்தி உணவு உண்ண அழைத்தார்.

"ராகேஷ் சாப்பிட்டுட்டு போப்பா..."

"டைம் இல்லை மாம்... பை..." என்றபடி வெளியில் வந்தவன் தனது காரை எடுத்துக் கொண்டு மருத்துவமனை நோக்கி பறந்தான். போகும் வழியில் தந்தைக்கு அழைத்துத் தான் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தந்தையிடம் பேச தனக்கான அனுமதியை பெற்றுக் கொண்டான்.

மருத்துவமனைக்கு வந்த ராகேஷ் அங்கிருந்த சிற்றுண்டி சாலையில் அமர்ந்து தந்தைக்காகக் காத்திருக்கலானான். சிறிது நேரத்தில் செந்தில் அவன் முன் வந்து அமர்ந்தார்.

"சொல்லு ராகேஷ்...?" என்றவரை கூர்ந்து பார்த்தவன்,

"உங்களுக்குச் சித்த மருத்துவம் பற்றித் தெரியுமா டாட்...?" என்று கேட்டான். அவன் சொன்னதைக் கேட்டு அவரது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

"கம்ப்யூட்டரில் இருந்த ஃபைலை பார்த்தியா?" அவர் நேரிடையாக மகனிடம் கேட்டார்.

"எஸ் டாட்... உங்களுக்குக் கிடைச்ச அபூர்வ மருத்துவக் குறிப்புகளை வச்சுப் பணம் சம்பாதிக்காம இப்படி அதைக் கிடப்பில் போட்டு இருக்கீங்களே." என்று அவன் உண்மையான வருத்தத்துடன் கூற...

"சில காரணங்களால் அதை அப்படியே நிறுத்திட்டேன் ராகேஷ்." என்றவரது முகத்தில் கோபமும், வருத்தமும் சரிசமமாய்த் தோன்றியது.

"என்னாச்சு டாட்...?" ராகேஷ் தந்தையின் கையை ஆதரவாக பற்றிக் கொண்டான்.

"என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ராகேஷ்...?" என்று கேட்ட செந்தில் மகனை கூர்மையாகப் பார்த்தார்.

"சக்ஸஸ்புல் கைனகாலஜிஸ்ட்... லவ்வபிள் ஹஸ்பெண்ட்... கைண்ட் டாட்..." என்று அவன் அடுக்கி கொண்டு போக...

"இதை எல்லாம் விட இன்னொன்னு இருக்கு ராகேஷ்... நினைச்சது நடக்காம தோற்றுப் போய்ப் புறமுதுகிட்டு ஓடி வந்தவன் நான்..." என்றவரது முகத்தில் இருள் படர்ந்தது.

"டாட்..." ராகேஷ் தந்தையைத் திகைப்புடன் பார்த்தான். அவன் அறிந்த தந்தை இவர் இல்லையே...

"உன் கிட்ட நிறையப் பேசணும் ராகேஷ். ஒரு ஆணா என்னுடைய உணர்வுகளை நீ புரிஞ்சுக்குவன்னு நினைக்கிறேன். என் வாழ்வின் மறுபக்கத்தை உன் கிட்ட சொல்லணும்ன்னு நினைப்பேன். ஆனா அதற்கான சந்தர்ப்பம் தான் இதுவரை அமைஞ்சது இல்லை. இனியும் சொல்லாமல் இருப்பதில் அர்த்தம் இல்லை. நான் சாதிக்காததை நீ சாதிக்கணும்." என்றவர்,

"இப்போ டைம் இல்லை ராகேஷ்... நைட் பேசுவோம்." அவனிடம் விடைபெற்று சென்றுவிட... அவன் செல்லும் தந்தையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

இரவு உணவு உண்டு விட்டு ஈசி நாற்காலியில் அமர்ந்திருந்த கந்தன் மகன் வசந்தகுமாரிடம், "நம்பூதிரிகளை வர சொல்லிட்டியா வசந்தா?" என்று கேட்க...

"ம், சொல்லியாச்சுப்பா..."

"ம், ம்..." என்றவர் அப்படியே கண்மூடி படுத்திருக்க... வசந்தகுமார் உள்ளே சென்றுவிட்டார்.

அப்போது கந்தன் முன் வந்து நின்ற அரூபம் மெல்ல உருவம் பெற துவங்கியது. அந்த உருவத்தை அடையாளம் கண்டு கொண்ட கந்தனின் உதடுகள்,

"செல்லி..." என்று மெல்ல முணுமுணுத்தது.

"பரவாயில்லையே... உனக்கு என்னை அடையாளம் எல்லாம் தெரியுது." எக்காள குரலில் சொன்ன செல்லி வாய்விட்டு சிரித்தாள். அவளது சிரிப்பொலி அந்த ஏகாந்த நேரத்தில் அதிபயங்கரமாய் ஒலித்தது.

"போயிரு... இங்கே இருந்து போயிரு..." கந்தனின் வார்த்தைகள் தடுமாறியபடி வெளிவந்தது.

"அது எப்படிப் போவேன்? என் ஆன்மா சாந்தி அடையாம நான் எப்படிப் போவேன்? அன்னைக்கு வச்ச நெருப்பு இப்பவும் என் உடம்பில் தீயாய் காந்துதே. அதுக்குப் பழி தீர்க்காம நான் எப்படிப் போவேன்?" என்று ஆக்ரோசமாய்க் கேட்டாள் செல்லி...

"உன்னால் ஒண்ணும் பண்ண முடியாது..." கந்தனின் குரல் சிறு இறுமாப்புடன் வந்தது.

"மலையாள நம்பூதிரி வச்சு பூஜை பண்ணிட்டு இருக்கிறதால தான் உன்னைச் சும்மா விட்டு வச்சு இருக்கேன்னு நீ நினைச்சிட்டு இருக்கியா? இல்லைடா... அதுக்காக இல்லைடா... என்னோட இலக்கு வேறு... அந்த இலக்கை நான் அடைய நீ எனக்குப் பகடை காய் அவ்வளவே... உன்னை வச்சு நான் சாதிக்க வேண்டியது

நிறைய இருக்கு. அதுக்காகத் தான் காத்துக்கிட்டு இருக்கேன்." ஆவேசமாய்க் கத்தினாள் செல்லி...

"இத்தனை வருசம் காத்துக்கிட்டு இருந்தது போல் இனியும் காத்துக்கிட்டு இரு." கந்தன் நக்கலாய் கூற...

"கந்தா, என்னை ரொம்ப லேசா நினைச்சிட்ட இல்ல..." என்ற செல்லி ஆங்காரத்துடன் வீட்டின் முன்னிருந்த வைக்கப்போரை பார்த்தாள். அடுத்த நொடி அது திகுதிகுவெனத் தீப்பற்றி எரிந்தது.

கந்தன் நடப்பது கனவா? நனவா? என்று பிரிக்க முடியாத ஒருவித மயக்க நிலையில் தவித்திருந்தார்.

"வசந்தா..." என்று அவர் பயத்தில் பெரும் குரல் எடுத்து கத்தினார்... அடுத்த நொடி வசந்தகுமார் அவர் முன் வந்து நின்றார்.

"என்னாச்சுப்பா?" மகனது அழைப்பில் விழி திறந்த கந்தன் சுற்றும் முற்றும் பார்த்தபடி மலங்க மலங்க விழித்தார்.

"வைக்கப்போர் எரிஞ்சு போச்சே..." என்று அவர் திரும்பத் திரும்ப அதையே கூற...

"முதல்ல தண்ணிய குடிங்கப்பா..." என்ற வசந்தகுமார் அருகிலிருந்த சொம்பில் இருந்து தண்ணீரை எடுத்துத் தந்தையிடம் நீட்டினார். அதை வாங்கிக் கடகடவெனப் பருகிய கந்தன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

"இப்போ சொல்லுங்க..."

"வைக்கப்போர்... அங்கே..." என்று வீட்டின் முன் பகுதியை நோக்கி அவர் கை காட்ட....

"வைக்கப்போர் அங்கேயே தான்ப்பா இருக்கு... நல்லா பாருங்க..." வசந்தகுமார் கூறவும் கந்தன் விழி விரித்துப் பார்க்க... வைக்கப்போர் எரியாமல் அப்படியே இருந்தது.

"நீங்க எதையோ நினைச்சு பயந்து இருக்கீங்கப்பா... வாங்க, உள்ளாற போய்ப் படுங்க. இன்னைக்கு நான்

உங்களுக்குத் துணைக்குப் படுக்கிறேன்." என்ற வசந்தகுமார் தந்தையை வீட்டினுள் அழைத்துச் சென்றார்.

அந்தக் காட்சியைக் கண்ட செல்லி (இனி அரூபம் 'செல்லி' என்று அழைக்கப்படும்) தனக்குள் நகைத்து கொண்டாள். 'இது ஆரம்பம் தான்' என்று சொல்லி கொண்டவளின் விழிகள் பழிவெறியில் பளபளத்தது.

மறுநாள் காலையில் செல்வா அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான். அவன் முன் வந்து நின்ற சுபத்ரா,

"இங்கே வந்ததும் வராததுமா இங்குள்ள மக்கள் கிட்ட சண்டைக்கு நிக்காதேடா." என்று அறிவுரை கூற...

"ம்மா, ஒருத்தன் மர்மமான முறையில் இறந்து கிடக்கிறான். அது பத்தி விசாரிக்கக் கூடாதா? அவங்க சொல்ற மாதிரி 'தெய்வம் தண்டிச்சு இருக்கு'ன்னு சொல்ல சொல்றீங்களா?"

"அப்படிச் சொல்ல சொல்லை செல்வா... கொஞ்சம் நிறுத்தி நிதானமா..."

"அதுக்குள்ள இறந்தவன் உடல் அழுகி போயிரும்மா..."

"உன் கிட்ட பேச முடியாது..." என்று சுபத்ரா சலித்துக் கொண்டார்.

"தட்ஸ்குட் மம்மி..." என்று அவன் அவரது தாடையைப் பற்றிக் கொஞ்ச...

"போடாங் அம்மி..." அவர் ரைமிங்குடன் அவனிடம் செல்லமாய்க் கோபத்துக் கொண்டார்.

"வர வர நீங்க சந்தானத்துக்கே டஃப் கொடுக்கிறீங்கம்மா..." என்றவன் சிரித்தபடி தனது வேலைக்குக் கிளம்பினான்.

அவன் ஜீப்பில் ஏறும் போது ஒருவன் அங்கு வந்தான். வந்தவன் செல்வாவை கண்டு பூரித்துப் போனவனாய் அவனை மேலிருந்து கீழாக ஆசையோடும், ஆர்வத்தோடும் பார்த்து வைத்தான்.

'இது யாரு? நம்ம பையனை மாப்பிள்ளை பார்க்கிற மாதிரி பார்க்கிறது?' சுபத்ரா யோசித்தபடி நின்றிருந்தார்.

முத்துவிற்கு அவனை நன்கு அடையாளம் தெரிந்தது. "என்ன வீரா எப்படியிருக்க? ரொம்ப நாளா ஆளை காணோம்." என்று உரிமையோடு விசாரித்தான்.

"ஆமாஞ்சாமி... கொல்லிமலைக்குச் சித்தரை தேடி பயணம் போயிருந்தேன்."

"சித்தரை பார்த்தியா?"

"ஆமாஞ்சாமி... சித்தரை தரிசிச்சு ஆசிர்வாதம் வாங்கிட்டு வந்தேனுங்க..."

"அப்போ நீ ரொம்பப் பெரிய ஆளு தான்..." முத்து அவனைப் பாராட்ட... வீரா கூச்சத்தில் நெளிந்தான்.

"முத்து, யாரிது...?" செல்வா முத்துவிடம் வீராவை பற்றி விசாரித்தான்.

"நம்ம மைனாவுக்குச் சொந்தம் சார்." செல்வாவிடம் பதில் கூறிய முத்து வீராவிடம்,

"மைனாவை பார்க்க வந்தியா?" என்று கேட்க... வீராவும் ஆமென்பது போல் தலையாட்டினான். அவனை ஒரு பார்வை பார்த்தபடி செல்வா முத்துவிடம்,

"வண்டிய எடுங்க முத்து..." என்று கூற... மறுபேச்சு பேசாது முத்து ஜீப்பை கிளப்பிக் கொண்டு சென்றான். வீராவின் விழிகள் செல்வாவை வாஞ்சையுடன் பார்த்து ரசித்தது.

"க்கும்..." என்று சுபத்ரா தொண்டையைச் செருமி அவனது கவனத்தைத் தன் பக்கம் திருப்பினார்.

"அம்மா வணக்குமுங்க..." வீரா அவருக்குப் பெரிய கும்பிடு போட்டு வணக்கம் வைத்தான்.

"மைனாவை கூப்பிடவா?"

"இல்லைம்மா... நான் பார்க்க வந்தது உங்களைத் தான்..."

"என்னையவா? எதுக்கு?" என்று அவர் யோசனையுடன் கேள்விகள் கேட்க...

"என்னை உங்களுக்குத் தெரியாதும்மா. ஆனா உங்க வீட்டய்யாவுக்கு என்னை நல்லா தெரியும்மா. நானு, ஐயா ஆபிசில் வேலை பார்த்த பியூன் மாரிக்கு சொந்தக்காரன்." கணவரை பற்றி அவன் கூறியதும் சுபத்ரா யோசனையாய் அவனைப் பார்த்தார்.

அப்போது தான் அவன் அந்த விசயத்தை அவரிடம் கூறினான். அதைக் கேட்டவர் பதட்டத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தபடி,

"உள்ளே வாங்க..." என்று அழைத்துச் சென்றார்.

வீரா எல்லாவற்றையும் கூற, கூற அவருக்கு விசயம் நன்கு புரிந்தது. புரிந்த விசயமோ அவரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

"இந்த விசயத்தை யார் கிட்டேயும் சொல்லிடாதீங்க. குறிப்பா செல்வா கிட்ட..." என்றவரது விழிகள் கலங்கி போனது.

"ஐயோ அம்மா, நான் உங்க நிம்மதியை பறிக்க வரலை. வழியில வண்டிக்காரன் ஐயா வந்த சேதியை சொன்னான். அதான் பார்த்துட்டு போகலாம்ன்னு வந்தேன். சந்தேகத்தோட தான் பார்க்க வந்தேன். அப்புறம் உங்களையும், ஐயாவையும் பார்த்த பிறகு என் சந்தேகத்துக்கு வழியே இல்லாம போயிருச்சு... இந்த விசயத்தை நான் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேனுங்க." அவன் கூறியதும் தான் அவருக்கு நிம்மதியாக இருந்தது.

ஆம், அந்தக் குதிரை வண்டிக்காரன் வீராவின் தோழன்... அதான் வீராவை கண்டதும் மனதை அழுத்திய விசயத்தை அவனிடம் கொட்டி விட்டான். ஏனெனில் இந்த விசயம் வீராவிற்குத் தெரியுமே...!

"அப்போ நான் கௌம்பறேன்ம்மா..." என்றவன் கிளம்ப ஆயத்தமாக...

"சாப்பிட்டு போங்க..." என்ற சுபத்ராவை பார்த்து புன்னகைத்த வீரா,

"என் மனசும், வயிறும் நெறைஞ்சு கெடக்கு தாயி. இது போதும் எனக்கு... என் வாழ்க்கை முழுமைக்கும் இது போதும்." என்றவன் மகிழ்ச்சியுடன் வீட்டை விட்டு வெளியில் வந்தான்.

சமையலறையில் இருந்த மைனா அனைத்தையும் கேட்டு விட்டாள். அவள் மௌனமாகக் கண்ணீர் விட்டாள். அவளது மனம் 'செல்லி, செல்லி' என்று விடாது அரற்றியது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 6

வீரா நேரே ஆற்றை நோக்கி விறுவிறுவென நடந்தான்... ஆற்றங்கரை வந்ததும் அங்கிருந்த மண்ணில் அமர்ந்தவன் கலங்கிய விழிகளுடன் ஆற்றைப் பார்த்திருந்தான். இதே ஆற்றில் தான் அவனும், செல்லியும் மீன் பிடித்து விளையாடினார்கள். இதே ஆற்றில் தான் அவனும், அவளும் போட்டி போட்டுக் கொண்டு நீச்சல் அடித்து விளையாண்டார்கள். இதோ இதே ஆற்றில் தான் அவன் அவளது அஸ்தியை கரைத்தான். அதை நினைத்தவனின் விழிகளில் இருந்து கண்ணீர் விடாது வழிந்தது.

"செல்லி..." அவன் வானை நோக்கி உரக்க கத்தினான். வானம் அமைதியாக அவனைப் பார்த்திருந்தது.

"என்னை மட்டும் ஏன்டி தனியா விட்டுட்டு போன? உன் கூடவே என்னையவும் கூட்டிட்டு போயிருக்கலாமே. என்னை மட்டும் ஏன்டி விட்டுட்டு போன...?" என்று அவன் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறி அழுதான். செல்லி அவனைத் தேற்றும் வகையறியாது அவனைப் பரிதாபமாகப் பார்த்து கொண்டிருந்தாள். உடல் இல்லாது ஆன்மாவோடு அலையும் அவளை அவனால் இனம் காண முடியாதே.

'உன் நல்ல மனசுக்கு நீ நூறு வருசம் உயிரோடு வாழணும் வீரா.' என்று முணுமுணுத்த செல்லி மழையாய் மாறி பொழிந்து நண்பனுக்கு ஆறுதல் கூறினாள்.

"செல்லி... செல்லி..." என்று அவன் அரற்றியபடி அங்கேயே படுத்துக் கிடந்தான்.

செல்லியை சுற்றி அன்பான உள்ளங்கள் ஏராளம் இருந்த போதும் ஒருத்தன் செய்த சதியால் அவளது வாழ்க்கையே மாறிப் போனது. அவள் அவனைச் சந்திக்காது இருந்திருக்கலாம். காலம் கடந்து செல்லி தன்னையே நொந்து கொண்டாள்.

இறந்து போனவனின் உடற்கூறு ஆய்வறிக்கை அன்று தான் வந்தது. அதைப் படித்துப் பார்த்த செல்வா திகைத்துப் போனான். மான் முட்டியதால் அதன் கூரிய கொம்புகள் வயிற்றைக் கிழித்ததில் அவன் உயிரிழந்ததாக அதில் கூறப்பட்டு இருந்தது.

"நான் தான் சொன்னேன்ல சார்..." முத்து அவனிடம் கூறி அவனது முறைப்பை பரிசாகப் பெற்றுக் கொண்டான்.

விசயம் கேள்விப்பட்டு வேங்கையன், ராசைய்யா அவர்கள் இன மக்களோடு அலுவலகம் முன் கூடி விட்டனர். அதை அறிந்து செல்வா அவர்களை உள்ளே அழைத்தான்.

"இனியாவது எங்க விசயத்தில் தலையிடறதை நிறுத்து. எங்க தெய்வ நம்பிக்கையைச் சிதைக்காதே." என்று வேங்கையன் செல்வாவை எச்சரிக்க...

"நான் என் கடமையைச் செய்தேன்." என்றான் செல்வா அசால்ட்டாக...

"எதுடா கடமை...? எங்க நம்பிக்கையைக் கேவலப்படுதுறதா...?" ராசைய்யா கோபத்துடன் அவன் மீது பாய முயல...

அப்போது மேலே ஓடி கொண்டிருந்த மின்விசிறி டொமென்ற சத்தத்துடன் இருவருக்கும் இடையில் கீழே விழுந்தது. அதைக் கண்டு ராசைய்யா பயத்துடன் பின்வாங்க... செல்வா திகைப்புடன் மின்விசிறியை பார்த்தான். மற்ற எல்லோரும் அதிர்ச்சியுடன் மின்விசிறியை பார்த்தனர். அவர்கள் யார் மேலாவது மின்விசிறி விழுந்திருந்தால் அவர்களது நிலைமை என்னாவது!

இதற்குக் காரணமான செல்லியோ ராசைய்யாவை கோபத்துடன் முறைத்து கொண்டிருந்தாள். ராசைய்யா எப்போதுமே அவசரக்குடுக்கை என்பதை அவள் அறிவாள். இப்போதும் அதே மாதிரி இருக்கும் அவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது. அந்த மின்விசிறியை

அப்படியே அவன் தலையில் போடத்தான் நினைத்தாள். ஆனால் மைனாவிற்காகப் போனால் போகிறது என்று விட்டு விட்டாள். அவளது செல்லா மீது யார் கை வைத்தாலும் அவர்களை அவள் சும்மா விட மாட்டாள். நேற்று அவளது செல்லா சட்டையை ராசைய்யா பிடித்த போதே அவனைத் தண்டித்து இருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது இப்போது தவறாகி போனது என்று அவள் வருந்தினாள்.

"எதுக்குப் பிரச்சனை பண்றீங்க வேங்கையன்? இனி இது மாதிரி நடக்காம நான் பார்த்துக்கிறேன்." முத்துச் சுதாரித்துக் கொண்டு அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான்.

"என்ன முத்து பயப்படுறீங்களா?" செல்வா கேலி குரலில் கேட்க...

"ஊருக்குள் இருக்கும் மனிதர்களை விடக் காட்டில் இருக்கும் இவர்கள் ரொம்ப நல்லவங்க சார். பொய் சொல்ல தெரியாத, சூதுவாது தெரியாத கள்ளங்கபடமற்ற குழந்தை மனசுக்காரங்க. இவங்களைச் சந்தேகப்படுறது தப்பு சார். இதுநாள் வரை இவங்க மேல சின்னதாய் ஒரு கம்ப்ளையிண்ட் கூட வந்தது இல்லை."

"இருந்தாலும் இவங்க மேல் ஒரு கண் வச்சிக்கிறது நல்லது முத்து." என்ற செல்வாவை கண்டு முத்து அரைகுறையாய் தலையாட்டி வைத்தான்.

அன்றிரவு மைனா தான் கேட்ட விசயத்தை அப்படியே மாயிடம் சொல்லிவிட்டாள். அதைக் கேட்ட மாயி திகைப்புடன் அமர்ந்திருந்தாள்.

"மைனா, நாம போய் வீராவை பார்த்துப்புட்டு வரலாம்." என்று மாயி தோழியைக் கூப்பிட...

"வீரா அண்ணோய் எப்படியும் நம்மள தேடி இங்கே வரும்..." என்று மைனா சொல்லி கொண்டிருக்கும் போதே வீரா அங்கு வந்து சேர்ந்தான். வந்தவனை வாவென்று கூடக்

கேட்காது இருவரும் அவனைத் திகைப்புடன் பார்த்திருந்தனர்.

"வீராண்ணோய், நீங்க அந்தம்மா கிட்ட சொன்ன விசயம் நெசம் தானா?" மைனா தான் ஆரம்பித்து வைத்தாள்.

வீராவிற்குத் தனது தோழியின் நினைவில் விழிகள் கலங்க ஆரம்பித்தது. ஆம் என்பது போல் தலையசைத்தான்.

"அன்னைக்கு மட்டும் நான் போகாம இருந்திருந்தா செல்லிய எப்படியாவது காப்பாத்தி இருப்பேன். செல்லி என்னை மட்டும் காப்பாத்திட்டு அவள் இல்லாம போயிட்டா..." என்றபடி அவன் இரு கைகளையும் முகத்தில் அடித்தபடி அழுதான்.

"அழாதே அண்ணோய்..." மாயி அவனைச் சமாதானப்படுத்தும் போதே வேங்கையனும், ராசைய்யாவும் வரும் சத்தம் கேட்டது.

"அண்ணோய், அவுக வராகப் போலிருக்கு... இதைப் பத்தி பொறவு பேசுவோம்." மாயி சொன்னதற்குச் சரியென்று தலையசைத்தான் வீரா.

"ஏலேய் வீரா, நீ எப்போ வந்த?" வேங்கையன் அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான்.

"இன்னைக்குத் தான் அண்ணோய்..."

"பயணம் எல்லாம் சௌகரியமா இருந்ததா?" வீரா அடிக்கடி இப்படிப் பயணம் மேற்கொள்வதால் வேங்கையன் அப்படிக் கேட்டான். ராசைய்யா எதுவும் பேசாது அமைதியாக வீராவை பார்த்திருந்தான். ஏனோ இருவருக்கும் ஒத்து வராது.

"எல்லாம் நல்லா இருந்தது அண்ணோய்..." என்ற வீரா தனது பயணத்தைப் பற்றிப் பேசி சூழ்நிலையை மாற்றி விட... இரு பெண்களும் பெருமூச்சு விட்டபடி உணவு சமைக்கச் சென்றனர்.

வேங்கையனின் வீட்டிலேயே உணவு உண்டுவிட்டு ராசைய்யாவும், மைனாவும் தங்களது வீட்டிற்குச் சென்றனர். வழக்கம் போல் ராசைய்யா வீட்டிற்கு வெளியில் இருந்த மண் திண்ணையில் படுத்துக் கொள்ள... மைனா வாசப்படிக்கட்டில் தலை வைத்து வீட்டினுள் படுத்தாள். சிறிது நேரம் அமைதியாகச் சென்றது.

"ஏ புள்ள..." ராசைய்யா மனைவியை அழைத்தான். அவன் தன்னைத் தான் அழைக்கின்றான் என்கிற நினைவு இல்லாது அவள் தனக்குள் மூழ்கி இருந்தாள்.

"ஏ புள்ள... உன்னைத் தான்... ஏ மைனா..." என்று ராசைய்யா உரக்க கத்த... கணவனது அழைப்பில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தாள் மைனா...

"என்னையவா கூப்பீட்டீக...?"

"இல்லை... உம் அப்பனை கூப்பிட்டேன்." என்று கூறி சிரித்தான் ராசைய்யா. ராசைய்யாவின் இந்தச் சிரிப்பு, கேலி பேச்சு அவளுக்கு முற்றிலும் புதிது. அவனை ஆவென அவனைப் பார்த்தவள் தனது தகப்பனை அவன் கேலி செய்தது கண்டு ரோசத்துடன்.

"எங்கப்பனை இழுக்க வேண்டாம். சொல்லிப்புட்டேன். ஆமா, எதுக்குச் சாமி என்னைய கூப்பிட்டீக...?" என்று புரியாது கேட்க...

"நாம ரெண்டு பேரும் எல்லோரையும் போல வாழ்ந்திருந்தோம்ன்னா இப்போ எனக்கும் என்னைப் போல் ஒரு மகன் இருந்திருப்பான்ல..." என்ற ராசைய்யாவின் மனக்கண்ணில் செல்வாவின் முகம் மின்னி மறைந்தது.

கணவனது வார்த்தைகளில் மைனா மெல்ல விசும்பினாள். அவளுக்குத் தான் அந்தப் பாக்கியம் கிட்டவில்லையே. அவளது அழுகையில் ராசைய்யாவின் கற்பனை தடைப்பட்டது. நிஜம் அவனைச் சுட்டதில் அவன்

விருட்டென்று எழுந்து சென்றுவிட்டான். மைனா அழுதபடி அப்படியே அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் ராசைய்யா தள்ளாடியபடி அங்கு வந்து சேர்ந்தான். அவனது நடையிலேயே தெரிந்தது அவன் குடித்திருப்பது. அவன் முன்பு தான் அழுதிருக்கக் கூடாதோ என்கிற எண்ணம் தான் மைனாவை உறுத்தியது. கணவன் குடித்துவிட்டு வந்தது கூட அவளை உறுத்தவில்லை. அவள் அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு எழுந்து வந்தாள். தள்ளாடியபடி நின்ற கணவனைப் பற்றித் திண்ணையில் அமர வைத்தவள் தானும் அவன் அருகில் அமர்ந்தாள்.

"இனி சத்தியமா நான் அழ மாட்டேன்ய்யா. தயவுசெஞ்சு நீ குடிக்காதே..." அவள் அவனிடம் கெஞ்ச... அவனோ போதையேறிய சிவுப்பு விழிகளால் அவளை ஏறிட்டவன்,

"நான் உனக்குப் பண்ணிய துரோகம் என் நெஞ்சை அறுக்குது மைனா. நான் உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாது. உன் வாழ்க்கையைப் பாழாக்கி இருக்கக் கூடாது. நான் பண்ணியது ரொம்பப் பெரிய தப்பு. ரொம்பப் பெரிய பாவம். அதைத் தாங்கிக்க முடியாம தான் நான் தினமும் குடிக்கேன்."

கணவன் தன்னை நினைத்து தான் மறுகுகிறான் என்பதை அறிந்தவள் விழிகளில் இருந்து ஆனந்த கண்ணீர் வடிந்தது.

"நீ எனக்காகவா குடிக்கிற?"

"ஆமா..." என்ற ராசைய்யாவின் தலை தானாகக் குனிந்தது.

"எனக்காக நீ குடிக்க வேண்டிய அவசியமே இல்லைய்யா. நான் உன் கூடச் சந்தோசமா தான் இருக்கேன்."

"பொய் சொல்லாதே புள்ள..."

"நெசம்ய்யா... நீ சுவாசிக்கிற காத்தை சுவாசிச்சிக்கிட்டு, நீ சாப்பிட்ட மிச்சத்தைச் சாப்பிட்டுட்டு நான் சந்தோசமா தான் இருக்கேன். நீ என் பக்கத்தில் இருக்கிற நெனப்பே

எனக்குப் போதும்ய்யா." என்றவள் அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு அதில் முகம் புதைத்து அழுதாள்.

மனைவியின் வார்த்தைகளில் திகைத்து போய் அமர்ந்திருந்தான் ராசைய்யா. என்ன மாதிரியான அன்பு இது...! இதற்கான சிறு பிரதிபலிப்பு கூட இதுநாள் வரை அவன் அவளிடம் காட்டியது இல்லையே. இனியும் காட்டாது இருந்தால் அது நல்லதிற்கு இல்லை என்று உணர்ந்தவனாய் அவனது வலக்கை அவளது தலையை மெல்ல வருடி கொடுத்தது. திருமணத்தின் போது தாலி முடிய தன் மீது படிந்த கணவனது விரல்களின் ஸ்பரிசம் இதோ இப்போது தான் மீண்டும் அவளை ஸ்பரிசிக்கிறது. அவள் மேனி சிலிர்க்க அவனைக் காதலோடு ஏறிட்டு பார்த்தாள். மனைவியின் ஒற்றைப் பார்வையில் அந்த முரட்டு காட்டு மனிதன் விசுவாசம் மிக்க வீட்டு நாயாய் மாறி குழைந்து போனான். அவனும் பதிலுக்குத் தனது நேசத்தை விழிகளால் அவளிடம் வெளிப்படுத்தினான். ஏழேழு ஜென்மமாய் வாழ்ந்த நிறைவு அந்தக் கணம் அவர்களுள்... உடல் சார்ந்த வாழ்க்கையை விட மனம் சார்ந்து வாழும் காதல் வாழ்க்கை என்றும் மகிழ்ச்சியைத் தரும்.

**********************

மாலை நேர தென்றல் காற்றின் சுகத்தை ரசித்தபடி நடந்து வந்து கொண்டிருந்தான் செல்வா. அவனது இடது பக்கம் அடர்ந்த காடு, வலது பக்கம் பெருவெள்ளமாய்ச் சுழித்துக் கொண்டு ஓடும் காட்டாறு... காட்டாற்றில் இறங்கியவன் உயிரோடு திரும்புவானா? என்பது அதிசயம் தான்... கடவுள் மனிதனுக்குக் கொடுத்த இயற்கையைச் சிலாகித்தபடி வந்து கொண்டிருந்தவன் அப்போது தான் அங்கு நின்றிருந்த பொம்மியை கண்டான்.

'இவள் இங்கே என்ன செய்கிறாள்?' என்று யோசித்தபடி அவளைப் பார்த்தான். அவளோ இவனைக் கவனிக்கவில்லை. ஆற்றங்கரையில் வளர்ந்திருந்த செடி கொடிகளுக்கு இடையில் எதையோ தேடி கொண்டிருந்தாள்.

"ஓய், என்ன தேடுற...?" திடுமென ஒலித்த செல்வாவின் குரலில் திடுக்கிட்டு திரும்பியவள் அங்கு அவனைக் கண்டதும் ஆசுவாசம் அடைந்தவள் பின்பு அவனைக் கண்டு கொள்ளாது மீண்டும் தனது வேலையைப் பார்க்கலானாள்.

"என் கிட்ட சொன்னா நானும் தேடுவேன்ல." என்றவன் அவள் அருகே குனிந்து தானும் தேடலானான்.

அவள் குனிந்த வாக்கிலேயே அவனைத் திரும்பி பார்த்து முறைத்தாள். அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி என்னவென்று கேட்டான். வெகு அருகாமையில் தெரிந்த அவனது முகம், அதன் வசீகரம், அவனது புன்னகை எல்லாம் சேர்ந்து அவளை ஏதோ செய்தது. சட்டென்று நிமிர்ந்தவள் அவனை விட்டு விலகி நின்றாள். அவளது மனம் படபடவென அடித்துக் கொண்டது. ஏதோ இனம் புரியாத உணர்வு அவளது மனதினை ஆக்கிரமித்துக் கொண்டது.

"சொல்லு பொம்மி... என்ன தேடுற?" அவனது குரல் மென்மையாக ஒலித்தது. லட்சம் வார்த்தையை நொடியில் படபடவெனப் பேசுபவளுக்கு இப்போது ஒற்றை வார்த்தைக்குப் பஞ்சமாகி போனது.

"அது... வந்து..." என்று அவள் திக்கி திணற...

"அடப்பார்றா... பொம்மிக்கு கூடத் திக்குமோ...?" என்று அவன் அவளைக் கேலி செய்ய... அதில் ரோசத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தவள்,

"ம், நவரத்தினக்கல்லை தேடுறேன்..." என்று நொடித்தபடி வெடுக்கென்று கூறினாள்.

"நவரத்தினக்கல்லா? அதுவும் இங்கேயா?"

"ஏன்... எங்க பூமியில் கிடைக்காதாக்கும்? எங்க பூமி பொன்னு கொழிக்கும் பூமியாக்கும் சாமி..." அவள் சிலாகித்துக் கூற...

"உங்க பூமியா? யார் உனக்குப் பட்டா போட்டுக் கொடுத்தது ? உன் பாட்டனா? இது எல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது." அவன் வனத்துறை அதிகாரியாய் மிடுக்குடன் கூற...

"அரசாங்கமா...? உங்க அரசாங்கம் வந்து நூறு, இருநூறு வருசம் இருக்குமா? ஆனா நாங்க வாழையடி வாழையா, தலைமுறை தலைமுறையா இங்கே தான் வாழ்றோம் சாமி. அதாவது மனுசன் பூமியில் தோன்றிய காலத்தில் இருந்து... அதனால் இது எங்க பூமியாக்கும்." அவள் பேசியதை கேட்டு அவனுக்குச் சிரிப்பும் வந்தது. அதேசமயம் அதில் இருந்த உண்மையும் சுட்டது.

"சரிம்மா தாயே... இது உங்க பூமி தான் ஒத்துக்கிறேன்." என்று அவன் சன்ன சிரிப்புடன் ஒத்துக் கொள்ள...

"பாருடா, சாமி உண்மை எல்லாம் பேசுது..." அவள் அவனைக் கேலி செய்ய...

"நீ சொன்னதில் ஒரு விசயம் ஒத்துக் கொள்ள வேண்டியது." அவன் சிரிப்பை அடக்கி கொண்டு சொல்ல...

"என்னது?" அவள் சந்தேகமாய் அவனைப் பார்த்தாள்.

"மனுசன் தோன்றிய காலத்தில் இருந்துன்னு நீ சொன்னியே... அது ஒத்துக் கொள்ள வேண்டியது தான்." என்றவனை அவள் யோசனையாய் பார்க்க...

"குரங்கில் இருந்து தான் மனுசன் உருவானான். அது உன்னைப் பார்த்தால் சர்வ நிச்சயமாய் நம்பத் தோணுது." அவள் மரத்திற்கு மரம் தாவியதை சுட்டிக்காட்டி அவன் கூற... அவள் கோபத்துடன் அங்கிருந்து நகர முற்பட்டாள். கை நீட்டி அவளைத் தடுத்தவன்,

"ஆமா, நவரத்தினக்கல் உனக்கு எதுக்கு?" என்று கேட்க...

"நவரத்திக்கல்லை எல்லாம் சேர்த்து வச்சு ராஜகுமாரனை கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன்." அவள் எகத்தாள குரலில் கூற...

"ராஜகுமாரன் தான் வேணுமா? ஏன் இந்த ஆபிசர் எல்லாம் வேணாமா?" என்று குறும்புடன் கேட்டவனை அவள் திடுக்கிட்டு பார்க்க...

"வேணாமா?" அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியபடி கேட்டவனைக் கண்டு அவளது இதயம் மீண்டும் சத்தமாய் மத்தளம் வாசிக்க ஆரம்பித்தது.

"வேணுமா? வேணாமா?" அவன் ஒற்றையா? இரட்டையா? போட...

"சாமி, உங்க உயரம் வேற... நான் வேற... நான் காட்டுவாசி பொண்ணு. இனிமேல் என் கிட்ட இது மாதிரி எல்லாம் பேசாதீங்க..." அவள் சற்று எச்சரிக்கையுடன் பதில் அளிக்க...

"ம்..." என்றவன் அவளை மேலும் கீழும் பார்த்து, "நீ என் உயரம் இல்லை தான். கொஞ்சம் குள்ளமா தான் இருக்க..." என்று அவன் அவளது உயரத்தை கிண்டலடிக்க...

"நான் குள்ளம் எல்லாம் ஒண்ணும் கிடையாது..." அவன் நினைத்தது போல் அவள் சண்டைக்கு வர... அதைக் கண்டு அவனது உதடுகளில் மந்தகாச புன்னகை தோன்றியது.

"அப்போ என் உயரத்துக்கு நீயும் இருக்க... சரியா?" அவன் பதிலுக்குக் கிடுக்கிப்பிடி போட... அதில் அவள் தான் பேச்சற்று போனாள்.

"பொம்மி, நீ இன்னமும் என் கேள்விக்குப் பதில் சொல்லலை..." என்று கேட்டவன் அவளைப் பார்த்தபடி அவள் அருகே நெருங்கி நின்றான். அவனது அருகாமையில் அவளுக்குத் தான் மூச்சடைத்தது.

"சொல்லு பொம்மி..." என்றவனது விரல்கள் அவளது கன்னத்தை மென்மையாய் வருடியது.

எந்தப் பெண்ணிடமும் இல்லாத ஏதோ ஒன்று அவனை அவளிடம் ஈர்த்தது. இது ஒரு ஆன்மாவின் நீண்ட நாள்

ஏக்கம், கனவு... அது தான் தன்னைச் செலுத்துகிறது என்பதை அவன் அறியவில்லை.

செல்வாவின் ஸ்பரிசத்தில் ஒரு நொடி விழி மூடி நின்ற பொம்மி அடுத்த நொடி நிதர்சனம் முகத்தில் அறைந்ததில் அவள் அவனது கையைத் தட்டிவிட்டு ஓடி விட்டாள்.

"நீ எங்கே ஓடி ஒளிந்தாலும் உன்னைத் தேடி வந்து தூக்குவேன் பொம்மி..." சத்தம் போட்டு கத்தியவன் முகத்தில் புன்னகையே நிறைந்திருந்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 7

ஊர் மக்களும், மலைவாழ் மக்களும் ஒன்று திரண்டு அங்குக் கூடியிருந்தனர். அவர்கள் முன் செல்வா நின்றிருந்தான். அவன் அருகில் முத்து நின்று கொண்டு கூட்டத்தைப் பார்த்திருந்தான். சுபத்ராவும் அங்குத் தான் இருந்தார். மகன் முன்னெடுக்கும் இந்த விசயத்தில் அவருக்குப் பெரிதும் உடன்பாடு இருந்ததால் அவரும் அவனுடன் வந்திருந்தார்.

"நான் எதுக்காக உங்களை எல்லாம் இங்கே அழைச்சு இருக்கேன்னு தெரியுமா?" என்று கேட்டபடி கூட்டத்தைப் பார்த்தவனின் பார்வை அங்குக் கூட்டத்தோடு கூட்டமாக மாயி அருகில் நின்றிருந்த பொம்மியின் மீது படிந்தது. அவனது பார்வை தன் மீது படிவதை கண்டு அவள் பயந்து போனாள்.

'ஆத்தி, சாமியோட பார்வை நம்ம மேல விழுதே... எதுக்கா இருக்கும்?' என்று நினைத்தபடி அவளும் அவனைப் பார்த்தாள்.

அந்தக் கள்வனோ யாரும் பார்க்காதவாறு அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான். அவனது செய்கையைக் கண்டு இன்னமும் பயந்து போனவள் தனது அன்னையின் பின் சென்று மறைந்து கொண்டாள். அப்போது தான் செல்வா ஆற்றங்கரையில் வைத்து அவளிடம் கேட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஒருவேளை அதுக்காக இருக்குமோ? என்று அச்சத்தில் உறைந்தவள் மெல்ல தலையை நீட்டி அவனைப் பார்த்தாள். அவனோ அவளைக் கண்டு கள்ளச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தபடி தனது பேச்சினை தொடர்ந்தான்.

"அடுத்த வாரத்தில் இருந்து இங்கே இருக்கும் பள்ளிக்கூடம் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும். நீங்க எல்லாம் உங்க வீட்டுப் பிள்ளைங்களைப் படிக்க அனுப்பணும்." என்று அவன் வேண்டி கேட்டுக் கொள்ள... அவன் கூறியதை கேட்ட

பொம்மி நிம்மதி பெருமூச்சு விட்டாள். அதைக் கண்டவனின் உதட்டோரம் குறும்பு சிரிப்பில் துடித்தது.

"வீட்டில் இருக்கும் அத்தனை பேரும் உழைச்சா தான் பாதி வயிறாவது நெறையுது சாமி. அப்படி இருக்கச்சே புள்ளைங்களை எப்படிப் படிக்க அனுப்ப?" அங்கிருந்த ஒருவன் குரல் கொடுத்தான். அவனது வீட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் பத்து... கணவன், மனைவி மற்றும் அவர்களது எட்டுக் குழந்தைகள்... அதனால் அவன் அப்படிப் பேசினான்.

"ஏப்பு... நீ வதவதன்னு பெத்து போட்டதுக்கு நாங்க என்ன பண்ணுவோம். அரசாங்காமே நாம் இருவர், நமக்கு இருவர்ன்னு தானே சொல்லுது. அப்படி நீ பெத்திருந்தா இப்போ மொத்தம் நாலு பேர் தான் இருந்திருப்பீக. உன்னோட தனிப்பட்ட வருமானமே உன்னோட குடும்பத்துக்குப் போதுமானதா இருந்திருக்கும்." முத்து அவனைக் கண்டு கடிந்தார். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். அவனும் சிரித்தபடி அசடு வழிந்தான்.

"படிச்சு என்னத்த கிழிக்கப் போகுதுங்க...?" பெருசு ஒன்று ரவுசு விட்டது.

"அது படிச்ச பின்னாடி சொல்லுங்க..." செல்வா புன்னகையுடன் பதில் அளித்தான்.

"தம்பி, உன்னைய மாதிரி எங்கூட்டு புள்ளைங்க பெரிய ஆபிசரு ஆகுமுங்களா...?" பெண்ணொருத்தி ஆசையுடன் கேள்வி கேட்க...

"நீங்க படிக்க வைச்சா நிச்சயம் ஆபிசர் ஆகும்ங்க..." செல்வா உறுதியாய்க் கூறினான்.

அவனது பதில் பல பெண்களுக்குப் பிடித்திருந்தது. அதில் சில ஆண்களும் அடக்கம். அவர்களது வீட்டுப் பிள்ளைகள் இது போல் பெரிய அதிகாரியாக வந்தால் அவர்களுக்குப் பெருமை அல்லவா. அனைவரும் யோசித்துக் கூறுவதாய்க் கூறினர்.

இவை அனைத்தையும் கந்தன் அடக்கப்பட்ட கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அவரது தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் அனைவரும் இங்கு உள்ளவர்களே. அதிலும் சிறுவர்களுக்குக் குறைவான ஊதியம் கொடுத்து அதிக வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் எல்லாம் படிக்கப் போனால் அவரது தொழில் பாதிக்கப்படுமே. அதைவிட அவர் தனது பணத்தை அல்லவா இழக்க நேரிடும். அதனால் அவர் செல்வா மீது கடுங்கோபத்தில் இருந்தார். அவனை எரித்துவிடுவது போல் பார்த்தபடி சென்று விட்டார்.

முத்துச் செல்வாவிடம் வேங்கையனை சுட்டிக்காட்டி, "இந்த விசயத்தில் இவர் மட்டும் கொஞ்சம் வித்தியாசமானவர். இவர் தன்னோட புள்ளைய டாக்டருக்கு படிக்க வச்சியிருக்கிறாரு." என்று பெருமையுடன் கூற... அதைக் கேட்டு செல்வா ஆச்சரியப்பட்டுப் போனான்.

"அப்படியா? கேட்கவே ரொம்பச் சந்தோசமா இருக்கு..." என்றவன் நேரே வேங்கையனிடம் வந்தான். வேங்கையன் கேள்வியாக அவனைப் பார்த்தான்.

"அது ஒண்ணும் இல்லை வேங்கையா... நம்ம புள்ள டாக்டருக்கு படிச்சு இருக்குல்ல. அதைச் சார் கிட்ட சொன்னேன்." முத்து ஈயென்று இளித்தபடி கூறினான்.

"எம்புள்ளைய நான் படிக்க வைக்கேன். இதில் என்ன இருக்கு?" வேங்கையன் முறைத்தபடி பதில் கூற...

"என்ன இருக்கா? நீங்க சத்தம் இல்லாம சாதனை பண்ணியிருக்கீங்க சார்." செல்வா அவனது கரத்தை பற்றிக் குலுக்கினான்.

அவனது திடீர் செயலில் வேங்கையன் திகைத்து போய் அவனைப் பார்த்தான். செல்வாவின் புன்னகை வேங்கையனின் முரட்டு மனதை அசைத்துப் பார்த்தது. அவனையும் அறியாது அவனது கை உயர்ந்து செல்வாவின் கன்னத்தைத் தட்டியது. செல்வா அவனை ஆச்சரியமாகப் பார்க்க... வேங்கையன் சிறுபுன்னகையுடன் செல்வாவின்

தோளை தட்டி கொடுத்துவிட்டு சென்றுவிட்டான். அவனைத் தொடர்ந்து ராசைய்யாவும் சென்றுவிட்டான். முத்து கூட ஆச்சரியத்தில் அசந்து போய் நின்றான்.

"மச்சா, நீ பண்ணியது கொஞ்சமும் சரியில்லை. அவனைப் பார்த்து சிரிச்சிட்டு வர்ற. விட்டா அவனுக்குப் பொண்ணு கொடுப்ப போலிருக்கு..." ராசைய்யா கோபத்தோடு முணுமுணுத்தான்.

"கொடுத்தா என்ன மாப்ள...?" வேங்கையனின் கேள்வியில் திகைத்து போன ராசைய்யா தனது நடையை நிறுத்திவிட்டு வேங்கையனை திரும்பி பார்த்தான்.

"என்ன சொல்ற மச்சா...?"

"அவம்... அவரு... என்ன தான் இருந்தாலும் நம்ம செல்லியோட..." அதற்கு மேல் பேச முடியாது வேங்கையனுக்குத் தொண்டை அடைத்தது. அவனது விழிகள் கலங்கி போனது.

"மச்சா..." ராசைய்யா ஆதரவாய் அவனது தோளை பற்றிக் கொண்டான். வேங்கையனின் இந்தப் பரிமாணம் அவனுக்குப் புதிது.

"செல்லிக்காக எதையும் மன்னிக்கலாம். எதையும் மறக்கலாம்." என்ற வேங்கையனின் கூற்றை ஆமோதிப்பது போல் அவனை அணைத்துக் கொண்டான் ராசைய்யா. இருவரது மனதிலும் செல்லியின் நினைவுகளே ஓங்கியிருந்தது.

************************

செல்வா தனது ஜீப்பில் காட்டைச் சுற்றிக் கொண்டிருந்த போது அங்கு நடுத்தர வயது தம்பதியினர் நடந்து செல்வதைக் கண்டான்.

"முத்து, வண்டிய நிறுத்து..."

ஜீப் நின்றதும் இறங்கியவன் அவர்களைக் கண்டு, "யார் நீங்க? எதுக்காக இங்கே வந்திருக்கீங்க...?" என்று கேட்க...

"என் பேரு மாலன். இவள் என் மனைவி தேவி. எங்களுக்குப் பல வருசங்களா குழந்தைகள் இல்லை. நாங்க போகாத கோவில் இல்லை. பார்க்காத டாக்டர்ஸ் இல்லை. ஒரு பலனும் இல்லை. அப்போ தான் இந்த ஊரை பற்றிக் கேள்விப்பட்டு இங்கே வந்தோம்." அவர் கூறியதை கேட்டு விழிகளைச் சுருக்கியவன்,

"எனக்குத் தெரிஞ்சு இங்கே அப்படி எதுவும் மருத்துவம் பார்க்கிற இடம் இல்லையே." என்று அவரிடம் கூறியவன் முத்துவிடம் திரும்பி,

"அப்படி யாரும் இங்கே இருக்காங்களா?" என்று கேட்க...

"இப்போ யாரும் சித்த மருத்துவம் பார்க்கிறது இல்லையே. எல்லாம் ஆங்கில மருத்துவம் தான்." முத்துவுக்கும் அஅது பற்றி எதுவும் தெரியவில்லை.

"உங்களைப் பார்க்கவே களைப்பா இருக்கிற மாதிரி இருக்கு. வாங்க என்னுடைய வீட்டுக்கு போகலாம்." என்றவன் அவர்களை அழைத்துக் கொண்டு தனது வீட்டிற்கு வந்தான்.

அவர்களை வரவேற்ற சுபத்ரா இருவருக்கும் பசியாற உணவு அளித்தார். அவர்கள் வந்த நோக்கம் அறிந்தவராய் அவர் பேச ஆரம்பித்தார்.

"முப்பது வருசத்துக்கு முந்தி நீங்க சொன்ன மாதிரி சித்த மருத்துவம் இங்கே பார்த்தாங்க. எத்தனையோ குழந்தை இல்லாத தம்பதிகளுக்குக் குழந்தை கிடைச்சியிருக்கு. பெரிய பெரிய டாக்டர்ஸ் எல்லாம் கைவிட்டவங்களுக்கு இங்கே வந்து சிகிச்சை எடுத்துக்கிட்ட பிறகு குழந்தை பிறந்திருக்கு." என்று அவர் சொன்னதும் அந்தத் தம்பதியினர் முகத்தில் வெளிச்சம் பரவியது.

"ஆனா இப்போ மருத்துவம் செஞ்சவங்க உயிரோடு இல்லை." என்றதும் அவர்களது முகம் இருண்டு போனது. அவர்களது கடைசி நம்பிக்கையும் கைவிட்டு போயிற்றே...

"ம்மா, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" செல்வா கேட்டதும் சுபத்ராவின் முகம் இருண்டு போனது.

"எல்லாம் ஒரு ஜீகே தான்டா..." என்றபடி அவர் அவனது தலையில் செல்லமாய்க் கொட்டினார்.

அன்றிரவு அந்தத் தம்பதியினர் அங்கேயே தங்கினர். மறுநாள் காலையில் பார்த்த போது அவர்கள் அங்கு இல்லை. செல்வா பதறி போய் எல்லா இடங்களிலும் அவர்களைத் தேட துவங்கினான். அப்போது வீரா பதறிக் கொண்டு அங்கு ஓடி வந்தான்.

"ஐயா, ஆத்தங்கரை ஓரமா பெட்டி, பை எல்லாம் கிடக்குதுங்க. யாரோடதுன்னு தெரியலை. ஆத்துல வேற தண்ணி அதிகமா போகுது. எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு." என்று அவன் மூச்சு வாங்க கூற... அடுத்த நொடி செல்வா, முத்து, வீரா மூவரும் அங்கு விரைந்தனர்.

அவர்கள் அங்குச் சென்று பார்த்த போது அந்தப் பெட்டி, பையை நன்கு அடையாளம் தெரிந்தது. அது அந்தத் தம்பதியினருக்கு சொந்தமானது. செல்வா ஓடி சென்று பார்த்தான். பெட்டி மீது ஒரு கடிதம் வைக்கப்பட்டு இருந்தது. அது பறந்து செல்லாமல் இருப்பதற்காக அதன் மேல் கல் ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. குழந்தை இல்லாத காரணத்தால் மனம் வெறுத்துப் போய்த் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இருவரும் எழுதியிருந்தனர். அதைப் படித்த செல்வாவின் மனம் கனத்துப் போனது. ஆற்றில் இறங்கி அவர்களைத் தேடும் பணியை அவன் முடுக்கி விட்டான். சுமார் மூன்று மணி நேரம் தேடி பின்னரே அவர்களது உடலை கைப்பற்ற முடிந்தது. செல்வா தானே மகனாக முன்னிருந்து அவர்களது இறுதி காரியத்தைச் செய்தான்.

இதை எல்லாம் பார்த்தபடி மௌனமாய்க் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் செல்லி. இப்படி ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்பதற்குத் தானே அவள் அத்தனை பாடு பட்டாள். அத்தனையும் வீணாகி போனதே. அவளது பார்வை மாயமான் அம்மனின் சிலைக்குப் பின்னே

சென்றது. அங்குப் புதையுண்டு இருக்கும் ரகசியம் வெளிப்பட்டால் தான் இதற்கு ஒரு முடிவு கிடைக்கும். அவள் ஏக்கத்துடனும், கண்ணீருடனும் அந்த இடத்தைப் பார்த்திருந்தாள்.

அன்று செல்வா காட்டைச் சுற்றி கண்காணித்துக் கொண்டிருக்கும் போது பாம்பு ஒன்று அவனைக் கடித்து விட்டது. அவனுக்குச் சுருக்கென்று எதுவோ கடித்தது போலிருந்தது. பெரிதாக வலி எதுவும் தெரியவில்லை. அவன் பாம்பு கடித்த இடத்தைக் கைவிரல்களால் நீவி விட்டுக் கொண்டான். அப்போது தான் முத்து அதைக் கவனித்தான். செல்வாவின் காலில் பாம்பு கொத்தியதற்கான அடையாளம் இருந்ததைக் கண்டு அவன் பதறி போய் விட்டான்.

"சார், உங்களைப் பாம்பு கடிச்சிருச்சு சார்." என்று முத்து அலறினான்.

"என்ன உளர்றீங்க முத்து?" என்ற செல்வா குனிந்து தனது காலை பார்த்தான். அங்குப் பாம்பு கொத்தியதற்கான அடையாளத்தைக் கண்டதும் அவனுக்கு உலகமே சுற்றியது.

"மு...த்...து..." என்று அவனும் பயத்தில் அலறினான். அவனது பணியில் அவனைப் பாம்பு கடிப்பது இதுவே முதல் முறை... அதனால் அவனுக்குச் சற்றுப் பயமாக இருந்தது.

"ஒண்ணுமாகாது சார்... உடனே ஹாஸ்பிட்டல் போயிரலாம்." என்ற முத்து செல்வாவை தாங்கியபடி நடத்தி சென்று ஜீப்பில் அமர வைத்து, தானும் அமர்ந்து ஜீப்பை கிளப்பினான்.

ஐந்தே நிமிடங்களில் மருத்துவமனைக்கு வந்த முத்து செல்வாவை அதே போல் கைத்தாங்கலாக மருத்துவமனையினுள் அழைத்துச் சென்றான்.

"டாக்டர் எங்கே?" எதிர்பட்ட செவிலிப்பெண்ணிடம் கேட்க...

"இருக்கிறதே ரெண்டு ரூம்... அந்த ரூம் உள்ளாற இருக்காங்க..." என்று கேலி செய்து கொண்டே செவிலிப்பெண் அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்றாள்.

அங்குச் சென்று மருத்துவரை கண்ட செல்வா மயக்கம் போட்டு விழாத குறை தான். பாம்பு கடித்த அதிர்ச்சியை விட அந்த மருத்துவரை கண்ட அதிர்ச்சி தான் அவனுக்கு அதிகம் இருந்தது. ஏனெனில் அங்கு மருத்துவராக இருந்தது பொம்மி தான்... அவளோ அவனது அதிர்ச்சியைக் கவனிக்காது முத்துவை கண்டு,

"என்னாச்சு?" என்று கேட்க...

"பாம்பு கடிச்சிருச்சு டாக்டர்..." என்று முத்து கூற...

"என்னது...?" என்று அதிர்ந்தவள் பாம்பு கடிக்கான சிகிச்சையை மேற்கொள்ள ஆரம்பித்தாள்.

சிகிச்சை முடியும் வரை பொம்மி எதுவும் பேசவில்லை. செல்வாவோ பாம்பு கடியை மறந்தவனாய் பொம்மியின் அருகாமையை அணுஅணுவாய் ரசித்துக் கொண்டிருந்தான். பொம்மி மருத்துவம் படித்திருப்பாள் என்று அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

சுமார் இரண்டு மணி நேரம் போராடி அவனைக் காப்பாற்றியவன், "இனி பயப்பட ஒண்ணும் இல்லை. இவரைக் கூட்டிட்டு போங்க." என்று முத்துவிடம் கூற...

"நீ டாக்டருன்னு சொல்லவே இல்லையே பொம்மி..." என்ற செல்வாவின் விழிகள் அவளை ஆசையோடு வருடியது. செல்வாவின் பேச்சு முத்துவை திகைக்க வைத்தது.

"டாக்டருன்னு நெத்தியில் எழுதி வச்சிட்டா சுத்த முடியும் சாமி..." என்று அவள் நக்கலாய் கேட்க...

"முத்து, நீங்க கூடப் பொம்மிய பஜாரின்னு சொன்னீங்களே தவிர... அவள் ஒரு டாக்டர்ன்னு ஏன் சொல்லலை?"

'ஐயோ பயபுள்ள பஜாரி கிட்ட கோர்த்து விட்டிருச்சே.' முத்து பயத்துடன் பொம்மியை பார்த்தான்.

"டாக்டர்ன்னா வாயடிக்கக் கூடாது, தைரியமா இருக்கக் கூடாதுன்னு யாராவது சொல்லியிருக்காங்களா முத்து சார்?"

"அப்படி எதுவும் இல்லையே பொம்மிம்மா..." முத்து அவளைக் கண்டு அசடு வழிந்தான்.

"டாக்டர்ன்னா வாயடிக்கலாம்... தைரியமா இருக்கலாம் தப்பே இல்லை. ஆனா மரத்துக்கு மரம் குரங்கு போல் தாவ கூடாது." செல்வாவின் வார்த்தைகளில் அவளது முகம் சிவந்து போனது. அது கோபத்திலா? வெட்கத்திலா? என்று செல்வா பெரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டான்.

"உங்களைப் போய்க் காப்பாத்தினேன் பாருங்க... என் புத்திய செருப்பால அடிக்கணும்." அவள் கோபமாய்க் கூற...

"உனக்குப் பதில் என்னையும், செருப்புக்குப் பதில் உன்னுடைய கையைக் கொண்டு என்னை அடித்தால் அடியேன் பாக்கியசாலியாவேன்." என்று இளித்தான் செல்வா.

"சார், ரொம்ப முத்தி போச்சு. நாம கிளம்பலாம், வாங்க." முத்து அவனை அழைத்துச் செல்ல முற்பட்டான்.

"இப்போ கிளம்பறேன். பிறகு வருவேன். என் கேள்விக்குப் பதில் வாங்காம ஓய மாட்டேன்." என்றவன் அவளிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்.

பொம்மி ஓய்ந்து போனவளாய் நாற்காலியில் அமர்ந்தாள். ஆனாலும் செல்வா கூறியது குறித்து அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'டாக்டருக்கு படித்தால் தொட்டில் பழக்கத்தை விட்டு விட முடியுமா?' சிறுவயதில் அன்னையின் அடிக்கு பயந்தே அவள் மரத்துக்கு மரம் தாவ பழகியிருந்தாள். அந்த நினைவில் அவளது இதழ்களில் புன்னகை பூத்தது.

**************************

"வசந்தா, அவன் உயிரோட இருக்கக் கூடாது. அவன் என் குலத்துக்கே அவமானம்டா. அவன் உயிரோட இருக்கும் வரை நான் தோத்தது தான் எனக்கு ஞாபகம் வருது." என்ற கந்தனின் விழிகளில் பழிவெறிப் பளபளத்தது. அவருக்கு ஏனோ செல்லி தன்னைப் பழிவாங்க காத்திருப்பதாகத் தோன்றியது. அவள் தன்னைப் பழிவாங்கும் முன் அவர் அவளைப் பழிவாங்க எண்ணினார். அதன் விளைவு அவர் செல்வாவை அழிக்க நினைத்தார்.

"அவனைப் போட்டு தள்ள வேண்டியது என் பொறுப்பு. நீங்க கவலைப்படாதீங்க." என்று வசந்தகுமார் தகப்பனுக்கு ஆறுதல் கூறினார். அன்றே செல்வாவிற்கு நாள் குறிக்கப்பட்டது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 8

செல்வா அலுவலக வேலையாகப் பக்கத்து ஊருக்கு சென்றுவிட்டு திரும்பி கொண்டிருந்தான். அப்போது போகும் வழியில் பேருந்து ஒன்று பழுதாகி நின்று கொண்டிருப்பதைக் கண்டவன் முத்துவிடம் ஜீப்பின் வேகத்தைக் குறைக்கச் சொல்லி அங்கே போகச் சொன்னான். அங்கு நின்றிருந்த பயணிகளுள் பொம்மியும் இருந்தாள். நாகரீக முறையில் புடவை உடுத்தி இருந்தவளின் அழகு அவனை விருப்பமாய்க் கிறக்கியது. அவள் அவனைக் கண்டும் காணாதது போல் நின்றிருந்தாள்.

"முத்து, நம்ம ஊருக்குப் போறவங்களை எல்லாம் கூப்பிடுங்க." பொம்மிக்கு உதவுவதற்காக அவன் அப்படிச் சொன்னான்... முத்துவும் அதையே பயணிகளிடம் கூற... அங்கிருந்த பத்துப் பயணிகள் ஜீப்பில் தொற்றி கொண்டனர். பொம்மி மட்டும் ஏறாது நின்றிருக்க...

"அவங்களுக்குத் தனியா சொல்லணுமா முத்து? அவங்களையும் வர சொல்லுங்க." செல்வா பொம்மியை பார்த்தபடி முத்துவிடம் கூற... அவளோ ஏறாது அவனை முறைத்து பார்த்தாள்.

"பொழுது சாயப் போகுது முத்து. சீக்கிரம் வர சொல்லுங்க..."

"முத்து சார், வா வான்னா... எங்கே ஏறி உட்கார்றது?" அவள் கடுப்புடன் செல்வாவை பார்த்தபடி கேட்டாள். அப்போது தான் செல்வா திரும்பி பின்னால் பார்த்தான். ஆண்களும், பெண்களும் ஜீப்பின் பின்பகுதியை அடைத்துக் கொண்டு அமர்நதிருந்தனர்.

"அப்போ சரி... முன்னால் உட்காருங்க..." என்றவன் தன்னருகில் இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டி கண்சிமிட்டினான்.

"சார் நீங்க வேணா வண்டிய ஓட்டுங்க. நான் பின்னால் உட்கார்றேன்."

"அங்கே இடமில்லையே முத்து."

"உட்கார இடம் இல்லைன்னா என்ன... கம்பியை பிடிச்சிட்டுத் தொத்திக்கிறேன். நீங்க கவலைப்படாதீங்க..." என்ற முத்துப் பின்னால் சென்று ஏறிக் கொள்ள...

செல்வா ஓட்டுநர் இருக்கையில் அமரவும் அவனது இருக்கையில் பொம்மி வந்து அமர்ந்தாள். செல்வா சன்னமாகச் சீட்டிகை அடித்தபடி வண்டியை ஓட்டினான். அவளது அண்மையில் அவனது மனம் முகவரி தொலைத்த கடிதமாய் அங்குமிங்கும் அவஸ்தையுடன் அல்லாடியது. காதலில் மது உண்ட மந்தியாய் மயங்கி இருந்த செல்வா தன்னெதிரே வந்த லாரியை கவனிக்காது போனான்.

வசந்தகுமார் ஏற்பாடு செய்திருந்த லாரி செல்வாவின் ஜீப்பை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் வசந்தகுமார் நடக்கவிருக்கும் விபத்தைத் தனது அலைப்பேசியில் பதிவு செய்வதற்காகத் தனது காரில் காத்திருந்தார். செல்வாவை காக்கும் கடவுளாகச் செல்லி இருக்கும் வரை அவனது உயிருக்கு ஆபத்து நேருமோ...! அவளது ஒற்றைப் பார்வையில் அங்கு மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்று லாரியின் குறுக்கே செல்ல... லாரி ஓட்டுநர் மாட்டின் மீது மோதாமல் தவிர்ப்பதற்காக லாரியை மறுபக்கம் திருப்பினார். அப்போது லாரி கட்டுப்பாட்டை இழந்து அந்தப் பக்கம் சாலையோரம் நின்றிருந்த வசந்தகுமாரின் காரை அடித்துத் தூக்கியது. அதில் வசந்தகுமார் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கண்ணெதிரே நடந்த விபத்தில் செல்வா பதறிக் கொண்டு ஜீப்பை நிறுத்திவிட்டு விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓட... அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் ஓடினர்.

"பொம்மி, உயிர் இருக்கறவங்களை மட்டும் செக் பண்ணி சொல்லு... க்விக்..." என்று அவன் அவளை

அவசரப்படுத்தினான்.

அவளும் எல்லோரையும் பரிசோதித்து விட்டு உயிருக்காகப் போராடி கொண்டிருப்பவர்களை அடையாளம் காட்ட... அவர்களை அள்ளி போட்டுக் கொண்டு ஜீப் மருத்துவமனையை நோக்கி பறந்தது. உடன் பொம்மியும் சென்றாள்.

வசந்தகுமார் இறந்த விசயம் கந்தனுக்குச் சொல்லப்பட்டது. அதுவும் செல்வா தான் அவரிடம் போய்ச் சொன்னான். யாரின் உயிரை பறிக்கச் சொன்னாரா... அவனே அவரது மகனின் இறப்பை பற்றிச் சொன்னது அவருக்கு அத்தனை ஆத்திரமாக வந்தது. மகன் இறந்தது ஒரு புறம், மறுபுறம் தான் மீண்டும் மீண்டும் தோற்றுக் கொண்டே இருப்பதினால் எழுந்த ஆவேசம் எல்லாம் சேர்ந்து அவரது பழிவெறியை அதிகரித்தது.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதை அவர் அறிந்திருக்கவில்லையோ...!!!

நாட்கள் அதுபாட்டிற்கு உருண்டு சென்றது. செல்வாவின் காதலில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. அவனும் மௌனமாக, செயலாக, சொல்லாக அவனது காதலை பொம்மிக்கு உணர்த்திக் கொண்டே தான் இருக்கின்றான். ஆனால் அவள் ஏனோ அவனுக்குப் பதில் கூற மறுக்கிறாள். இதோ இப்போதும் அவனது பார்வை பொம்மியை ரசனையுடன் வருடி கொண்டிருந்தது. ஊரில் இருக்கும் சிறுவர்களுக்கு மாலை நேரத்தில் வகுப்பு எடுப்பதைப் பொம்மி மற்றும் சுபத்ரா தங்களது பகுதி நேர வேலையாகப் பார்த்து வந்தனர். அவர்களுக்குத் துணைக்கு இரண்டு ஆசிரியர்கள் இருந்தனர்.

அப்படிப்பட்ட ஒரு அழகான மாலை நேரம் தான் இது... அன்னையை அழைத்துச் செல்ல வந்த செல்வா ஜீப்பில் சாய்ந்தபடி பொம்மியை ரசித்துக் கொண்டிருந்தான். மாலை நேரத்து இளம் மஞ்சளுக்கு ஏற்றார் போன்று மஞ்சள் நிற புடவையில் இருந்தவளின் அழகு அவனது சித்தத்தைக் கலக்கி பித்தம் கொள்ள வைத்தது. அவன்

அவளைப் பார்ப்பதை யாரும் உணராதபடி அவனது விழிகளைக் குளிர் கண்ணாடி மறைத்து இருந்தது. சிறிது நேரத்தில் பொம்மியும், சுபத்ராவும் தங்களது வேலை முடிந்து வந்தனர்.

"வர்றேன்ம்மா..." என்று சுபத்ராவிடம் பொம்மி விடைபெற்றாள்.

"வானம் இருட்டிட்டு வருது. நீயும் எங்க கூட வாம்மா... நாங்க கொண்டு போய் உன்னை விட்டுர்றோம்." சுபத்ரா அவளை அழைத்தார்.

"இல்லைம்மா வெரசா போயிருவேன்." என்று மறுத்துவிட்டு அவள் நடையை எட்டி போட்டாள்.

அதைக் கண்டு செல்வாவுக்குக் கோபம் வந்த போதும் அன்னையின் முன் ஒன்றும் கூறாது அமைதியாக அன்னையை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

பொம்மி தனது இருப்பிடத்தை நோக்கி விரைவாக நடந்தாள். அதற்குள் மழை சடசடவென்று பிடித்துக் கொண்டது. அப்போது அவள் அருகே ஜீப் வந்து நின்றது. வேறு யார்... செல்வா தான்...

"ஏறு பொம்மி..." என்று அவன் அழைத்தான். அன்னையை விட்டு விட்டு உடனே வந்திருப்பான் போலும்...

"வேண்டாம்... உங்க கூடப் போய் இறங்கினா எங்காளுங்க தப்பா நினைப்பாங்க..."

"யாரும் தப்பா நினைக்க மாட்டாங்க... வா..."

அவள் அவனைக் கண்டு கொள்ளாது நடக்கத் துவங்க... அவன் கோபத்துடன் இறங்கி வந்து அவளது கையைப் பற்றி இழுத்தான். அதில் அவள் பூமாலையாய் அவளது நெஞ்சில் வந்து விழுந்தாள்.

"சொன்ன பேச்சு கேட்க மாட்டியா?" அவன் அவளைக் கடிந்தான்.

அவளோ பேச்சற்று போய் அவனைப் பார்த்து விழித்தாள். அப்போது தான் அவனும் அவளது ஸ்பரிசத்தை உணர்ந்தான். அடுத்த நொடி அவனது கைகள் அவளை இறுக அணைத்தது. அதில் அவளது திகைப்பு இன்னுமும் அதிகரித்தது.

"என்னால் கண்ட்ரோல் பண்ண முடியலைடி..." என்றவன் அவளது முகத்தை நோக்கி குனிந்தான்.

"வேண்டாம்..." என்று நடுங்கிய குரலில் கூறியவள் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்ன வேண்டாம்? நானா...?" அவனது குரல் கோபத்தில் கர்ஜித்தது.

அதற்கு 'இல்லை' என்று அவள் தலையாட்டினாள்.

"அப்போ...?" அவளது பதிலில் அவனது கோபம் சிறிது குறைந்திருந்தது.

"இந்தக் காதல்,கல்யாணம்..." என்றவளை கண்டு அவனது கைகள் தளர்ந்தது.

"ஏனோ...?" அவன் அவளைக் கூர்மையுடன் பார்த்தான்.

"ஏனெனில் அனுபவம் அப்படி..." கண்ணீர் மல்க அவனைப் பார்த்தவள் பின்பு அங்கிருந்து ஓடி விட்டாள்.

'பொம்மி ஏற்கெனவே யாரையும் காதலித்து இருப்பாளோ?' அவனது மனம் வேதனையில் கசங்கியது.

எப்படியோ வீடு வந்து சேர்ந்தவன் உண்ணாது அப்படியே அறைக்குச் சென்றுவிட்டான். அவளது வார்த்தைகளே அவனது காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்தது. நீண்ட நேரம் யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான். அவளது இறந்தகாலம் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டு போகட்டும். ஆனால் அவளது நிகழ்காலம், எதிர்காலம் எல்லாம் அவனாக இருப்பான். இருக்க வேண்டும் என்று அவன் உறுதியாக எண்ணி கொண்டான். அதன் பிறகே உறக்கம் அவனைத் தழுவியது.

வீட்டிற்கு வந்த பொம்மியின் கைகள் அதுபாட்டிற்கு வேலையைச் செய்து கொண்டிருந்தாலும் அவளது மனம் செல்வாவை நினைத்துக் கொண்டிருந்தது. அவனது விழிகளில் வழியும் காதல் பொய்யில்லை. அவனது அன்பு பொய்யில்லை. அப்படியே அவன் அவளை நேசிப்பது பொய்யாக இருந்தாலும்... அவன் இந்த ஊரை, காட்டை நேசிப்பது பொய்யில்லையே. அவன் இதற்காக ஆற்றிய பங்கு அளப்பரியது. அவன் இந்த வனத்தைப் பாதுகாப்பதிலேயே அவனது நேர்மையான குணம் தெரிந்து போனது. அப்படிப்பட்ட ஒருவனின் அன்பு கிடைக்க அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால் காதல் என்ற ஒற்றைச் சொல் அவளுக்கு வேம்பாகக் கசந்தது. அந்தக் காதலால் அவளது குடும்பம் மட்டுமல்ல, அவளது சமூகமே அழிந்து போனது. நூறு குடும்பங்களாய் இருந்த அவர்களது இனம் இப்போது வெறும் இருபது குடும்பங்களாய் மாறியதற்குக் காரணம் பாழாய் போன இந்தக் காதல்...

'வேண்டாம் இந்தச் சுயநல காதல்.' என்று அவள் தனது மனதினை திடப்படுத்திக் கொண்டாள். அவளுக்கு அவனைப் பிடித்திருந்த போதும் அவளது இனத்திற்காக அவள் தனது மனதினை மறைத்து கொண்டாள்.

**********************

நாளை இந்தியா செல்வதற்காக வேண்டி பெட்டியில் உடைமைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான் ராகேஷ். அலமாரியில் இருந்து மகனது டீசர்ட்டை எடுத்து நீட்டிய செந்தில் அவன் அருகில் அமர்ந்தார்.

"அப்போ இந்தியா போகணும்ன்னு தீர்மானிச்சிட்ட..."

"எஸ் டாட்... இவ்வளவு பெரிய விசயத்தை இவ்வளவு சாதாரணமா போட்டு வச்சிருக்கீங்களே. இது பத்தி ஆராயத்தான் நான் போவதே." என்ற மகனை பார்த்த செந்தில்,

"இது எல்லாம் என் ஆராய்ச்சியோட முடிவுகள். ஆனால் நீ தேடி போக வேண்டியது வேறு..." என்று மர்மமாய்க் கூற...

"என்ன டாட்...?"

"நீ தேடி போக வேண்டியது புதையல்... சித்த மருத்துவக் குறிப்புகள் அடங்கிய புதையல்... என் கைக்குச் சிக்காது அந்தக் காட்டில் எங்கோ மறைந்து கிடக்கும் அந்தப் புதையலை நீ தேடி கண்டுபிடித்து எடுத்து வரணும். அது மட்டும் நம்ம கையில் கிடைத்தால் மருத்துவ உலகம் நம் கையில்..." என்று கூறிய செந்திலின் விழிகள் ஆசையில் பளபளத்தது.

"ஷ்யூர் டாட்..." அவனும் கண்கள் பளபளக்க கூறினான். அப்போது செந்தில் தனது கையிலிருந்த வரைபடத்தை மகனிடம் நீட்டினார்.

"என் வாழ்க்கையின் இருண்ட பக்கத்தை நான் சொல்லிட்டேன். அதை வெளிச்சமாக்குவது உன் கையில் தான் இருக்கு. அதற்குக் காரணமானது இந்தப் பகுதியில் தான் இருக்கணும். இதை விட்டுப் போயிருக்க வாய்ப்பு இல்லை."

"ஒருவேளை வெளியில் போயிருந்தால்..." ராகேஷ் சந்தேகமாய்க் கேட்டான்.

"ம்ஹூம், வேறெங்கும் போக வாய்ப்பில்லை." என்று உறுதியாக மறுத்தார் செந்தில்.

"ஓகே டாட்... நீங்க விட்டதை நான் பிடிச்சிட்டு வர்றேன். என்னை வாழ்த்தி அனுப்புங்க..." ராகேஷ் அட்டகாசமாகப் புன்னகைதான்.

"ஜெயம் உண்டாகட்டும்." என்ற செந்திலின் முகத்தில் பெருமிதம் துளிர்த்தது.

அடுத்த மூன்று நாட்களில் ராகேஷ் மலையூர் வந்து சேர்ந்தான். அவனுக்கு வழிகாட்டுவதற்கு ஒருவன் உடன் வந்திருந்தான். ஏனெனில் ராகேஷ் இங்கு ஆராய்ச்சி

செய்வதற்காக அரசாங்கத்திடம் முறைப்படி அனுமதி பெற்று வந்திருந்தான். அதனால் அவன் நேரே அந்த வனத்தின் அதிகாரியான செல்வாவிடம் அழைத்து வரப்பட்டான். செல்வா ராகேஷின் அனுமதி கடிதத்தைப் பார்த்துவிட்டு அவனை உள்ளே அழைக்க... செல்வாவை கண்ட ராகேஷ் அதிர்ந்து போனான்.

"வாங்க மிஸ்டர். ராகேஷ்..." செல்வா இன்முகத்துடன் அவனை வரவேற்றான். அதில் சுதாரித்துக் கொண்ட ராகேஷ்,

"ஹாய் செல்வா..." என்க... அவனை அமர சொன்ன செல்வா அவனைப் பற்றி விசாரிக்கலானான். ராகேஷ் பட்டும் படாமல் தன்னைப் பற்றிச் சொன்னான். அப்படியே அவனைப் பற்றி முழுவதும் சொன்னாலும் கூடச் செல்வாவிற்கு அவன் யாரென்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

"அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த நீங்க இங்கே மருத்துவ ஆராய்ச்சி பண்ண வந்திருக்கிறது எங்களுக்கு எல்லாம் பெருமையா இருக்கு. ரொம்பச் சந்தோசம்." என்று செல்வா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

'இல்லை செல்வா... இவன் மருத்துவ ஆராய்ச்சி பண்ண வரலை... நம்ம நாட்டுப் பொக்கிசத்தைத் திருடிட்டு போக வந்திருக்கிறான்.' என்று செல்லி கூக்குரலிட்டாள். பாவம், அவளது குரல் செல்வாவின் காதுகளில் எட்டவில்லை.

"நம்ம நாட்டில் இத்தகைய அரிய மருத்துவம் இருப்பது குறித்து எனக்குமே பெருமையா இருக்கு." என்று ராகேஷ் சிரித்துக் கொண்டே சொன்னான். அவன் வெளியில் சிரித்தாலும் அவனது மனதிற்குள் பல யோசனைகள் ஓடியது.

"எனக்குத் தங்குவதற்கு ஏற்பாடு பண்ணினால் மட்டும் போதும்."

"அப்போ சாப்பாடு...?" செல்வா கேள்வியாகப் பார்த்தான்.

"முக்கால்வாசி பழங்கள் தான் சாப்பிடுவேன். இல்லைன்னா டின் ஃபுட்." என்ற ராகேஷை கண்டு புன்னகைத்த செல்வா,

"யுவர் விஷ்..." என்றவன் முத்துவை அழைத்து ராகேஷிற்கு வேண்டிய உதவிகளைச் செய்யச் சொன்னான்.

தனக்கு ஒதுக்கப்பட்டு இருந்த குடிலுக்கு வந்த ராகேஷ் முதலில் செய்த வேலை தந்தைக்கு அழைத்தது தான். காணொளி மூலம் அலைப்பேசியில் தோன்றிய தந்தையிடம் அவன் பேச துவங்கினான்.

"என் கிட்ட பேசுறதுக்கு முன்னாடி நான் அனுப்பி இருக்கும் ஃபோட்டோவை பார்த்துட்டு பேசுங்க டாட்..."

"அப்படி என்ன ஃபோட்டோ?" செந்தில் சிரித்தபடி கேட்டார்.

அடுத்த நொடி அவரது அலைப்பேசிக்கு ஒரு புகைப்படம் வந்தது. அதைத் திறந்து பார்த்தவர் அதிர்ச்சியில் உறைந்தார்.

"டாட்..." ராகேஷ் உரக்க அழைக்கவும் செந்தில் அதிர்ச்சியில் இருந்து மீண்டு,

"இது எப்படிச் சாத்தியம்?" என்று கேட்க...

"ஹா ஹா... என் கிட்ட கேட்டால்... இதுக்கு நீங்க தான் பதில் சொல்லணும்." என்ற ராகேஷின் குரலில் கிண்டல் வழிந்தது.

"நீ அங்கே இருக்க வேண்டாம் ராகேஷ். முதலில் கிளம்பி இங்கே வா..."

"டாட், நீங்க சொல்றது சின்னப்பிள்ளைத்தனமா இல்லை. இதுக்கு எல்லாமா ஓடி ஒளிந்து கொள்ள முடியும்? வரும் வழியில் அவனைப் பற்றி எல்லாம் விசாரித்து விட்டேன். அவனோட அப்பா பெயர் திருவேங்கடம். அம்மா பெயர் சுபத்ரா. இப்போது அவனது உலகம் வேறு. அவனது நினைவு வேறு. அதனால் அவனைப் பற்றி நீங்க கவலைப்படத் தேவையில்லை. நமக்கு வேண்டியது

மருத்துவப் புதையல். அதில் மட்டுமே கவனத்தைச் செலுத்தணும். அதைக் கம்பேர் பண்ணும் போது இவன் எல்லாம் நத்திங் டாட்." அவன் தகப்பன்சாமியாகத் தந்தைக்கு அறிவுரை வழங்கினான். அதை ஏற்றுக் கொண்ட செந்தில் அமைதியாகி போனார்.

"சீக்கிரம் வேலையை முடித்துக் கொண்டு வா... யாரிடமும் நீ யார் என்கிற அடையாளத்தைக் காட்ட வேண்டாம்."

"ஓகே டாட்... பை..." என்ற ராகேஷ் அழைப்பை துண்டித்தான்.

அனைத்தையும் கேட்ட செல்லி ஒரு முடிவுக்கு வந்தாள். அது செந்திலை இங்கு வரவழைக்கும் திட்டம். அதுவும் ராகேஷை வைத்து... அந்தத் திட்டம் தோன்றியதும் செல்லியின் பழிவெறி அதிகரித்தது.

மறுநாள் காலையில் விடிந்த போது ராகேஷ் இருந்த குடில் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயிருந்தது. ஆம், திடுமென ஏற்பட்ட மண் சரிவில் ராகேஷ் இருந்த குடில் முற்றிலும் மண்ணில் புதையுண்டு போனது. ராகேஷ் நல்லவனோ? கெட்டவனோ? ஆனால் அவனது எண்ணமே அவனது அழிவிற்குக் காரணமாகி போனது.

விசயம் கேள்விப்பட்ட செந்தில் அதிர்ந்து போனார். சாந்தியோ அழுது கரைந்து கொண்டிருந்தார். அருமை பெருமையாய் வளர்ந்த ஒரே மகன் அல்லவா... அந்தக் கணம் எதையும் யோசிக்காது செந்தில் தனது அலைப்பேசியை எடுத்து ஒரு எண்ணிற்கு அழைத்தார். மறுமுனை எடுத்ததும்,

"அப்பா, நான் செந்தில்குமார் பேசுறேன்..." என்று கூற...

மறுமுனையில் அதைக் கேட்ட கந்தனின் உடல் சிலிர்த்து அடங்கியது. எத்தனை வருடங்கள் கழித்து அவரது செல்ல மகன் அழைத்து இருக்கிறான். அவனது உயிரை காப்பாற்றவே அவர் அவனுடன் தொடர்பில்லாது இருந்தார். அவனையும் தொடர்பு கொள்ள விடவில்லை. அவனுக்குத்

திருமணமாகி மகன் இருக்கிறான் என்று செவி வழி செய்தியாகக் கேள்விப்பட்டதோடு சரி... அவனைப் பார்க்க அவர் முற்பட்டதே இல்லை. அப்படிப்பட்ட மகன் இன்று அழைத்திருக்கிறான்.

"செந்தில் எப்படிப்பா இருக்க...?" கந்தனின் குரல் தழுதழுத்தது.

"ப்பா, உங்க பேரன்..." மேலே பேச முடியாது செந்தில்குமார் தேம்ப...

"என் பேரனுக்கு என்னாச்சு...?" கந்தனின் குரல் நடுங்கியது. அவரையும் அறியாது அவரது மனக்கண்ணில் செல்லியின் முகம் வந்து போனது. கூடவே செல்வாவின் பிம்பமும்...

செந்தில்குமார் ராகேஷ் இந்தியா வந்த விசயத்தை அவரிடம் கூற... கந்தனோ செய்வதறியாது ஸ்தம்பித்துப் போனார். எந்த மாதிரியான நேரத்தில் ராகேஷ் இங்கு வந்திருக்கிறான்!

"இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னே மண் சரிவில் ராகேஷ் இறந்துட்டதா செய்தி வந்தது."

"இல்லை செந்தில் இல்லை. இது அந்தச் செல்லியோட வேலை தான். அவள் தான் உன் மகனை கொன்னு இருக்கணும்."

"செல்லியா?" செந்தில்குமார் அதிர்ந்தார்.

"ஆமா..." என்றவர்,

"நீ இங்கே வர வேண்டாம். உன்னையும் இழக்க நான் விரும்பலை." என்று கூற...

"அதெல்லாம் முடியாதுப்பா... இப்படித் தான் அப்பவும் என்னைப் பயமுறுத்தி அமெரிக்கா போக வச்சீங்க... இப்பவும் வர விடாம பண்றீங்க... அப்பவே இதுக்கு ஒரு முடிவு கட்டியிருந்தா வீணே என் மகனை நான் இழுந்திருக்க

மாட்டேன்." என்ற மகனை என்ன செய்வது என்று அறியாது கந்தன் முழிக்கும் போதே அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

அடுத்தச் சில மணித்துளிகளில் விமானத்தில் ஏறியமர்ந்த செந்தில்குமாரின் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. அதே போல் அவருக்காகப் பழிவெறியுடன் காத்திருந்த செல்லியின் நினைவிலும் கடந்தகாலக் கண்ணீர் தடங்களே நிறைந்திருந்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 9

முப்பது ஆண்டுகளுக்கு முன்...

"செந்தில், எப்படிய்யா இருக்க...? ஒரு எட்டு ஊருக்கு வந்துட்டு போ... பார்த்து ரொம்ப நாளாச்சு." என்று கந்தன் தனது மூத்த மகனிடம் வாஞ்சையுடன் கூறிக் கொண்டிருந்தார். தொலைப்பேசி மட்டுமே புழக்கத்தில் இருந்த காலகட்டம் அது...

"இன்னும் ஒரு மாசத்தில் படிப்பு முடிய போகுதுப்பா... மேற்படிப்புக்கு அமெரிக்காவுக்குப் போகும் வரை உங்க கூடத்தான் இருக்கப் போறேன்." என்ற மகனின் வார்த்தையில் அந்தத் தந்தையின் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

இருக்காதா பின்னே... மருத்துவப் படிப்புக்காகப் பட்டணம் சென்ற மகன் கடந்த ஐந்து வருடங்களாக இங்கு வருவது இல்லை. அவ்வப்போது இவர் போய் அவனைப் பார்த்துவிட்டு வருவது உண்டு. இல்லையெனில் அவனுடன் தொலைப்பேசியில் உரையாடுவார்.

சொன்னது போல் செந்தில்குமார் ஒரு மாதம் கழித்து ஊருக்கு வந்தார். இருபத்துமூன்று வயது இளைஞனாகக் கம்பீரமாக அழகாய் இருந்த மூத்த மகனை கண்டு கந்தனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. மகன் சாதாரணப் படிப்பு படிக்கவில்லையே. மருத்துவம் அல்லவா படித்திருக்கிறான்.

"அப்பா, எப்படி இருக்கீங்க?" என்று கேட்டபடி அவர் அருகில் வந்து அமர்ந்தான் செந்தில்குமார்.

"நல்லா இருக்கேன்ய்யா..." என்றவரின் பார்வை மகனை வாஞ்சையுடன் வருடியது.

"வசந்தன் எங்கே...? அவனுக்கு லீவு இல்லையா?"

"இல்லைப்பா... பரீட்சைன்னு அவன் வரலை..."

"ஓ... அக்கா குடும்பம் எதுக்கு வந்திருக்காங்க?" கந்தனின் ஒன்றுவிட்ட சகோதரனின் மகள் அங்கு வந்திருந்தாள்.

"நம்ம தங்கத்துக்கு ரொம்ப வருசமா குழந்தை இல்லையில்ல. இங்கே வந்து சித்த மருத்துவம் எடுத்துக்கிட்ட பிறகு தான் கரு தரிச்சிருக்கா. அதான் மாயம்மாவுக்கு நேர்த்திக் கடன் செலுத்த வந்திருக்காள்."

அதைக் கேட்ட செந்தில்குமார் யோசனையில் ஆழ்ந்தான். அவன் மருத்துவ மேற்படிப்புக்கு தேர்ந்தெடுத்து இருக்கும் துறை மகப்பேறு துறை. அதனால் அவன் அது சம்பந்தமான சித்த மருத்துவத்தைத் தனது தொழிலோடு சேர்ந்து யோசித்தான். இந்தச் சித்த மருத்துவத்தின் சூட்சமத்தை மட்டும் அவன் அறிந்து கொண்டால் அவன் தான் உலகின் புகழ் பெற்ற மகப்பேறு மருத்துவராகத் திகழ்வான். சித்த மருத்துவ மருந்து தயாரிப்பின் மூலம் அவன் உலகில் மிகப் பெரிய பணக்காரன் ஆகலாம். அவனது ஆசையின் அளவு அதிகரித்துக் கொண்டே போனது.

மறுநாள் செந்தில்குமார் காட்டை நோக்கி பயணம் மேற்கொள்ளலானான். கந்தன் மகனை மிகவும் எச்சரித்தே அனுப்பினார். மலைவாழ் மக்களிடம் எந்த வம்புக்கும் போகக் கூடாது என்று... அப்படி அவர்களிடம் வம்பு பண்ணினால் கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டார்கள் என்று மகனிடம் எச்சரிக்கை செய்தார். அவனும் சரியென்று தலையாட்டி விட்டுக் கிளம்பினான்.

அடர்ந்த காட்டின் நடுவே மலைவாழ் மக்களின் வசிப்பிடம் இருந்தது. இயற்கையோடு இயற்கையாகப் பின்னி பிணைந்திருந்தது அவர்களது வாழ்க்கை... அவர்களின் தலைவர் காளி... அவருக்கு வேங்கையன் என்ற மகனும், செல்லி, மைனா என்று இரு மகள்களும் இருந்தனர். காட்டாற்றில் குளிக்கப் போன அவரது மனைவியை வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டது. மனைவி இறந்த பின் காளி தனது மக்களைத் தாயுமானவனாய் வளர்க்க ஆரம்பித்தார். வேங்கையன் சற்று முரடன்... ஆனால் வீரன்... அவரது தலைமை பொறுப்புக்கு ஏற்றவன்... மைனா, அவள்

உண்டு, அவள் வேலை உண்டு என்று அமைதியாக இருப்பவள்...

செல்லி, இவள் மட்டுமே காளியை உயிர்ப்புடன் வைத்திருப்பவள். அவரிடம் இருந்து சித்த மருத்துவம் கற்றுக் கொண்டு அவருக்கு உதவியாக இருப்பவள்... சில சமயங்களில் அவள் அவருக்கே அறிவுரை வழங்குபவள்... மாயம்மாவே தனக்கு மகளாக வந்து பிறந்திருப்பதாய் அவர் பூரித்துப் போவார். திருமணம், தாம்பத்திய வாழ்க்கை பற்றிய புரிதல் இல்லாத இந்த இளம் வயதில் அவள் அது சம்பந்தமாக மருத்துவம் பார்ப்பது எல்லோருக்குமே வியப்பை அளிக்கும். அவள் தொட்டது எல்லாம் துவங்கியது. எவ்வளவு சிக்கலான பிரசவங்களும் அவள் கைப்பட்டால் சுகப்பிரசவமாகி விடும்.

"அந்த மாயம்மாவே உன் ரூபத்தில் வந்து உதவி செய்யுது தாயி." மலைவாழ் மக்கள் அவளைத் தெய்வமாக எண்ணி வணங்குவார்கள். உயிர் அளிப்பது தெய்வத்தின் பணி என்றால்... மருத்துவம் பார்த்து உயிர் கொடுக்கும் அவளும் தெய்வம் தான் அல்லவா...

"அப்படி எல்லாம் இல்லை... நானும் உங்களைப் போல் சாதாரணப் பெண் தான்..." என்று அவள் அவர்களது அதீத மரியாதையை மறுத்துவிடுவாள்.

அப்படிப்பட்ட செல்லி நட்புடன் பழகுவது வீராவிடம் மட்டுமே... வேங்கையன் தனது மாமன் மகனான ராசைய்யாவுடன் சுற்றிக் கொண்டு இருப்பான். மைனா அவளது தோழி மாயியுடன் விளையாடி கொண்டிருப்பாள். செல்லி வயது ஒத்த பெண்கள் எல்லாம் அவளைத் தெய்வமாகக் கருதியதால் அவளுடன் சகஜமாகப் பழக மாட்டார்கள். வீரா மட்டுமே அவளுடன் இயல்பாகப் பழகுவான். அதனாலேயே அவளுக்கு வீராவை மிகவும் பிடிக்கும். அவளுக்கு வீராவை பிடிக்கின்ற காரணத்தால் ராசைய்யாவுக்கு வீராவை பிடிக்காமல் போனது. வீராவும், செல்லியும் காதலிக்கிறார்களோ என்கிற சந்தேகமே

அதற்குக் காரணம்... அவர்களது தூய நட்பு பற்றி ராசைய்யாவுக்குத் தெரியவில்லை.

"வீரா, ஒரு பந்தயம்... ஆத்து வெள்ளத்தில் நீச்சலடிச்சு போய் அக்கரையைத் தொட்டு யார் வர்றாங்கன்னு பார்க்கலாமா?"

"ஜெயிச்சா என்ன தருவ?" வீரா அவளைப் பார்த்து கேட்டான்.

"நீ கேட்கிறதை தருவேன்." யோசித்தபடி செல்லி கூறினாள்.

"அப்புறம் பேச்சு மாறக் கூடாது."

"ம்ஹூம், மாட்டேன்." செல்லி காது தொங்கட்டான் ஆட தலையை வேகமாய் இங்கும் அங்கும் ஆட்டியவள் அவனைக் கண்டு,

"சரி, நான் ஜெயிச்சா... நீ எனக்கு என்ன தருவ?" என்று கேட்க...

"என் கிட்ட ஒரு ரூபா தான் இருக்கு புள்ள. அது மட்டும் கேட்டுறாதே." அவன் தனது வேட்டியில் முடிந்திருந்த இருந்த ஒரு ரூபாய் நாணயத்தைத் தொட்டு பார்த்துச் சொன்னான்.

"ச்சீய், யாருக்கு வேணும் உன் பணம்...? எனக்கு வேண்டியது எல்லாம் அதோ அங்கே இருக்கு பாரு..." சற்று தள்ளி தெரிந்த மலை உச்சியை நோக்கி கை காட்டியவள்,

"மலை மேல இருக்கிற சிவப்பு பூவை நீ எனக்காகப் பறிச்சிட்டு வரணும்." அவள் ஆசையுடன் கேட்டாள்.

"அந்த மலை மேலயா?" வீரா ஆயாசத்துடன் மலை உச்சியைப் பார்த்தான்.

"ஆமா... நீ பேச்சு மாறக் கூடாது." என்று அவள் கூற...

"பார்ப்போம் புள்ள..." என்றவன் நீச்சலடிக்கத் தயாரானான்.

தனது ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து குழி தோண்டி புதைத்து வைத்தவன், "நான் தயார்..." என்று போட்டிக்கு அறிவிப்பு கொடுக்க... அவனது முஸ்தீபுகளைக் கண்டு செல்லி வாய்விட்டு சிரித்தாள்.

"எதுக்குச் சிரிக்கிற புள்ள...? ஒத்த ரூபாய்க்கு எத்தனை தேன் மிட்டாய் வாங்கித் திங்கலாம் தெரியுமா?" அவன் நாக்கை சப்பு கொட்டி கொண்டு கூற...

"அதில் ரெண்டு மிட்டாயை எனக்குத் தரணும் வீரா..."

"உனக்கு இல்லாததா செல்லி..." அவன் கூறியது கேட்டு அவள் பூரித்துப் போனாள்.

செல்லி சொன்னபடி அவள் தான் பந்தயத்தில் ஜெயித்தாள். வீரா அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"கட்டாயம் அந்தப் பூ தான் வேணுமா புள்ள...?"

"ஆமா வீரா... அங்கே சித்தர்கள் உலாவுறதா சொல்லிக்கிறாங்க. அந்தப் பூக்கள் எல்லாம் அவங்க கைப்பட்டது. பொக்கிசமா பாதுகாக்கணும்."

தோழிக்காக அவன் அந்த மலையை நோக்கி சென்றான். அவளது ஆசையை அவனால் மறுக்க முடியவில்லை. அந்தப் பூவை பற்றிக் கூறும் போது அவளது விழிகள் இருந்த சந்தோசத்திற்காகவே அவன் அவள் விரும்பியதை செய்ய எண்ணினான்.

ஈர பாவாடையை நெஞ்சு வரை ஏற்றி கட்டி கொண்டு, மற்ற ஈர துணிகளைத் தோள் மீது போட்டுக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்த செல்லியை நோக்கி மைனா ஓடி வந்தாள்.

"செல்லி, உன்னைய எங்கே எல்லாம் தேடுறது? வெரசா வா புள்ள..."

"எதுக்கு மைனா...?"

"வந்து பாரு... உனக்கே புரியும்." என்று சொல்லியபடி மைனா உடன் நடந்தாள்.

அங்கு அவர்களது குடிசை முன் ராசைய்யாவின் பெற்றோர் அமர்ந்து இருந்தனர். அவர்களைக் கண்டதும் இரு கரம் கூப்பி வணங்கிய செல்லி,

"வாங்க மாமோய், வாங்க அயித்த..." என்று வரவேற்க...

"செல்லி எம்புட்டு அழகா இருக்கா..." ராசைய்யாவின் அம்மா அவளைக் கண்டு புகழ...

"அப்போ நான் அழகா இல்லையா அயித்த...?" மைனா செல்லமாய்ச் சிணுங்கினாள்.

"நீயும் அழகு தான் தாயி..." அவர் சின்ன மருமகளையும் விட்டு தரவில்லை.

"என்னமோ புதுசா பார்க்கிற மாதிரி சொல்லுற புள்ள..." ராசைய்யாவின் தந்தை தனது மனைவியைக் கிண்டலடித்தார்.

"செல்லி நம்ம வீட்டுக்கு மருமகளா வர போறாளே... அது செய்தி புதுசு தானே." ராசைய்யாவின் அன்னை சிரித்தபடி கூற... அதைக் கேட்டு செல்லிக்கு திக்கென்று இருந்தது.

"நீங்க சொல்லுங்க மாப்ள... ராசைய்யாவுக்கு வயசு ஏறிட்டே போகுது. செல்லியும் சமைஞ்சு மூணு வருசமாச்சு. ரெண்டு பேருக்கும் சட்டுபுட்டுன்னு கண்ணாலத்தை முடிச்சிட்டா நாம நிம்மதியா இருக்கலாம்." என்று ராசைய்யாவின் தந்தை கூறிக் கொண்டிருக்கும் போதே வேங்கையனும், ராசைய்யாவும் அங்கு வந்து சேர்ந்தனர். தனது திருமணப் பேச்சை அறிந்த ராசைய்யா வெட்கம் கொண்டான். அவனது பார்வை திருட்டுத்தனமாகச் செல்லியை பார்த்தது.

"நீ நடத்து மாப்ள..." வேங்கையன் அவனது தோளை இடித்துச் சிரித்தான்.

"சும்மாயிரு மச்சான்..." ராசைய்யா வெட்கத்துடன் முணுமுணுத்தான்.

செல்லியோ செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள். அவளுக்குத் திருமணத்தில் அவ்வளவாக நாட்டம் இல்லை. அவளுக்கு மருத்துவச் சேவை செய்வதில் தான் மிகுந்த ஈடுபாடு... மாயம்மா காலடியில் அமர்ந்து காலம் முழுவதும் மருத்துவம் பார்க்க வேண்டும். அப்படி மருத்துவம் பார்க்கும் போதே அவளது உயிர் பிரிய வேண்டும் என்கிற ஆவல் உடையவள் அவள்...

"செல்லிக்கு இப்போ தான் பதினாறு வயசு ஆகுது." காளி யோசித்தார். இங்கு வயது பிரச்சனை அல்ல... பாசமே பிரச்சனையாக இருந்தது. மகளைப் பிரிய அவருக்கு மனம் வரவில்லை. மூன்று மக்களில் செல்லி அவரது செல்ல பிள்ளை அல்லவா...

"நம்ம சாதி சனத்தில் பொட்டப்புள்ளைங்க வயசுக்கு வந்தோடன கட்டி கொடுக்கிறது வழமை தானே அண்ணோய்." ராசைய்யாவின் தாயார் காளியிடம் கேட்டார்.

"இப்போ அரசாங்கமே பொம்பள புள்ளைக்குப் பதினெட்டு வயசு ஆகணும்ன்னு சொல்லுதே." காளி மிகவும் தயங்கினார்.

"அரசாங்கம் என்ன பெரிய அரசாங்கம்... நாம பட்டினி கிடந்தா அரசங்கமா வந்து நமக்குக் கஞ்சி ஊத்துது. நம்மை அழிக்கிறதுல முனைப்பா இருக்கிறது அரசாங்கம் தான் அண்ணோய்."

"அயித்த நான் சொல்றேன்னு கோவிச்சுக்கக் கூடாது..." செல்லி பெரும் பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

"நீ சொல்லி நான் கோவிப்பேனா கண்ணு. நீ சொல்லு தாயி..." ராசைய்யாவின் தாய் அவளுக்குச் சம்மதம் சொன்னார்.

"எனக்குக் கண்ணாலத்துல விருப்பம் இல்லை. ஆயுசு பூரா மருத்துவம் பார்த்துட்டு மாயம்மா காலடியில் உயிரை

விட்டுரோணும். அது ஒண்ணு தான் என்னோட ஒரே ஆசை." என்றவளை கொலைவெறியுடன் பார்த்தான் ராசைய்யா.

"பொய் சொல்லாத புள்ள." அவன் கோபமாய்க் கத்தினான்.

"நான் எதுக்குப் பொய் சொல்ல போறேன்... உண்மையைத் தான் சொல்றேன்."

"நீயும் வீராவும் காதலிக்கிறீங்க... அவனைக் கட்டிக்கிறதுக்காக நீ என்னைத் தவிர்க்கிற..." அவன் பட்டென்று கூற... அதைக் கேட்டு அனைவரும் அதிர்ந்து போனார்கள். ராசைய்யாவின் பெற்றோருக்கு கூட அந்தப் பேச்சு ருசிக்கவில்லை.

"ஏலேய் என்ன பேச்சு பேசுறன்னு புரிஞ்சிட்டு தான் பேசுறியா? அதுவும் செல்லியை பார்த்து நாக்குல நரம்பு இல்லாம பேச உன்னால் எப்படி முடிஞ்சது? குனிஞ்ச தல நிமிராம நடக்கிற புள்ள நம்ம செல்லி... அதைப் பார்த்து என்ன வார்த்தை சொல்லிட்ட...?" ராசைய்யாவின் அன்னை அவனைக் கடிந்தார். பின்பு காளியிடம் திரும்பி,

"அண்ணோய், எம் மவனுக்குப் பதிலா நான் மாப்புக் கேட்டுக்கிறேன். செல்லி பத்தி எங்களுக்குத் தெரியாதா? அவன் கண்ணாலம் நடக்கலைங்கிற கோவத்துல இப்படிப் பேசிப்புட்டான். அவனை நான் கண்டிக்கிறேன். எத்தனை வருசம் ஆனாலும் செல்லி தான் எங்கூட்டு மருமக... அதில் எந்த மாற்றமும் இல்லை." என்றவர் கணவனையும், மகனையும் அழைத்துக் கொண்டு சென்று விட்டார்.

"அப்போய், ராசைய்யாவுக்கு என்ன குறைச்சல்...? அவனைக் கட்டிக்கிட செல்லிக்கு ஏன் கசக்குதாம்?" வேங்கையன் நண்பனுக்காக வக்காலத்து வாங்கினான்.

"செல்லிக்கு இதில் விருப்பம் இல்லையே வேங்கா..."

"அதுக்காகக் காலம் பூரா பொட்ட புள்ளைய கண்ணாலம் கட்டி கொடுக்காம வீட்டோட வச்சிக்கிற போறீகளா?" என்று அவன் சுள்ளென்று கேட்டுவிட்டு சென்றுவிட்டான்.

வீட்டில் சூழ்நிலை சரியில்லாததால் மைனா தனது தோழியைப் பார்க்க நைசாக நழுவி விட்டாள். எஞ்சி இருந்தது காளியும், செல்லியும் தான். அவள் தனது தந்தையின் காலடியில் அமர்ந்து அவரது மடியில் தலை வைத்து படுத்தவள்,

"அப்போய், உனக்கு எது விருப்பமோ அதை நீ செய்... அதுக்கு நான் கட்டுப்படுறேன்." என்றவளது விழியில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"அழுறியா தாயி..." காளியின் கை விரல்கள் மகளின் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தது.

"பொண்ணா பொறந்ததை நெனச்சு அழுறியா செல்லி..."

"இல்லைப்போய்... உன்னைத் தலைகுனிய வச்சிட்டேனேன்னு அழுறேன்." என்று தேம்பியவளை ஆறுதலாய் அணைத்து கொண்டவர்,

"உம் மனசுக்கு எது சரின்னு படுதோ அதைச் செய் தாயி. நீ எப்பவும் சரியா தான் நெனப்ப... ஏன்னா நீ மாயம்மாவோட மறு அவதாரம்." என்றவரது முகத்தில் பூரிப்புத் தெரிந்தது. தெய்வமே மகளாகத் தனக்குப் பிறந்திருப்பதை எண்ணி வந்த பூரிப்பு அது...

"எல்லாப் பொண்ணுங்க மாதிரியும் எனக்கு ஏனோ கண்ணாலத்துல ஆசை இல்லை. நான் கண்ணாலம் பண்ணி புள்ள பெத்துக்கிட்டா தான் என் புள்ளையா? நான் பிரசவம் பார்க்கிற ஒவ்வொரு புள்ளையும் என்னோட புள்ளை தான். புத்தம் புது மலரா பொறந்த குழந்தையைக் கையில் தூக்கும் போது நானும் தாய்மையை உணர்றேன். பெறாமலே தாய்மை அடைஞ்சிட்டேன் அப்போய்..." மகிழ்வுடன் கூறிய மகளைக் கண்டு அவருக்குப் பெருமிதமாக இருந்தது.

அவரது மருத்துவத் தொழிலை நேசிக்கும் மகளை அவருக்குப் பிடிக்காது இருக்குமா? அவருக்குப் பின் மருத்துவத்தை யார் பார்க்க போகிறார்களோ? என்று

கவலைப்பட்டுக் கொண்டிருந்தவருக்குச் செல்லி பெருத்த ஆறுதலை அளித்தாள்.

அப்போது தொங்கி போன முகத்துடன் வீரா அங்கு வந்து சேர்ந்தான். அவனது கை, கால்களில் எல்லாம் சிராய்ப்பு ஏற்பட்டு இருந்தது.

"என்னாச்சு வீரா?" என்று கேட்டபடி எழுந்த செல்லி காயத்திற்குப் போடும் பச்சிலை களிம்பை எடுத்துக் கொண்டு அவனை நோக்கி சென்றாள்.

"செல்லி..." அவன் ஏதோ பேச வர... அதைத் தடுத்தவள்,

"முதலில் காயத்தைக் காட்டு..." என்றவள் அதில் களிம்பை பூசிவிட ஆரம்பித்தாள்.

"எங்கே போய் விழுந்துட்டு வந்த...?"

"நீ கேட்ட சிவப்பு பூவை பறிக்கப் போனேனா... அங்கே மண் சரிஞ்சு..."

"ஐயோ..." என்றவளது விழிகள் கலங்கி போனது.

"எனக்குத் தான் ஒண்ணும் ஆகலையே புள்ள..." அவளது கலக்கம் கண்டு அவன் ஆறுதலாகப் புன்னகைத்தான்.

"அப்படி மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா..." அவளது கலக்கம் தீரவில்லை.

"அநாதை என்னைப் பத்தி கவலைப்பட யாரு இருக்கா புள்ள... யாரும் என்னைத் தேட கூட மாட்டாக." அவன் அசால்ட்டாகக் கூற...

"நான் உசுரோட இருக்கும் போது நீ உன்னை அநாதைன்னு சொல்லுவியா? நான் உன்னைத் தேட மாட்டேனா..." செல்லி கோபமாய்க் கேட்டபடி அவனை அடிக்க வந்தாள்.

"ஆத்தி, பாதகத்தி பொண்ணு என்னை அடிச்சு கொல்ல பார்க்குதே. மாமோய் இந்த அநியாயத்த நீ தட்டி கேட்க

மாட்டியா?" என்று அவன் அலறிக் கொண்டு வெளியில் ஓட...

"நான் தட்டி கேட்கிறேன்டா..." என்றவள் அவனைத் துரத்தி கொண்டு ஓடினாள்.

இருவரது நட்பையும் புன்னகையுடன் பார்த்தபடி அமர்ந்திருந்தார் காளி. அப்போது ராசைய்யா கூறிய வார்த்தைகள் அவரது காதுகளில் ஒலித்தது.

"கள்ளம் இல்லாத வெள்ள மனசு கொண்ட புள்ளைகளைப் பார்த்து உன்னால் எப்படிச் சந்தேகப்பட முடிஞ்சது ராசைய்யா? சந்தேகம் தீரா உயிர்கொல்லி நோய் ராசைய்யா..." என்று முணுமுணுத்து கொண்டவர் ராசைய்யாவுடனான செல்லியின் திருமணப் பேச்சை அப்போதே முறித்து விட்டார். மகளை நன்கு புரிந்து கொண்டவனுக்கே அவளைக் கட்டி கொடுக்க வேண்டும் என்று அவர் முடிவு எடுத்து விட்டார்.

"டேய் வீரா, நில்லு..." நண்பனை துரத்தி கொண்டு ஓடி வந்த செல்லி எதன் மீதோ மோதி நின்றாள்.

'இங்கன மரம் கூடக் கிடையாதே...' என்று நினைத்தபடி நிமிர்ந்தவள் அங்கு நின்றிருந்த செந்தில்குமாரை கண்டு திகைத்தாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 10

பொதுவாக அவர்களது காட்டிற்கு அந்நிய மனிதர்கள் அவ்வளவாக வருவது கிடையாது. அப்படியே வந்தாலும் மருத்துவம் பார்ப்பதற்காக மட்டுமே இருக்கும். அவர்களுக்கும் மாயமான் அம்மன் கோவில் வரை அனுமதி உண்டு... அதற்கு மேல் வருவதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை. அதை நினைத்தபடி பார்த்திருந்தவள் பின்பு,

"மாப்பு கேட்டுக்கிடதேன் சாமி..." என்று அவனிடம் மன்னிப்பு கேட்டவள் மீண்டும் தனது நண்பனை துரத்தி கொண்டு ஓடினாள்.

"ச்சே..." அருவருப்புடன் தனது சட்டையை உதறி விட்டுக் கொண்டான் செந்தில்குமார். ஏனெனில் செல்லி முகத்தில் பூசியிருந்த மஞ்சள் அவனது சட்டையில் லேசாக ஒட்டி கொண்டது. அதிலும் அவன் சாதி, அந்தஸ்து பார்ப்பவன்... கந்தனின் இரத்தம் அவனது உடம்பிலும் ஓடுகிறதே... அதை மாற்ற யாராலும் முடியாது.

காட்டைச் சுற்றி திரிந்து கொண்டிருந்தவனை அந்த மக்கள் அவர்களது தலைவனான காளியிடம் அழைத்து வந்தனர். காளி அவனை ஏற இறங்க பார்த்தார். பார்ப்பதற்குப் படித்துப் பதவிசாக இருக்கும் இந்த இளைஞனுக்கு வனத்தில் என்ன வேலை? அவர் சிந்தனையுடன் அவனைப் பார்த்தார்.

"பார்த்தா படிச்ச புள்ள மாதிரி இருக்கீக... உமக்கு இங்கன என்ன வேலைய்யா?"

"என் படிப்பு சம்பந்தமா இங்கே வந்தேன் ஐயா." பணிவுடன் கூறினான் செந்தில்குமார்...

"படிப்பா...? அப்படி ஒரு படிப்பு இருக்கா சாமி..."

செந்தில்குமார் தனது மருத்துவப் படிப்பை பற்றிச் சொல்ல வந்தவன் பின்பு என்ன நினைத்தானோ... அதைப் பற்றிச் சொல்லாது விடுத்து,

"காட்டு விலங்குகள் பத்தி ஒரு ஆராய்ச்சி கட்டுரை எழுதிட்டு இருக்கேன். அதுக்காக வந்திருக்கேன். இதுக்கு நீங்க தான் உதவி பண்ணணும்."

இது போல் சிலர் இங்கு வந்து தங்கி இவர்களது வாழ்க்கை முறையைப் பற்றி ஆராய்ச்சி செய்துவிட்டு போவது வழமையான ஒன்று தான்... அதனால் காளி அவன் தங்குவதற்குச் சம்மதித்தார். அவர்களது குடிசைக்குப் பக்கத்திலேயே அவனுக்கும் குடில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. செந்தில்குமார் பெண்கள் விசயத்தில் மிகவும் கவனமாக இருப்பவன்... அவன் வந்த நோக்கம் வேறு... அதனால் அவன் தனது கடைக்கண் பார்வையைக் கூடப் பெண்கள் மீது திருப்பவில்லை. அதைவிடக் காட்டுப் பெண்களை அவன் தனக்குச் சமமாக எண்ணவில்லை. அவனது இந்தக் கண்ணியமே அந்த மக்களிடம் அவனுக்கு நன்மதிப்பை பெற்றுத் தந்தது. மண்ணையும், பெண்ணையும் மதிப்பவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்று அவர்கள் தப்பு கணக்கு போட்டு விட்டனர். அவன் மண்ணையும், பெண்ணையும் மதிப்பவன் அல்ல, மிதிப்பவன் என்பதை அவர்கள் காலத் தாமதமாகக் கண்டு கொண்டனர்.

செந்தில்குமார் யாருக்கும் தெரியாது தனது மருத்துவ ஆராய்ச்சியை மேற்கொண்டான். ஆனால் அவனால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறு பச்சிலையைக் கூட அவனால் அடையாளம் காண முடியவில்லை. காளியும், செல்லியும் மட்டுமே மருத்துவம் பார்ப்பதை அவன் கண்டான். காளிக்கு எப்போதும் ஊர் பிரச்சனை பற்றிப் பஞ்சாயத்து இருந்து கொண்டே இருக்கும். அதனால் அந்தப் பதினாறு வயது பாவை தான் மருத்துவம் பார்த்தாள். சிக்கலான விசயங்களையும் அவள் லாவகத்துடன் கையாளுவதைக் கண்டு அவன் வியந்து போனான். மருத்துவரான அவன் கூட இதுவரை ஒரு பிரசவம் பார்த்தது இல்லை. ஆனால் இந்தச் சின்னப் பெண் சிக்கலான பிரசவத்தையும் அசால்ட்டாகக் கையாண்டதை கண்டு அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவள்

ஒருத்தியே மருந்து அரைப்பது, மருத்துவம் பார்ப்பது என்று எல்லாம் செய்தாள். எப்போதேனும் வீராவை துணைக்கு அழைத்துக் கொள்வாள். அதற்குக் காரணம் காளியின் அறிவுரை என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

"இந்த மருத்துவம் வாழையடி வாழையாக நம்ம குலத்துக்கு மட்டுமே சொந்தமா இருந்து வருது. எனக்கு அடுத்து நீ... அதுக்கு அடுத்து உம் புள்ளைங்கன்னு போயிக்கிட்டே இருக்கணும்." என்றவர்,

"இதுக்காகவாவது நீ கல்யாணம் பண்ணிக்கோ செல்லி..." என்று மகளிடம் இறைஞ்சுவார்.

அதனால் தான் சித்த மருத்துவம் பற்றிய குறிப்புகள் மிகவும் ரகசியமாகவே இருந்தது. அன்று அவன் தனது குடிலின் வாசலில் அமர்ந்திருந்த போது கர்ப்பிணி பெண்ணை அங்கே அழைத்து வந்தனர். கர்ப்பிணி பெண் வலியில் துடித்துக் கொண்டிருக்க... அவளது உறவினர்கள் பதட்டத்துடன் இருந்தனர்.

"என்ன விசயமா வந்திருக்கீக...?" என்று கேட்டபடி செல்லி கர்ப்பிணி பெண்ணின் நாடியை பற்றிப் பார்த்தாள்.

"என்னன்னு தெரியலை செல்லி... காலையில் எழுந்ததில் இருந்து வயிறு நோவுதுன்னு அழுதுட்டே இருக்கு." பெண்ணின் தாயார் கலக்கத்துடன் கூற...

செல்லி அந்தப் பெண்ணின் வயிற்றில் கை வைத்து பார்த்தவள் பின்பு புன்னகையுடன், "வயித்துப் புள்ள எசகுபிசகா திரும்பி இருக்கு... அதான் வலி..." என்றவள் உள்ளே சென்று தைல புட்டியை எடுத்து வந்தாள்.

முதலில் கர்ப்பிணியின் புடவையைத் தளர்த்தியவள பின்பு தைலத்தை எடுத்து அந்தப் பெண்ணின் பானை வயிற்றின் மீது ஊற்றி தனது கைகளைக் கொண்டு மெல்ல தடவி கொடுத்தாள். சிறிது சிறிதாக அழுத்தம் கொடுத்து வயிற்று குழந்தையைச் சரியான நிலைக்குக் கொண்டு வந்தவள் பின்பு,

"இனி பிரசவம் வரைக்கும் கவலை இல்லை..." என்று கூறி சிரித்தாள்.

என்னே அதிசயம்! கர்ப்பிணி பெண் வலி மறைந்து சந்தோசமாய்ப் புன்னகை புரிந்தாள். எல்லோரும் நன்றி சொல்லிவிட்டு கிளம்பி செல்ல... செல்லி தனது வேலையைப் பார்க்க சென்றாள். எந்தவித பெருமையும், தலைக்கனமும் இல்லாத அந்தப் பெண்ணைச் செந்தில்குமார் ஆச்சரியமாகப் பார்த்தான். அவளிடம் ஏதோ அதிசயம் ஒளிந்திருப்பதாய் அவனுக்குத் தோன்றியது.

ஒருநாள் அவன் மெல்ல செல்லியிடம் பேச்சுக் கொடுத்தான். பேச்சு அங்கே சுற்றி இங்கே சுற்றி கடைசியில் சித்த மருத்துவத்தில் வந்து நின்றது.

"நீயோ ரொம்பச் சின்னப் பொண்ணா இருக்கே... உனக்கு எப்படி இது எல்லாம் தெரியும்?" என்று அவன் சதாரணமாக வினவுவது போல் வினவினான்.

"எங்கப்பாரு கிட்ட இருந்து கத்துக்கிட்டேன்..."

"உங்கப்பா...?" அவன் கேட்டதும் அவள் சுதாரித்துக் கொண்டு,

"அது வந்து... ஐயோ, அண்ணோய் சாப்பிட வந்திருக்கும். வீட்டில் நான் இல்லைன்னா திட்டும் சாமி. நாம பொறவு பேசலாம்." என்றவள் பதில் அளிக்காது ஓடிவிட்டாள்.

அவன் சினத்துடன் அமர்ந்திருந்தான். அவனும் இங்கு வந்து ஒரு மாத காலமாகி விட்டது. இன்னமும் அவன் சித்த மருத்துவம் பற்றி ஆனா, ஆவன்னா கூட அறிய முடியவில்லை. இப்படியே போனால் சரிப்பட்டு வராது என்று நினைத்தவன் ஒரு விபரீத முடிவுக்கு வந்தான். அதைச் செயலாற்ற அவனுக்குச் சிறிதும் மனமில்லை தான். ஆனால் புகழுக்கும், பணத்திற்கும் ஆசை கொண்ட மனதோ அதற்கு முழுமனதாய்ச் சம்மதித்தது. அதன் விளைவு அவன் செல்லியை தன்வசப்படுத்த நினைத்தான்.

ஆம், ஆண்டாண்டு காலமாய் ஆண் இனம் பெண்களுக்குத் துரோகம் செய்ய எடுக்கும் ஒரே ஆயுதமான காதலை அவன் தனது கையில் எடுத்தான். எதற்கும் படியாத பெண் காதலுக்குப் பணிவது அவளது பலவீன மனதை காட்டுகிறதா? இல்லை அன்புக்கு பணியும் அவளது இளகிய மனதை காட்டுகிறதா? ஏதோ ஒன்று செந்தில்குமார் துரோகம் புரிய துணிந்துவிட்டான். அதன் பிறகு அவன் செல்லியை பின்தொடர ஆரம்பித்தான். அதற்கு அடுத்து வந்த நாட்களில் அவளது ஒவ்வொரு விசயமும் அவனுக்கு அத்துபடியானது. அந்தச் சமயம் பார்த்து வீரா வெளியூர் பயணம் மேற்கொண்டது அவனுக்கு வசதியாகப் போயிற்று. வீரா அவ்வப்போது சித்தர்களைத் தேடி சென்றுவிடுவான். அது அவனுக்குப் பிடித்தமான ஒன்று... அதனால் யாரும் செந்தில்குமார் செல்லியின் பின் சுற்றுவதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

செல்லி நண்பன் இல்லாது தனியாக ஆற்றங்கரையில் தனியே அமர்ந்து சற்று தள்ளி தெரிந்த மலை முகட்டினை பார்த்திருந்தாள். பச்சை வண்ண மலையின் மீது கிரீடம் வைத்தது போல் சிவப்பு நிற பூக்கள் பூத்து அழகாகக் காட்சி அளித்தது. அவளுக்கு அந்தக் காட்சியைப் பார்க்க பார்க்க தெவிட்டவில்லை.

"என்ன பார்த்துட்டு இருக்கச் செல்லி...?" என்று கேட்டபடி அவளுக்கு அருகில் வந்து அமர்ந்தான் செந்தில்குமார். திடுமென ஒலித்த குரலில் திடுக்கிட்டு அவனைத் திரும்பி பார்த்தவள்,

"சும்மா தான்..." என்று கூற...

"பொய்..." என்றவனைக் கண்டு அவள் விழித்தாள்.

"அந்தச் சிவப்பு பூவை பார்த்திட்டு இருந்த... சரியா?" என்று கேட்கவும் அவளது விழிகள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தது.

"உனக்கு அந்தப் பூ வேணுமா?"

முதலில் வேண்டாம் என்று தலையசைத்தவள் பின்பு வேண்டும் என்பது போல் வேகமாகத் தலையை ஆட்டினாள்.

"நான் பறிச்சிட்டு வந்து கொடுக்கவா?"

"நீங்களா...?"

"ம்..." என்றவன், "நான் பூவை பறிச்சிட்டு வந்து கொடுத்தால் நீ எனக்கு என்ன கொடுப்ப...?" என்று அவன் பேரம் பேச...

"என்ன வேணும்?" அவள் அப்பாவியாகக் கேட்க...

"அதை அப்போ சொல்றேன்." என்று வசீகரமாகச் சிரித்தவன் எழுந்து சென்றுவிட்டான்.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் செந்தில்குமாரை காணவில்லை. காளி அவனைத் தேட ஆரம்பித்து விட்டார். எங்கும் வழி தவறி போய் விட்டானோ, காட்டு விலங்குகள் அவனை அடித்துக் கொன்று விட்டதோ? என்று அவர் பயந்து போனார். செல்லிக்கு தானே தெரியும், அவன் எங்கே சென்று இருக்கிறான் என்று... அவள் தினமும் ஆற்றங்கரை வந்து அந்த மலையைப் பார்த்தபடி அமர்ந்து செந்தில்குமாருக்காக வேண்டுவாள். அவளது வேண்டுதல் பலித்தது போல் ஒருநாள் அவன் அவள் கண்முன் தோன்றினான். அவனைக் கண்டதும் அவளது முகம் மலர்ந்து போனது.

"இந்தா வாங்கிக்கோ..." என்றவன் தனது கையிலிருந்த சிவப்புப் பூக்களை அவளிடம் நீட்டினான். சிவப்பு மலர்களை அழகாகப் பூங்கொத்து போல் ரசனையுடன் கட்டி அவளிடம் கொடுத்தான்.

"நன்றி சாமி..." என்றவள் முகம் மலர அதை வாங்கிக் கொண்டவள் அதில் முகம் புதைத்து கொண்டாள். அவள் விழி மூடி பரவசத்துடன் இருப்பதைக் கண்டவன் அந்த வார்த்தைகளை உதிர்த்தான்.

"செல்லி, நீ கேட்டதை நான் கொடுத்த மாதிரி... நான் கேட்டதை நீயும் கொடுப்பியா?" அவனது வார்த்தைகளில் அவள் பட்டென்று விழி திறந்து அவனைப் பார்த்தாள்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?"

"ஆங்..." அவள் அதிர்ச்சியில் வாயை பிளந்தாள்.

"பதில் சொல்லு செல்லி... என்னைக் கல்யாணம் கட்டிக்கிறியா?" மீண்டும் அவன் கேட்க...

"இது சரிப்பட்டு வராதுங்க..." என்றவள் அங்கிருந்து செல்ல முனைந்தாள்.

"ஏன்...?"

"நீங்க வேற இனம்... நான் வேற இனம்..."

"அப்போ இனம் தான் பிரச்சனை. நானில்லை... அப்படித்தானே..." வசீகரமாகப் புன்னகைத்தவனைக் கண்டு அவளது இதயம் தடதடத்தது.

"நானும் உங்க இனமா மாறிட்டா நீ என்னைக் கல்யாணம் பண்ண எந்தத் தடையும் இல்லைல்ல." என்றவனை அவள் திகைப்பாய் பார்த்தாள். இது நடக்கும் காரியமா?

"கண்ணாலம் எல்லாம் அப்பாரு தான் முடிவு பண்ணுவாரு." என்றவள் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

அவள் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்த செந்தில்குமாரின் முகத்தில் வெற்றி புன்னகை தோன்றியது. ராசைய்யாவுடனான திருமணத்தைச் செல்லி மறுத்துப் பேசியதாக அவன் கேள்விப்பட்டு இருந்தான். ஆனால் இப்போது தன்னுடனான திருமணத்திற்கு அவள் சம்மதிக்கவில்லை என்றாலும் மறுக்கவும் இல்லை. அதுவே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது.

ஒருநாள் தந்தையைத் தேடி சென்றவன் செல்லியை தான் திருமணம் செய்யப் போவதாகத் தெரிவித்தான். அதைக் கேட்ட கந்தன் கோபத்தில் கத்தினார்.

"சாதி விட்டு சாதி பண்ற கல்யாணத்தையே எதிர்க்கிறவன் நான்... என் மகன் நீ எப்படி இப்படி ஒரு மலைசாதி பொண்ணைக் காதலிப்ப... நீ அவளைக் கல்யாணம் பண்ணினால் முதல்ல உங்க ரெண்டு பேரையும் கொலை பண்ணிருவேன். என் கௌரவத்தைக் காக்க நான் எதையும் செய்வேன்." என்று அவர் கோபமாய்க் கத்த... அதைக் கேட்டுக் கை தட்டிய செந்தில்குமார்,

"இதை அப்படியே... ஆனால் கொஞ்சம் மாற்றிச் சொல்லுங்க. அதாவது 'நீ என் மகனே இல்லை. நான் உன்னைத் தலை முழுகிட்டேன்' அப்படின்னு அந்த மலைவாழ் மக்கள் முன்னாடி வந்து சொல்லுங்க..."

"செந்தில்..." அவர் திகைப்புடன் பார்த்தார்.

"எனக்கு வேறவழி தெரியலைப்பா... அவளைக் கல்யாணம் என்கிற பெயரில் ஏமாத்தினால் தான் சித்த மருத்துவம் பற்றி முழுதாகத் தெரிந்து கொள்ள முடியும்."

"அப்படி ஒரு மருத்துவம் தேவை இல்லைங்கிறேன்." கந்தன் எரிச்சல் பட்டார். பணத்திற்காகக் கௌரவத்தைக் குழி தோண்டி புதைக்க முடியுமா?

"அப்பா, இதனால் வர கூடிய பணம், புகழ் இதை எல்லாம் நினைச்சு பாருங்க... அது உங்க கற்பனைக்கும் எட்டாத ஒன்று. உலகப் பணக்காரன் பட்டியலில் முதலிடத்தில் வர்றதுக்கு உங்களுக்கு விருப்பம் இல்லையா?" மகன் கூறியதும் அவர் சிறிது யோசித்தார்.

"அதுக்காக மலைசாதி பொண்ணைப் போய் என் மருமகளா..." அது அவருக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை.

"இதுவே பொய் கல்யாணம். அப்படி இருக்கும் போது அவள் எப்படி உங்க மருமகளாவாள்? உங்களது பேர பிள்ளைகள் நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணின் மூலம் தான் வரும். நீங்க கவலைப்பாடதீங்க." என்று விதம் விதமாய்ப் பேசி தகப்பனை கரைய வைத்தான் செந்தில்குமார்.

மறுநாளே கந்தன் காட்டிற்கு வந்து காளியிடம் சண்டை போட்டார். 'பொண்ணைக் காட்டி என் மகனை மயக்கிட்ட' என்று... காளிக்கோ ஒன்றும் புரியவில்லை. வேங்கையன் கந்தனிடம் சண்டைக்கு நின்றான். அப்போது இடைப்புகுந்த செந்தில்குமார்,

"நான் செல்லியை மனதார காதலிக்கிறேன். அவளைத் தான் கல்யாணம் பண்ண விரும்பறேன். இதை எங்கப்பா கிட்ட சொன்னேன். அதான் அவர் கோபப்படுறாரு." என்று கூற...

அதைக் கேட்டுக் காளி அதிர்ந்து போக... வேங்கையனும், ராசைய்யாவும் அவனை அடிப்பின்னி எடுத்து விட்டனர். கோபமாய்த் தடுக்க வந்த கந்தனை செந்தில்குமார் கண்ணால் சைகை செய்து தடுத்து விட்டான்.

"என்னை அடித்தாலும் சரி, கொன்னாலும் சரி... நான் இங்கே தான் இருப்பேன். செல்லிக்காக என் உயிரையும் கொடுப்பேன்." என்று அத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டு, இரத்தம் ஒழுக நின்றவன் அந்த வலியிலும் காதல் வசனம் பேச தவறவில்லை.

"எங்கேடோ கெட்டு போ... இனி நீ என் மகனும் இல்லை. நான் உனக்கு அப்பனும் இல்லை." என்று கந்தன் கோபமாய்க் கத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

காளி செய்வதறியாது எதுவும் பேசாது சென்றுவிட்டார். வேங்கையனும், ராசைய்யாவும் செந்தில்குமாரை முறைத்துவிட்டு சென்றனர். ஆனால் அவன் யாரையும் கண்டு கொள்ளவில்லை. அவனது பார்வை முழுவதும் செல்லி மீதே இருந்தது. அவன் அடி வாங்கும் போது அவளது விழிகளில் தெரிந்த வலி, அவளது பரிதவிப்பு எல்லாம் அவனுக்கு அவளது மனதினை வெளிச்சம் போட்டுக் காட்டியது. அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்றிரவு செந்தில்குமார் தனது குடிலில் படுத்திருந்த போது அதன் கதவு மெல்ல திறக்கும் ஒலி கேட்டது.

அவனுக்குத் தெரியும், செல்லி எப்படியும் தன்னைக் காண வருவாள் என்று... அதனால் தான் கதவை தாழிடாது வைத்திருந்தான். அவன் நினைத்ததைப் போல் அவளும் அவனைத் தேடி வந்துவிட்டாள். அவன் புன்னகையுடன் அரை விழி மூடியபடி அவளைப் பார்த்திருந்தான். செல்லி அவன் அருகில் அமர்ந்து தனது கையில் இருந்த பச்சிலை களிம்பை எடுத்து அவனது நெற்றியில் இருந்த காயத்தில் தடவினாள். அவன் சட்டென்று அவளது கையைப் பற்றிக் கொண்டான்.

"ஐயோ... விடுங்க சாமி..." என்று அவள் பதற...

"வாழ்க்கை பூரா உன் கைப்பிடிக்க ஆசைப்படுற என்னைப் பார்த்து விட்டுருன்னு சொல்றியே செல்லி..." அவனது வார்த்தைகளில் அவளது விழிகள் கலங்கியது.

"நடக்கிற காரியமா இருந்தா பேசுங்க சாமி..."

"நடக்கும்... நடக்காம விட மாட்டேன்...." என்றவனது விழிகள் பளபளத்தது.

"அதைப் பிறகு பார்த்துக்கலாம்... இப்போ மருந்து போட்டுக்கோங்க சாமி..." என்றவள் களிம்பை அவனிடம் நீட்டினாள்.

"நீயே போட்டு விடு..." என்றவனைக் கண்டு அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது. ஏதோ ஒரு அசட்டுத் தைரியத்தில் அவனைத் தேடி வந்து விட்டாள் தான். ஆனால் இப்போது வெட்கம் அவளைப் பிடுங்கி தின்றது.

"நீங்களே போட்டுக்கோங்க..." என்றவள் அங்கிருந்து ஓடிவிட்டாள். அவள் செல்வதைப் புன்னகையுடன் பார்த்திருந்தவனின் முகம் பிறகு ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

அவளைத் தொட்ட தனது கையையும், அவள் தன்னைத் தொட்ட தனது நெற்றியையும் தண்ணீரை ஊற்றி நன்றாகக் கழுவினான். அவள் தன்னைத் தொட்டது ஏனோ அவனுக்கு ரசிக்கவில்லை.

'இதுக்கே இப்படி என்றால்... நாளை நீ அவளைத் திருமணம் செய்த பிறகு என்ன செய்யப் போகிறாய்?' அவனது மனசாட்சி அவனைக் காறி துப்பியது. அவனோ செய்வதறியாது தலையைப் பிடித்துக் கொண்டான். செல்லியுடனான வாழ்க்கை அவனுக்கு ஒவ்வாமையைக் கொடுக்கும் தான். இருந்தாலும் முன்னே வைத்த காலை பின்னே வைக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

அன்றிரவு பலத்த மழை கொட்டி தீர்த்தது. காளி, செல்லி இருந்த பகுதி சற்று மேடாக இருந்ததால் அங்குத் தண்ணீர் தேங்கவில்லை. மற்ற பகுதிகளில் நீரின் மட்டம் உயர்ந்து கொண்டே சென்றது. மழையில் சிக்கி உயிருக்கு போராடி கொண்டிருந்தவர்களை மற்றவர்கள் காப்பாற்ற தொடங்கினர். அவர்களோடு செந்தில்குமாரும் இணைந்து கொண்டான். அவன் தனது உயிரை துச்சமாக எண்ணி பல உயிர்களைக் காப்பாற்றினான். அப்போது ஒரு குடும்பம் மட்டும் வெள்ளத்தில் நடுவே மாட்டி கொண்டது. சுழித்துக் கொண்டு ஓடும் நீரினுள் செல்ல எல்லோருமே பயப்பட்டனர். ஒரு நொடி யோசித்த செந்தில்குமார் அடுத்த நொடி யோசிக்காது வெள்ளத்தில் குதித்து அவர்கள் அனைவரையும் காப்பாற்றினான். தங்கள் இன மக்களுக்காக அவன் பாடுபட்டது கண்டு எல்லோருமே அவனைப் பாராட்டினர். அவனை நாயகனாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அவர்களில் ஒருவனாக அவனை ஏற்றுக் கொண்டனர். அவனுக்கு இது தானே வேண்டும். அவனது நினைத்த காரியம் கச்சிதமாக நிறைவேறியது. செல்லியின் மனதிலும் அவன் அழுத்தமாகப் பதிந்தான். ஊரே நாயகனாகக் கொண்டாடும் ஒருவன் தன்னை நாயகியாகக் கொண்டாடுவது கண்டு செல்லியின் மனதும் அவன் பால் மெல்ல சாயத் துவங்கியது.

மகளின் விருப்பத்தை அறிந்த காளி அவளைச் செந்தில்குமாருக்குத் திருமணம் செய்விக்க எண்ணினார். அதற்கு வேங்கையன், ராசைய்யா பயங்கர எதிர்ப்பு தெரிவித்தனர்.

"ஏன் அவருக்கு என்ன குறைச்சல்? நம்ம இனம் இல்லையே தவிர. மற்றப்படி நல்ல மனிதர். இதோ இப்போது அவரும் நம் இனத்தில் ஒருவராகக் கலந்துவிட்டார். செல்லியை மனதார விரும்புகிறார். அதைவிடச் செல்லியும் அவரை விரும்புகிறாள். எனக்குச் செல்லியின் விருப்பம் தான் முக்கியம்."

முதல்முறையாகக் காளி தனது மகனை எதிர்த்து பேசினார். மலைவாழ் மக்கள் இதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் எல்லோரும் செந்தில்குமாரை தங்களது வீட்டுப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டனர்.

அடுத்தச் சில நாட்களில் செந்தில்குமார், செல்லி திருமணம் மாயமான் அம்மன் கோவிலில் எளிமையாக நடைபெற்றது. செந்தில்குமார் தனது எண்ணம் வெற்றி அடைவதற்காகச் சிறிதும் காதலின்றி அவளது கழுத்தில் தாலி கட்டினான். ஆனால் செல்லி மனம் நிறையக் காதலுடன் அவனது தாலியை வாங்கிக் கொண்டாள்.

பெண்ணின் திருமண வயது பதினெட்டு என்கிற அரசாங்கத்தின் அறிவுரை காளியை கண்டு கேலியாகச் சிரித்தது...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 11

அதிகாலையில் எழுந்து ஆற்றில் குளிக்கப் போன செல்லிக்குத் தலைச்சுற்றிக் கொண்டு வந்தது. அவள் அப்படியே அங்கிருந்த கல் மீது அமர்ந்துவிட்டாள். கடந்த சில நாட்களாகத் தன்னுள் ஏற்படும் மாற்றத்தை அவள் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறாள். மருத்துவச்சியான அவளுக்கு அவளது மாற்றம் நன்கு புரிந்தது. புரிந்த விசயமோ அவளுக்கு அதீத மகிழ்ச்சியைக் கொடுத்தது. காதல் கணவன் மீது அவள் கொண்ட காதலுக்குக் கிடைத்த பரிசு அல்லவா இது...! அவள் வெட்கத்துடன் முகத்தை மூடி கொண்டாள்.

"அடடே, செல்லி புள்ள வெட்கம் எல்லாம் படுது?" அவளைக் கிண்டல் அடித்தபடி அங்கு வந்து சேர்ந்தான் வீரா. அன்று போனவன் இன்று தான் திரும்பி வந்திருக்கிறான்.

"வீரா..." செல்லி முகம் மலர நண்பனை திரும்பி பார்த்தாள்.

"நீ இங்கே தான் இருப்பன்னு தெரிஞ்சு தான் இங்கே வந்தேன்." என்றவன் அவள் முன் வந்தமர்ந்தான்.

அப்போது தான் அவன் அவளை நன்கு கவனித்துப் பார்த்தான். செல்லியின் கழுத்தில் புதிதாகக் குடியேறி இருக்கும் மஞ்சள் கயிறு, அவளது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியின் பூரிப்பு எல்லாம் அவனுக்கு விசயத்தை அப்பட்டமாய்க் கூறியது.

"உனக்கும், ராசைய்யாவுக்கும் எப்போ கண்ணாலம் நடந்தது புள்ள? எனக்குக் கறிசோறு போடாம ஏமாத்திட்டியே." அவள் திருமணம் செய்ததை விடக் கறிசோறு தனக்குக் கிடைக்காததை எண்ணி அவன் பெரும் வருத்தம் கொண்டான். அதைக் கேட்டு செல்லி கலகலவெனச் சிரித்தாள்.

"கறிசோறு வேணும்ன்னா கேளு... ஆக்கி போடுறேன்." என்றவள்,

"என் புருசன் ராசைய்யா கிடையாது வீரா..." என்றவள் மெல்ல விசயத்தை அவனிடம் கூறலானாள்.

"யாருன்னே தெரியாத ஒருத்தனை எப்படிப் புருசனா ஏத்துக்கிட்ட புள்ள...?" வீராவின் மனம் சமாதானமாக மறுத்தது.

செல்லி அவனது தலையில் நங்கென்று கொட்டியவள், "என் புருசனை அவன், இவன்னு மரியாதை இல்லாம சொல்ல கூடாது. அவர்ன்னு மரியாதையா சொல்லோணும். இல்லை மாமோய்ன்னு சொல்லு." என்று நண்பனை மிரட்டினாள்.

தோழியின் விழிகளில் வழிந்த காதல், முகத்தில் தெரிந்த நாணம் எல்லாம் அவளுடைய மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையை எடுத்து கூற... அதற்கு மேல் வீரா தாமதிக்கவில்லை. செந்தில்குமாரை தனது தோழியின் கணவனாய் ஏற்றுக் கொண்டான்.

"மாமோய்ன்னு கூப்பிடுறேன் புள்ள..." என்று கூறியவனை மகிழ்ச்சி பொங்க பார்த்தாள் செல்லி...

"வா வீட்டுக்கு போகலாம்..." நண்பனை கூட்டி கொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அங்குச் சென்று செந்தில்குமாரை பார்த்ததும் வீராவிற்கு அவனை மிகவும் பிடித்துப் போனது. மாமோய், மாமோய் என்று வீரா அவனைச் சுற்றி சுற்றி வந்தான். செந்தில்குமாருக்கு வீராவை பிடிக்கவில்லை என்றாலும் ஒன்று பேசாது சிரித்துச் சிரித்தே மழுப்பினான்.

காலை, மதியம் இரு பொழுதும் தோழி வீட்டில் உண்ட வீரா உண்ட களைப்பில் வேப்ப மரத்தடியில் சிறிது கண் அசந்தான்.

எல்லா வேலைகளைம் முடித்த பிறகு தான் செல்லிக்கு தான் கர்ப்பமாக இருக்கும் விசயம் ஞாபகத்தில் வந்தது. திண்ணையில் அமர்ந்து ஏதோ எழுதி கொண்டிருந்த கணவனைக் கண்டவள் நாணத்துடன் வாசற்கதவை

பிடித்தபடி நின்றாள். அவளது வரவினை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான் செந்தில்குமார்.

"சாமி, உள்ளார வாங்களேன்..." என்று அவள் அழைக்க... அவனுக்கோ அவளது வெட்கம், அழைப்பு கண்டு உள்ளுக்குள் திக்கென்று இருந்தது.

"என்ன விசயம் செல்லி...?"

"இங்கே வாங்க சொல்றேன்..." என்றவள் நாணத்துடன் உள்ளே சென்றுவிட...

அவன் எழுதியதை மூடி வைத்துவிட்டு உள்ளே சென்றான். செல்லி அங்கிருந்த மூங்கிலான ஜன்னல் அருகே போய் நின்றாள். அவள் பின்னாடி போய் நின்றவன்,

"இப்போ சொல்லு..." என்க...

அடுத்த நொடி செல்லி அவனைக் கட்டியணைத்து அவனது நெஞ்சில் சாய்ந்தாள். அவனோ திகைத்து போய் நின்றிருந்தான். அவளைத் திருப்பி அணைக்கக் கூட அவனது மனதிற்கு ஒப்பவில்லை. திருமணமான முதல் நாளிரவு ஆணின் இயல்பான இளமை உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது அவளை நாடியவன் அதன் பிறகு அவளது விரல் நுனியை தொட கூட முனைந்தது இல்லை. ஏனெனில் அன்று அவளைத் தொட்டு விட்டு அந்த நள்ளிரவில் அவன் ஆற்றில் எத்தனை தடவை மூழ்கி எழுந்தான் என்கிற கணக்கு அவனுக்கே தெரியாது. பதினாறு வயது பாவைக்குத் தாம்பத்திய வாழ்க்கை பற்றிய புரிதல் சிறிதும் இல்லாததால் அவளை எளிதில் ஏமாற்ற அவனால் முடிந்தது. அவளும் வெட்கப்பட்டுக் கொண்டு அவன் முன்னே வரவே மாட்டாள். அன்று நிகழ்ந்த உறவின் விளைவாக விளைந்த கரு தான் இது...

"நான்..." அவள் மேலே சொல்லாது அண்ணாந்து அவனைப் பார்த்தாள்.

"நீ...?" அவன் கேள்வியாக அவளைப் பார்த்தான்.

"நான்... நீங்க... அப்பா, அம்மாவாகப் போறோம்." சொல்லி முடித்தவள் பின்பு வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். அவனுக்கோ சாக்கடையில் புரண்டது போல் அத்தனை அருவருப்பாக இருந்தது. அவளைத் தொட்டதே பாவம் என்று அவன் எண்ணி கொண்டிருக்க... பாவத்தின் சம்பளமாய் வாரிசு வேறா...? அவனுக்கு மிகவும் ஆயாசமாக இருந்தது.

"ரொம்பச் சந்தோசம் செல்லி..." என்றவன் அவனது சந்தோசத்தை மறந்தும் செயலில் வெளிப்படுத்தவில்லை. அப்படி ஒன்று இருந்தால் தானே...

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காது செந்தில்குமார் தந்தையைத் தேடி வந்துவிட்டான். விசயத்தைக் கேள்விப்பட்டதும் கந்தன் அவனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்.

"உன் புத்தி ஏன்டா இப்படிப் போச்சு?" அவருக்கு மகன் மீது அத்தனை கோபம் வந்தது... வீடு வாசலற்ற மழைவாழ் பெண்ணின் வயிற்றில் அவர்கள் வீட்டு வாரிசு வளர்வதா...? அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"அது அவளுடைய குழந்தை... எனக்கு அதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. என் வேலை முடிந்ததும் நான் அங்கிருந்து கிளம்பி விடுவேன்." என்ற மகனது வார்த்தையில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

"என்னவோ பண்ணி தொலை..." என்று அவனை விட்டு விட்டார்.

செல்லியின் வயிற்றில் கரு வளர்பிறை போல் மெல்ல வளர ஆரம்பித்தது. செந்தில்குமாரின் முயற்சியும் தொடர்ந்து கொண்டே இருந்தது. அவனுக்கு வேண்டிய மருத்துவக் குறிப்புகளுக்காக மனைவியிடம் இனிமையாகப் பேசினான்.

"நீ மட்டும் எப்படி இப்படி மருத்துவம் பார்க்கிற செல்லி? எப்படி உன்னால் இதை எல்லாம் ஞாபகத்தில் வச்சியிருக்க

முடியுது. படித்த பாடங்களை ஞாபகம் வச்சிருப்பதே பெரும்பாடா இருக்கு."

"அனுபவம் தான் பாடம். அதனால் தான் மனசுல பதிஞ்சு இருக்கு." என்று அவள் முடித்துக் கொள்வாள். மறந்தும் சித்த மருத்துவம் பற்றி மூச்சுவிட மாட்டாள். கணவனே ஆனாலும் இந்த விசயத்தில் அவள் அவனை விலக்கி தான் வைத்திருந்தாள்.

அந்தச் சமயத்தில் தான் திருவேங்கடம் தனது மனைவி சுபத்ராவுடன் அங்குச் சிகிச்சைக்காக வந்தது. ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்த செல்லியின் கனிவு, அன்பு சுபத்ராவுக்கு மிகவும் பிடித்துப் போனது.

"வீரா சொல்லிட்டு தான் போனான். அவனோட ஜோட்டு மாரி அனுப்பி வச்சவக தானே நீங்க?"

"ஆமாம்மா..." என்ற திருவேங்கடம்,

"எங்களுக்குக் கல்யாணமாகி ஐஞ்சு வருசமாச்சு... இன்னும் குழந்தை பாக்கியம் கிடைக்கலை. நான் பொறுமையா காத்திருக்கத் தயார். ஆனா என் மனைவி சுபி அழுதே கரைகிறாள். என் நிலை கேள்விப்பட்ட மாரி தான் உங்களைப் போய்ப் பார்க்க சொன்னான். அதான் இங்கே வந்தோம்."

"ரொம்பச் சந்தோசம்ய்யா... மாயம்மாவை தேடி வந்துட்டீகல்ல... இனி நல்லதே நடக்கும்." என்ற செல்லி இருவரையும் பரிசோதித்துச் சிகிச்சை கொடுக்க ஆரம்பித்தாள்.

அங்கிருந்த பத்து நாட்களில் ஏனோ செந்தில்குமார் சுபத்ராவின் கண்களில் தென்படவில்லை. இதை விதி என்பதா? சதி என்பதா? என்னவென்று சொல்ல... பத்துத் தினங்கள் கழிந்து சிகிச்சை முடிந்து திருவேங்கடம், சுபத்ரா இருவரும் கிளம்பினர்.

"இனி அம்மா வர வேணாம்ய்யா... நீங்க மட்டும் மாசந்தோறும் வந்து மருந்து வாங்கிட்டு போங்க. அதை

முறையா சாப்பிட்டீங்கன்னா உங்க குறை நிவர்த்தியாகி விடும்." என்றவள் இன்முகத்துடன் வழியனுப்பி வைத்தாள்.

"உன்னோட வாக்கை அந்தத் தெய்வத்தோட வாக்கா நினைச்சு நான் கிளம்பறேன் செல்லி." என்று சுபத்ரா அவளை அணைத்து கொண்டாள்.

அதன் பிறகு சுபத்ரா அங்கு வருவது இல்லை. திருவேங்கடம் மட்டும் அங்கு வந்து போவார்.

இதற்கிடையில் வேங்கையனுக்கும் மாயிக்கும் திருமணம் நடந்தது. வேங்கையன் மாயியை காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். மாயியின் அன்பு முரடனான வேங்கையனின் குணத்தைப் பண்படுத்தும் என்று உணர்ந்த காளி இருவருக்கும் திருமணம் செய்வித்தார். ராசைய்யா மட்டும் செல்லியின் நினைவில் குடித்துக் கொண்டு திரிந்தான். அவனது நிலை அறிந்து செல்லி கூடக் கவலைப்பட்டாள். இந்தளவிற்கு ராசைய்யா தன்னைக் காதலிப்பான் என்று அவளும் நினைக்கவில்லை.

"மாமோய், நான் இன்னொருத்தர் பொஞ்சாதி. நீ என்னைய மறக்கிறது தான் உனக்கு நல்லது." என்று அவள் அவனுக்கு அறிவுரை கூற...

"போடி..." என்று அவன் அவளது அறிவுரையை உதாசீனம் செய்தான்.

அப்போது தான் ராசைய்யாவின் அம்மா நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்தாள். அவள் தனது கடைசி ஆசையாக மகனது திருமணத்தை முடிக்க எண்ணி மகனிடம் கூற... அவனோ வேண்டாவெறுப்பாய் திருமணத்திற்குச் சம்மதித்தான். அவனது தந்தை வெளியில் பெண் தேட விருப்பமின்றி மைனாவை பெண் கேட்க... அப்போதும் காளி சின்ன மகளின் விருப்பம் கேட்டறிந்த பின்னரே திருமணத்திற்குச் சம்மதித்தார். மைனாவிற்கு ராசைய்யா மாமாவை பிடிக்கும். அது காதலா? என்று எல்லாம் தெரியாது. அதைவிட வேங்கையன் மைனாவை பேசியே

கரைத்தான். செல்லி விசயத்தில் ராசைய்யா ஏமாற்றப்பட்டதை அவளிடம் கூறி... 'அவனுக்கு நீ தான் அனுசரணையா இருக்கணும்' என்று கூறி அவளைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தான். ராசைய்யா, மைனா திருமணம் நடந்து முடிந்தது. திருமணம் முடிந்த பிறகும் ராசைய்யா தன் போக்கில் தான் இருந்தான். மைனாவிற்குத் திருமண வாழ்க்கையில் பெரிதாக எதிர்பார்ப்பு இல்லாததால் அவள் அவனைப் பொறுமையாகச் சகித்துக் கொண்டாள். நம் நாட்டில் பெண்களின் தியாகத்தில் தான் பல குடும்பங்கள் நிம்மதியாக வாழ்கின்றது. இதற்கிடையில் காளி இறந்துவிட்டார். செல்லிக்கு அவரது இழப்பு பெரிய இழப்பு தான். வயிற்று மகவை எண்ணி தன்னைத் தேற்றி கொண்டாள்.

நாட்கள் உருண்டோடியது. செல்லி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். எப்போது வேண்டுமானாலும் பிரசவமாகலாம். அந்தச் சமயம் தான் கந்தன் மகனை தேடி வந்தார். வீட்டிற்கு வந்து கொண்டிருந்த செல்லி அவர் வந்ததை அறிந்து முகம் மலர அவர்களை நோக்கி விரைந்து வந்தாள். அருகே வந்தவள் அவர்கள் பேசியதை கேட்டு அப்படியே அதிர்ந்து போய்ச் சிலையாக நின்றாள்.

"இங்கே எதுக்குப்பா வந்தீங்க...? சொல்லி விட்டிருந்தா நானே வந்திருப்பேனே?" தந்தையுடன் இணக்கமாகப் பேசிய கணவனைக் கண்டு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"முக்கியமான விசயம் செந்தில்... அதான் நானே நேரில் வந்தேன். உனக்கு அமெரிக்காவில் படிக்கச் சீட் கிடைச்சிருக்கு... சித்த மருத்துவ ஆராய்ச்சியை எல்லாம் மூட்டை கட்டிட்டு அமெரிக்கா கிளம்புற வழியைப் பாரு." கந்தன் கூறியதை கேட்டு அவளுக்குத் திக்கென்று இருந்தது. காதல் கணவனைப் பிரிந்து அவள் எப்படி இருப்பாள்? அவளால் அதை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. அதில் சித்த மருத்துவம் என்கிற வார்த்தையை அவள் கவனிக்கவில்லை.

"ரொம்பச் சந்தோசம்ப்பா... நான் சீக்கிரமே கிளம்பி வந்திர்றேன்." என்ற கணவனைக் கண்டு அவளது முகம் சுருங்கி போய்விட்டது. ஒருவேளை தன்னையும் உடன் அழைத்துச் செல்வானாக இருக்கும் என்று எண்ணி அவள் தன்னைத் தேற்றி கொண்டாள்.

"இன்னும் இங்கே என்ன இருக்குன்னு உட்கார்ந்துட்டு இருக்க...? அந்தப் பொட்டச்சி வயித்த தள்ளிட்டு நடக்கிறத பார்க்க பார்க்க என்னோட ரத்தம் கொதிக்குது. யார் வீட்டு வாரிசு யார் வயித்தில்...?" கந்தன் தலையில் அடித்துக் கொண்டார்.

"அப்பா, நானே கெஸ் பண்ணி சில மருந்துகளைப் பற்றிய குறிப்புகளை எழுதி வச்சியிருக்கேன். அதுக்கான ப்ரூப் மட்டும் கிடைச்சதுன்னா எடுத்துட்டு வந்திருவேன். ப்ரூப் இல்லாம வெளிநாட்டுக்காரன் எதையும் நம்ப மாட்டான். சித்த மருத்துவம் பற்றிச் சித்தர்கள் எழுதிய ஓலைச்சுவடிகள் எல்லாம் செல்லி கிட்ட தான் இருக்கு. புருசனான என்னை நம்பி கூட அதைப் பத்தி ஒரு வார்த்தை சொல்ல மாட்டேங்கிறாள். எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு அவளை..." செந்தில்குமார் இயலாமையுடன் தனது உள்ளங்கையை அருகில் இருந்த மரத்தின் மீது குத்தினான்.

கணவனது வார்த்தைகள் கேட்டு செல்லி மயங்கி விழாமல் இருந்ததே பெரிய ஆச்சரியம்...! வயிற்றுக்குள் உதைத்த மகவினால் சுரணை அடைந்தவள் பக்கத்தில் இருந்த மரத்தின் பின்னால் சென்று மறைந்து நின்று அதன் மீது சாய்ந்து கொண்டாள். அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. காதல் என்கிற பெயரில் தான் முட்டாளக்கப்பட்டு இருப்பதை அறிந்து அந்தச் சின்னப் பெண் கதறியழுதாள். காதல் தோல்வியை விடக் காதலில் ஏமாற்றம் அடைவது மிகப் பெரிய வலியை கொடுக்கும். அத்தகைய வலியை அவள் அனுபவித்துக் கொண்டிருந்தாள். தனக்கு மட்டும் ஏனிந்த நிலைமை என்று... சித்த மருத்துவத்திற்காக அவளது கணவன் அவளது பெண்மையைக் களங்கப்படுத்தி இருக்கிறான்.

நினைக்க நினைக்க முதலில் வேதனை நிறைந்தது, அதற்கு அடுத்து வலி எழுந்தது. பின்பு எல்லாம் மறைந்து அவளது மனதில் ஒருவித வெறுமை நிலை ஆட்கொண்டது. அவன் ஏமாற்றினாலும் அவள் ஏமாந்து போயிருக்கக் கூடாதே. தவறு முழுமையும் அவள் மீது அல்லவா...! மான, அவமானத்திற்கு அஞ்சும் அந்தச் சின்னப் பெண் கூனிக்குறுகி போனாள். அதற்கு மேல் அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை அவள் கேட்கவில்லை. கேட்காத அளவிற்கு அவளது மூளை மரத்துப் போயிருந்தது. எத்தனை நேரம் அப்படியே இருந்தாளோ... மரத்தின் மீதிருந்த குயிலின் ஓசையில் சுயவுணர்வு அடைந்தவள் தனது புடவை தலைப்பால் முகத்தில் வழிந்திருந்த வியர்வையைத் துடைத்து கொண்டாள். அடுத்து தான் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி அவள் நிதானமாக யோசித்தாள். பின்பு வீட்டை நோக்கி சென்றாள்.

எப்போதும் போல் கணவனுக்கு உணவு பரிமாறினாள்... அவனுடன் பேசினாள்... மருத்துவம் பார்த்தாள். இத்தனை வேலைகளை அவள் செய்த போதும் அவளது சிந்தனை மட்டும் ஓயாது ஓடி கொண்டே இருந்தது. நள்ளிரவு பொழுதில் கணவன் உறங்கி விட்டதை அறிந்தவள் மெல்ல எழுந்து தனது வயிற்று சுமையைத் தூக்கி கொண்டு சமையலறை வந்தவள் அங்கிருந்த பெரிய பானையைக் கஷ்டப்பட்டு நகர்த்தினாள். பானை வைத்திருந்த இடத்தின் கீழே மரப்பலகை ஒன்று இருந்தது. அதை அவள் நகர்த்தியதும் ஒரு ஆள் செல்ல கூடிய அளவிற்கு ஒரு குழி தெரிந்தது. அங்கிருந்த சிமிழ் விளக்கை ஏற்றியவள் அதனுள் மெல்ல கவனமாக இறங்கினாள். கீழே இறங்கியதும் அங்கே ஒரு பெரிய அறை இருந்தது.

அதில் பழைய இரும்பு பெட்டி ஒன்று இருந்தது. அவசரமாக அதைத் திறந்தவள் கண்ணில் முதலில் தென்பட்டது அந்தப் புகைப்படம்... அவர்களது திருமணத்தன்று ஏதேச்சையாகக் காட்டிற்குச் சுற்றுலா வந்திருந்த வெளிநாட்டவர் ஒருவர் அவளையும், செந்தில்குமாரையும் இணைத்து வைத்துப்

புகைப்படம் எடுத்தார். முதலில் முடியாது என்று மறுத்தவள் பின்பு தந்தையின் வற்புறுத்தலுக்காக வெட்கத்துடன் ஒத்து கொண்டாள். அந்தப் புகைப்படம் தான் இது... அதைக் காண காண அவளுக்கு மனம் கனத்துப் போனது. சிறிது நேரம் அதைப் பார்த்து கொண்டிருந்தவள் பின்பு அதைப் பெட்டியினுள் வைத்து விட்டு அதன் அடியில் இருந்த ஓலைச்சுவடிகளைக் கைகளில் எடுத்து கொண்டாள். பின்பு ஏதோ நினைத்தவளாய் பெட்டியினுள் இருந்த கரையான் அரிக்காமல் இருப்பதற்காக வைத்திருக்கும் மருந்து குப்பியை ஞாபகமாய் எடுத்து கொண்டாள். ஓலைச்சுவடியை காலக் காலமாய்ப் பாதுகாப்பது இந்த மருந்தல்லவா...!

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மேலே வந்தவள் பழையபடி பானையை நகர்த்தி வைத்துவிட்டு நிம்மதி பெருமூச்சு விட்டபடி திரும்பியவள் அங்கு நின்றிருந்த கணவனைக் கண்டு அதிர்ந்தாள். உடனே கீழே இருந்த ஓலைச்சுவடிகளைக் கையில் அள்ளி கொண்டாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 12

"பார்த்தியா... கட்டின புருசனுக்குத் தெரியாம, அதுவும் வீட்டுக்குள்ளேயே ஒளிச்சு வச்சிருக்கியே. புருசனை ஏமாத்துற உன்னை மாதிரி பொஞ்சாதியை எல்லாம் என்ன பண்ணலாம்...?" என்று வில்லன் சிரிப்பு சிரித்தபடி செந்தில்குமார் அவளை நெருங்கினான்.

"நீ என்னை ஏமாத்தலை...?" எதிர்கேள்வி கேட்டவளை கண்டு அவனது சத்தமாகச் சிரித்தான்.

"அப்பாவும், நானும் பேசியதை நீ ஒட்டு கேட்டதை நானும் பார்த்துட்டேன். நீ எப்படியும் ஓலைச்சுவடிகளைக் காப்பாற்ற நினைப்ப... அதனால் தான் நான் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கலை. ஆனாலும் உன் நடிப்பு அபாரம்..." என்று அவன் ஓசை இல்லாது இரு கைகளையும் தட்டினான்.

"இனியும் உன் கிட்ட ஏமாற நான் தயாரா இல்லை..." என்றவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்.

ஒரு பிடியில் அவளைத் தடுத்து நிறுத்தியவன் அவளது கைகளில் இருந்து ஓலைச்சுவடிகளைப் பிடுங்கி கொண்டு அவளைப் பிடித்துக் கீழே தள்ளினான். இதை எதிர்பாராத செல்லி தடுமாறி கீழே விழுந்தாள். அவளது வயிற்றில் லேசாக வலி எழ ஆரம்பித்தது. இது பிரசவ வலி என்பது அத்தனை பிரசவம் பார்த்தவளுக்குப் புரியாது இருக்குமோ! ஆனாலும் வலியை பொறுத்துக் கொண்டு எழுந்தாள். அவள் எழுவதற்குள் செந்தில்குமார் ஓலைச்சுவடிகளைப் பையில் வைத்துக் கொண்டு கிளம்ப ஆயத்தமாகி கொண்டிருந்தான். உடனடியாக அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவன் மட்டும் கிளம்பி விட்டால் அவர்கள் கட்டி காத்த சித்த மருத்துவம் சிதைந்து போய்விடும். அந்தக் கணம் மாயம்மா அவளது உடம்பில் புகுந்தாளோ என்னவோ... சமையலறையில் இருந்த உலக்கை எடுத்து வந்து அவனது பின்னந்தலையில் ஆக்ரோசத்துடன் ஓங்கி அடித்தாள். செந்தில்குமார் அதிர்வுடன் திரும்பி பார்த்தவன் அப்படியே மயங்கி சரிந்தான்.

இது தான் சந்தர்ப்பம் என்று எண்ணியவள் ஓலைச்சுவடிகளை எடுத்துக் கொண்டு வெளியில் ஓட ஆரம்பித்தாள். கர்ப்பிணி பெண்ணான அவளால் வெகு தொலைவு ஓட முடியாது. அப்படியே ஓடினாலும் ஓலைச்சுவடியை பாதுகாக்க முடியாது. எந்நேரம் வேண்டுமானாலும் அவளது கணவன் எழுந்து வர கூடும். அந்தக் கணம் அவளுள் தோன்றியது கோவில் தான். நேரே மாயமான் அம்மன் கோவிலுக்கு வந்தவள் அங்குக் கஞ்சி ஊற்றி வைக்கப் பயன்படும் அலுமினிய பாத்திரத்தின் மூடியை திறந்து அதனுள் ஓலைச்சுவடியை வைத்தவள் அதனுடன் ஞாபகமாய்க் கரையான் அரிக்காமல் தடுப்பதற்கான மருந்தை பூசிவிட்டு அந்தக் குப்பியையும் சேர்த்து அதில் வைத்தாள். பிறகு அந்தப் பாத்திரத்தை மூடியவள் அம்மனின் சிலைக்குப் பின்னே வந்தாள். அங்கிருந்த சூலாயுதம் கொண்டு குழியைத் தோண்டியவள் அதனுள் அந்தப் பாத்திரத்தை வைத்து மண் கொண்டு மூடினாள். பின்பு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள அங்கேயே அமர்ந்தாள். தனது நிர்கதியான நிலையை எண்ணி அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. தந்தை இருந்திருந்தால் அவளுக்கு இந்த நிலை வந்திருக்காது. சகோதரனிடம் ஓலைச்சுவடிகளைக் கொடுக்கலாம்... ஆனால் அது செந்தில்குமார் கைக்கு மறுபடியும் போய்விடுமோ என்று அவள் மிகவும் பயமாக இருந்தது. மருத்துவத்தைக் காசாக்க அவள் விரும்பவில்லை.

"என்னை மன்னிச்சிரு தாயே... எனக்கு வேறுவழி தெரியலை." என்று மானசீகமாக அம்மனை வேண்டி கொண்டாள்.

அப்போது அவளுக்குப் பிரசவ வலி அதிகரித்துக் கொண்டே போனது. குழந்தை பிறக்க போகிறது என்பதை அவள் உணர்ந்தாள். கோவிலை மாசுப்படுத்தக் கூடாது என்று எண்ணியவள் மெல்ல எழுந்து நடந்தாள். சிறிது தூரம் நடப்பதற்குள் குழந்தை முட்டி கொண்டு வந்தது. ஆற்றங்கரையில் இருந்த புல் தரையில் அமர்ந்தவள் கஷ்டப்பட்டுக் குழந்தையைப் பெற்றெடுக்கத்

துவங்கினாள். ஆரோக்கியமான உடல் என்பதால் அதிகச் சிரமம் இல்லாது அவள் பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அழகான ஆண் குழந்தையைக் கண்டவளுக்கு விழிகள் கலங்கியது. பின்பு சுதாரித்துக் கொண்டு கூரிய கல்லை கொண்டு நஞ்சு கொடியை அறுத்து எடுத்தாள். தனது உடல்நிலையைக் கூடப் பொருட்படுத்தாமல் குழந்தையை ஆற்று நீரில் கழுவி எடுத்தவள் குழந்தையைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டு தாய்ப்பால் புகட்டினாள். இனி என்று கொடுப்பாளோ... அவளுக்கே அது தெரியாது. கணவனைப் போன்று இருந்த மகனை காண காண அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது. அவனது காதல் தான் பொய்யாய்ப் போனது. ஆனால் அவளது காதல் பொய்யில்லையே... அவள் மகனை அணைத்துக் கொண்டு அழுதாள். அப்போது பின்னால் இருந்து ஒரு கட்டை அவளைத் தாக்கியது.

"அம்மா..." என்று அலறியபடி குப்புற விழுந்தாள் அவள்... அவளது பின்னந்தலையில் இருந்து இரத்தம் வழிந்தது.

"சொல்லுடி... ஓலைச்சுவடிகள் எங்கே...?" தலையில் இருந்து இரத்தம் வடிய ஆக்ரோசமாய்க் கேட்டபடி அங்கே நின்றிருந்தான் அவளது கணவன்...

"சொல்ல மாட்டேன்..." அவளது குரல் உறுதியாய் ஒலித்தது.

"சொல்ல மாட்ட... சொல்ல மாட்ட..." என்றபடி சுற்றும் முற்றும் பார்த்தவன் அப்போது தான் கவனித்தான், அவளது கைகளில் இருந்த குழந்தையை... அதைக் கண்டதும் அவனது விழிகள் ஜொலித்தது. பாய்ந்து சென்று குழந்தையை அவளிடம் இருந்து பறித்துக் கொண்டான்.

"நீ சொல்லலை உன் குழந்தையைக் கொன்னுருவேன்..."

கணவனது 'உன் குழந்தை' என்ற வார்த்தையில் அவளது மனம் உடைந்து போனது. அவளது இதழ்களில் விரக்தி புன்னகை தோன்றியது.

"உன்னைக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு நானும், உன்னை அப்பாவா அடைஞ்ச பாவத்துக்கு என் மகனும் உயிர் துறந்து தான் ஆகணும்ன்னு விதி இருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்." என்றவள் மெல்ல சிரித்தாள்.

"கொழுப்பாடி உனக்கு..." என்றவன் குழந்தையைத் தூக்கி கீழே வீசி எறிந்தான். செல்லி பதைபதைப்புடன் பாய்ந்து வந்து குழந்தையைப் பிடித்துக் கொண்டாள். அவளது உடல் நிற்க முடியாது தள்ளாடியது. குழந்தையை அணைவாகப் பற்றியபடி அவள் அப்படியே மடங்கி அமர்ந்தாள்.

"ச்சீ, நீயெல்லாம் ஒரு மனுசனா?" அவள் அவனைப் பார்த்து சீறினாள்.

"நான் மனுசன் இல்லை... அரக்கன்..." என்றவன் கொலைவெறியோடு அவளைப் பார்த்தான்.

"அது என்னவோ உண்மை தான்..." அவள் இளக்காரமாய் அவனைக் கண்டு சிரித்தாள்.

"எனக்குக் கிடைக்காத பொக்கிசம் யாருக்கும் கிடைக்கக் கூடாது... கிடைக்கவும் விட மாட்டேன்." என்றவன் கண்ணில் அருகில் இருந்த மூங்கில் காடு தென்பட்டது.

கோடை காலத்தில் காய்ந்திருந்த மூங்கில்கள் அவனுக்குச் சாதகமாகி போனது. அவனுக்குச் சிகரெட் குடிக்கும் பழக்கம் இருந்ததால் அவன் தனது சட்டை பையில் இருந்து தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியை உரசி மூங்கில்களைப் பற்ற வைத்தான். காய்ந்த மூங்கில் சடசடவெனப் பற்றிக் கொண்டது. தலையில் பலத்த அடிவாங்கியதால் செல்லியால் அவனது செயலை தடுக்க முடியவில்லை.

"இனி யாருக்கும் கிடைக்காது... உனக்குக் கூட..." அவன் குரோதத்துடன் கூற... செல்லி அவனைக் கண்டு இகழ்ச்சியாய் சிரித்தாள். (அப்போது அவனுக்குப் புரியவில்லை. இப்போது தான் அவனுக்குப் புரிகிறது. அவள் ஓலைச்சுவடிகளைக் காப்பாற்றி விட்டாள் என்று...)

"நீயும், உன் புள்ளையும் காட்டுத் தீயில் பொசுங்கி சாவுங்க..." என்று சிறிதும் இரக்கம் இல்லாது கூறியவன் தான் கையோடு கொண்டு வந்திருந்த தனது உடமைகள் அடங்கிய பையை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

இருள் சூழ்ந்திருந்தாலும் பற்றி எரியும் தீயின் வெளிச்சத்தில் செந்தில்குமார் செல்வது அவளுக்கு நன்கு தெரிந்தது. அதே போல் தனது உயிர் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரிந்து கொண்டு இருப்பதையும் அவள் உணர்ந்திருந்தாள். அவனை எதுவும் செய்ய முடியவில்லையே என்கிற ஆதங்கம் ஒரு பக்கம்... சித்த மருத்துவம் இத்தோடு அழிந்து போவதை எண்ணி எழுந்த துயரம் மறுபக்கம் என்று அவள் மிகவும் ஓய்ந்து போனாள். அவனைத் தண்டிக்க வேண்டும் என்று கூட அவள் நினைக்கவில்லை. ஆனால் அவளுடைய மக்களுக்குச் சித்த மருத்துவத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க முடியவில்லையே என்கிற துயரமே அவளை வாட்டி வதைத்தது.

"இதற்கு எல்லாம் காரணமான உன்னைப் பழிவாங்கியே தீருவேன்." என்று முணுமுணுத்தவளுக்குக் கண்களை இருட்டி கொண்டு வந்தது.

"செல்லி..." பழக்கமான குரல் அவளது செவியைத் தீண்டியது. அது அவளது தோழன் வீராவின் குரல் அல்லவா...

"வீ...ரா..." அவள் சிரமப்பட்டு அவனை அழைத்தாள்.

"தீ பத்திக்கிட்டு எரியுதேன்னு இங்கே வந்தா... நீ இப்படிக் கிடக்கிறியே செல்லி..." அவன் அவளைக் கண்டு கண்ணீர் வடித்தான்.

"எல்லாம் என் விதி வீரா..." என்றவள் உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டு நடந்ததை எல்லாம் அவனிடம் கூறினாள்.

"என்னோட ஒரே கவலை என் மகனை பத்தி தான். இங்கே இவன் இருந்தா இவனோட அப்பாவை பத்தி தெரிஞ்சு என் அண்ணனே இவனை வெட்டி கொன்னுரும். இவனை எங்கேயாவது ஆசிரமத்தில் சேர்த்திரு வீரா... புண்ணியமா போகட்டும்." மகனை தோழனது கைகளில் கொடுத்துவிட்டு இரு கைகளைக் கூப்பியவளை கண்டு அவன் ஓவென்று அழுதான்.

"அப்படி எல்லாம் சொல்லாதே செல்லி. உனக்கு ஒண்ணும் ஆகாது..."

"இல்லை... நான் ரொம்ப நேரம் உயிரோட இருக்க மாட்டேன். நீ இவனைத் தூக்கிட்டு இங்கிருந்து போயிரு..." என்று அவள் அவனை அவசரப்படுத்தினாள்.

அவனும் வேறுவழி இல்லாது அவளது பேச்சை தட்ட முடியாது குழந்தையைத் தூக்கி கொண்டு சென்றான். போகும் போது அவளைத் திரும்பி திரும்பி பார்த்தபடி அழுது கொண்டே சென்றான். வீரா மலையை விட்டு இறங்கி ஊர் பக்கம் வந்த போது அப்போது தான் திருவேங்கடம் பேருந்தில் இறங்கினார். இந்த மாதம் மருந்து வாங்குவதற்காக அவர் வந்திருந்தார். அவரைக் கண்டதும் வீரா நடந்ததை எல்லாம் கூறி அழுதான்.

"போலீஸ் ஸ்டேசன் போகலாம் வீரா..." என்றவரை கண்டு,

"வேண்டாம்ய்யா... அந்தளவுக்குப் போராட எங்களுக்கு சக்தி இல்லை. என்னோட ஒரே நோக்கம் செல்லியோட மகன் நல்லா இருக்கணும்ங்கிறது தான். நீங்க இவனை நல்லபடியா பார்த்துக்கோங்க." என்று அவன் கைக்கூப்பி வேண்ட... பிள்ளை இல்லாத அவருக்குக் குழந்தை பெரிய வரமாகத் தோன்றினான்.

"இந்தச் சின்னக் கண்ணனை பாராட்டி சீராட்டி வளர்க்க வேண்டியது என் பொறுப்பு வீரா..." அவர் சந்தோசத்துடன் கூறினார். அவர் குழந்தையை எடுத்துக் கொண்டு செல்லும் போது வீரா அவரைத் தடுத்து நிறுத்தி,

"செல்லியோட மகன் செல்வா... என் செல்லா குட்டி..." என்றவன் குழந்தையின் பாதத்தில் அழுந்த முத்தமிட்டான்.

திருவேங்கடம் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றுவிட... வீரா மீண்டும் காட்டுக்குள் வந்து பார்த்த போது செல்லி இருந்த இடத்தில் வெறும் சாம்பல் மட்டுமே மிஞ்சியிருந்தது. செந்தில்குமார் வைத்த தீயில் அவர்களது இனத்தில் பல குடும்பங்கள் எரிந்து சாம்பலாகி இருந்தது. சில குடும்பங்கள் மட்டுமே தப்பிப் பிழைத்தது. வீரா கோபத்துடன் செந்தில்குமாரை பற்றிய எல்லா விசயங்களையும் வேங்கையன், ராசைய்யாவிடம் கூறினான். செந்தில்குமாரின் துரோகத்தை எண்ணி அவர்கள் கொதித்தனர். வீரா மறந்தும் குழந்தையைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவனுக்குத் தெரியும், செந்தில்குமார் மீது இருக்கும் கோபம் அந்தக் குழந்தை மீது திரும்பும் என்று... செல்லியோடு சேர்ந்து குழந்தையும் எரிந்து போனது என்று அவர்கள் நம்பினர். வீரா நினைத்து போல் செல்லி இறந்ததற்கு வருந்தியவர்கள் மறந்தும் குழந்தை இறந்ததற்கு வருந்தவில்லை. துரோகியின் வாரிசு ஒழிந்தது என்றே எண்ணினர்.

காட்டில் இருந்து வந்த செந்தில்குமார் கூறிய கதைகள் அனைத்தையும் கேட்ட கந்தன், "இப்பவாவது உனக்குப் புத்தி வந்ததே. முதல்ல நீ இங்கே இருந்து கிளம்பு. அந்தக் காட்டு கும்பல் இங்கே வர்றதுக்குள் நீ இங்கே இருந்து போயிரு." என்றார்.

"நான் எதுக்குப் போகணும்?" செந்தில்குமார் முறுக்கினான்.

"எனக்கு மகன் உயிரோடு இருக்கணும் செந்தில். நீ புறப்படு." என்று அவர் கடுமையுடன் கூற... செந்தில்குமார் அன்றே பட்டணம் கிளம்பினான்.

"இனி எந்தக் காரணம் கொண்டும் நீ இங்கே வர கூடாது. நானே செத்தாலும் கூட..."

"அப்பா..." அவன் திகைத்தான்.

"ம், கிளம்பு..." அவர் அவனைத் துரிதப்படுத்தினார்.

செந்தில்குமார் கிளம்பி செல்வதற்கும், மலைவாழ் மக்கள் கந்தனை தேடி வருவதற்கும் சரியாக இருந்தது.

"எங்கே உம் மவன்...? அவனை வெளியில் வர சொல்லு...?" வீரா தான் ஆவேசமாய்க் கொதித்தான். தோழியின் நிலை அவன் கண்முன் வந்து போனது.

"யார் எனக்கு மகன்...? அவனைத் தலை முழுகி பல மாசங்களாச்சு..." என்று கந்தன் ஒன்றும் அறியாதவராய் சொன்னார்.

"என்ன விளையாடுறியா? உம்ம மவன் எங்க காட்டைக் கொளுத்தியதோடு இல்லாம, எங்க செல்லிய கொன்னுட்டு போயிருக்கான். நாங்க அவனைச் சும்மா விட மாட்டோம்." வேங்கையனும், ராசைய்யாவும் கோபத்தில் கத்தினர்.

"என்னது காட்டைக் கொளுத்திட்டீங்களா? என் மகனை உயிரோடு கொளுத்திட்டீங்களா? நீங்க நாசமா போவீங்க... கொலைகார பாவிங்களா... உங்களை என்ன செய்றேன் பாருங்க..." என்றவர் காவல்துறைக்கு அழைத்து விசயத்தைக் கூற...

காவல்துறை அங்கு விசாரணைக்கு வந்தது. ஆனால் அவர்களோ வழக்கை விசாரிப்பதை விடப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அதை முடிப்பதில் குறியாக இருந்தனர். கந்தனின் தூண்டுதலின் பேரில் செந்தில்குமாரை கொன்றதற்காக வீரா, வேங்கையன், ராசைய்யா மூவரையும் கைது செய்து நையப்புடைத்து விட்டனர். அதிலிருந்து காவல்துறை பக்கம் அவர்கள் தலை வைத்துப் படுப்பது இல்லை. ஆனால் அவர்களது மனதில் வன்மத்தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது. அவர்களைப் பொறுத்தவரை செந்தில்குமார் எங்கோ உயிரோடு இருக்கின்றான். ஆனால் அந்த ஊரை பொறுத்தவரையில் செந்தில்குமார் காட்டுத்தீயில் இறந்துவிட்டான். செல்லியின் திருமணத்தை அங்கீகரிக்காத வேங்கையன், ராசைய்யா, வீரா மூவரும் சேர்ந்து செல்லி, செந்தில்குமார்,

அவர்களது குழந்தை அனைவரையும் கொன்று விட்டனர் என்ற கட்டுக்கதையைப் பரப்பி வந்தார் கந்தன்... தனது இரண்டாவது மகன் வசந்தகுமாரிடமும் அவர் அதே கதையைக் கூறி நம்ப வைத்தார். கடைசிவரை செந்தில்குமார் உயிரோடு இருப்பது வசந்தகுமாருக்கு கூடத் தெரியாது.

அமெரிக்காவில் குடியேறிய செந்தில்குமார் அங்கேயே படிப்பு முடித்து, வேலையைத் தேடி கொண்டவர் அமெரிக்கவாழ் இந்திய பெண்ணான சாந்தியை திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு அவர் செல்லி என்ற பெண்ணை மறந்தே போனார்.

வீரா தனது தோழியின் அஸ்தியை கரைத்துவிட்டுக் காட்டை விட்டு வந்தவன் பற்றற்றவனாய் அப்படியே கால் போன போக்கில் சுற்றிக் கொண்டிருந்தான். அவ்வப்போது செல்வாவை மறைந்திருந்து பார்த்துவிட்டு வருவான். திருவேங்கடம், சுபத்ரா இருவரும் அவர்கள் பெற்ற பிள்ளை போன்று அவனிடம் பாசம் காட்டி வளர்ப்பதை கண்டவன் அதற்கு மேல் செல்வாவை பார்க்க செல்வதில்லை. தாய் பாசத்தைச் சந்தேகிக்கக் கூடாது அல்லவா...! அவர்களின் மகனாகச் செல்வா நன்றாக இருப்பான் என்கிற நம்பிக்கை அவனுள் இருந்தது.

தீயின் சூடு குறைந்ததும் எரிந்த வீட்டில் இருந்த பொருட்களை அப்புறப்படுத்தும் போது இரும்பு பெட்டியில் இருந்து செல்லியின் திருமணப் புடவையும், புகைப்படமும் கிடைத்தது. வேங்கையன் அதை எடுத்துக் கோபத்தில் தூக்கி வீச... மாயி அதை எடுத்து பத்திரப்படுத்தி வைத்தாள்.

செல்லியின் நினைவு அவர்களுள் அப்படியே தங்கி போனாலும் அந்தக் கொடிய நிகழ்வை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மறக்கலானார்கள். ஆனால் ஒரே ஒரு ஆன்மா மட்டும் எதையும் மறக்கவில்லை. அது செல்லியின் ஆன்மா... காட்டின் இயற்கை வளத்தை அழிக்க வந்தவர்களை அவள் வதம் செய்தாள். எல்லோரும் அது

மாயமான் அம்மனின் மகிமை என்று கொண்டாட... அதுவே தொடர்கதையாகி போனது.

இதோ இன்று செல்லி தன்னைக் கொன்றவனையும், தன் இனத்தை அழிக்கத் துணிந்தவனையும் அழிக்கக் காத்திருக்கிறாள். அன்று செய்ய முடியாததை இன்று செய்திட அவள் துடித்திருந்தாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 13

மாயமான் அம்மன் கோவிலில் காற்று வீசும் சத்தத்தைத் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. அத்தனை அமைதியாக இருந்தது. செல்வா இறுகி போன முகத்துடன் நின்றிருந்தான். அவனைச் சுற்றி சுபத்ரா, வேங்கையன், ராசைய்யா, வீரா, மைனா, மாயி அனைவரும் நின்றிருந்தனர்.

"குழந்தை வரம் வேண்டி தான் இந்தத் தெய்வத்துக்கிட்ட வந்தேன். பெறாமலே என்னைத் தாயாக்கிவள் உன்னுடைய அம்மா செல்லி. உங்கப்பா உன்னைத் தூக்கிட்டு வந்தப்போ நீ யார், என்னங்கிற விவரத்தை அவர் என் கிட்ட சொல்லலை. ஆனா அவர் இந்த ஊருக்கு வந்துட்டு திரும்ப வரும் போது தான் உன்னைத் தூக்கிட்டு வந்தாரு. அதனால் தான் உனக்கு இந்த ஊருக்கு மாற்றலாகி இருக்குன்னு தெரிஞ்சப்போ எனக்குக் கொஞ்சம் பயமாயிருந்தது. ஆனா நீ என் மகன்ங்கிற நம்பிக்கை மலையளவு இருந்தது. அதான் தைரியமா இங்கே வந்தேன்." சொல்லும் போதே சுபத்ராவின் விழிகள் கலங்கியது.

செல்வா அன்னையின் அருகே வந்து அணைத்துக் கொண்டான். ராகேஷின் உடலை வாங்க வந்திருந்த செந்தில்குமாரை கண்டு அவன் ஆடி போய்விட்டான். அவனுக்கு வயதானால் எப்படி இருப்பானோ? அப்படி அவர் இருந்தார். ஆனால் அவரோ அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை. அவரது மகனது உடலை பெற்றுவதில் மும்முரமாக இருந்தார். ராகேஷின் இறப்பு மட்டுமே அவரைப் பாதித்திருந்தது. செல்வா அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை. அப்படி ஒருவன் இருப்பதாகக் கூட அவர் காட்டி கொள்ளவில்லை. உடனே வீட்டிற்குக் கிளம்பி வந்த செல்வா சுபத்ராவிடம் விசயம் என்னவென்று கேட்க... அவர் வீரா, வேங்கையன், ராசைய்யா, மைனா, மாயி எல்லோரையும் இங்கு வர சொல்லி அவனது பிறப்பை பற்றிய இரகசியத்தை எல்லாம் அவனிடம் கூறிவிட்டார். அதைக் கேட்டவனது மனம் இறுகி போனது. தாயை

கொன்ற தந்தையான கயவனை அவன் துடிக்கத் துடிக்கக் கொல்ல நினைத்தான்.

"செல்வா, நீ என் மகன் தானே..." பத்து மாதங்கள் சுமக்காவிட்டாலும் சுபத்ரா அவனது அன்னையன்றோ...

"ம்மா, லூசு மாதிரி பேசாதீங்க... உங்களுக்கு இந்த அழுகாச்சி காவியம் கொஞ்சமும் செட்டாகலை." என்று அவன் தனது கலக்கத்தை மறைத்துக் கொண்டு அவரைக் கேலி செய்தான்.

"அப்போ கருவாச்சி காவியம் செட்டாகுமா...?" அவனது அன்னை என்று அவர் நிரூபித்தார்.

"பார்த்தீங்களாம்மா... நீங்க தான் என்னோட அம்மான்னு நமக்குள் பத்து பொருத்தமும் பக்காவா பொருந்தி இருக்கு. இதைவிட வேறு என்ன பொருத்தம் வேணும்?" அவன் அன்னையை ஆதரவாக அணைத்துக் கொள்ள... சுபத்ரா தனது கலங்கிய விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

இதைக் கண்ட மற்றவர்களின் விழிகளும் கலங்கி போனது. செல்லியின் மகனது கம்பீரத்தை அவர்கள் ரசித்துப் பார்த்தனர்.

"சாமி, உங்களைத் தொட்டு பார்த்துக்கவா...?" வீரா செல்வாவிடம் ஆசையுடன் கேட்டான். என்ன இருந்தாலும் செல்வா உயரத்தில் இருப்பவன் அல்லவா...

"நீங்க எங்கம்மாவோட பிரெண்ட். எனக்கு மாமா மாதிரி..." என்றவன் சட்டென்று வீராவை அணைத்துக் கொள்ள... வீரா மனம் கலங்க, விழிகள் கலங்க பதிலுக்குச் செல்வாவை அணைத்துக் கொண்டான்.

"நீங்க மட்டும் ஏன் மிச்சம் இருக்கீங்க...? வாங்க மாமா, வாங்க சித்தப்பா..." என்று அவன் வேங்கையன், ராசைய்யாவை அழைக்க... அவர்களும் சந்தோசத்துடன் அவனை வந்து அணைத்து கொண்டனர். பெண்கள் மூவரும் ஆனந்த கண்ணீருடன் இந்தக் காட்சியைப் பார்த்திருந்தனர். இவை அனைத்தையும் செல்லியின்

ஆன்மா கண்ணீர் மல்க பார்த்திருந்தது. தனது மகன் சேர வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தது கண்டு அவளுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

என்ன தான் சந்தோசமாக வெளியில் காட்டி கொண்டாலும் ஆண்கள் நால்வரின் மனதிலும் செந்தில்குமாரை பழிவாங்கும் எண்ணமே மேலோங்கி இருந்தது. அவர்களது மனதில் வன்மத்தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

ராகேஷ் உடலுக்குக் கந்தனின் வீட்டில் வைத்து இறுதி மரியாதை செய்யபட்டது. அங்குக் கந்தன், செந்தில்குமார் மட்டுமே இருந்தனர். செந்தில்குமார் உயிரோடு இருப்பதை இத்தனை நாள் மறைத்து வைத்த மாமனாரை கண்டு பயந்து போன வசந்தகுமாரின் மனைவி ராணி அங்கு இருக்கப் பிடிக்காது தனது மகள் ரம்யாவை அழைத்துக் கொண்டு அவரது அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

ராகேஷின் உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவனுக்குக் கொள்ளி வைக்கும் முன் செந்தில்குமார், உறங்குவது போல் சாதாரணமாக இருக்கும் மகனது முகத்தைக் கண்டு குலுங்கி குலுங்கி அழுதார். ஒரு மகனை கொல்ல துடித்த அந்தத் தந்தை, இன்னொரு மகனுக்காகத் தேம்பி தேம்பி அழுவது விந்தையே... மனிதனின் மனம் தான் எத்தனை விசித்திரங்களைக் கொண்டுள்ளது. அவரது அழுகையைச் செல்லி வன்மம் கலந்து பார்த்திருந்தாள்.

'நன்றாக அழுது கொள். இனி உன்னால் அழவே முடியாது.' என்று நினைத்தவள் அவரது இறுதி யாத்திரைக்கு நேரம் குறித்தாள்.

மகனுக்குக் கொள்ளி வைத்த செந்தில்குமார், "உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அவளை நான் சும்மாவிட மாட்டேன்." என்று ஆவேசமாகக் கத்த... செல்லி இகழ்ச்சியாய் அவரைப் பார்த்து சிரித்தாள்.

"அதுக்கு நீ உயிரோடு இருக்கணுமே..." என்றபடி கையில் அரிவாளோடு செந்தில்குமார் மீது பாய்ந்தான் வீரா...

"செல்லியை துடிக்கத் துடிக்கக் கொன்னேல்ல... அவளை மாதிரி நீயும் துடிதுடிச்சு செத்து போ..." என்று ஆவேசமாகக் கூறியபடி அரிவாளால் அவரின் உடல் எங்கும் சராமாரியாக வெட்ட துவங்கினான் வீரா.

யாரும் இதை எதிர்பார்க்காததால் எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்திருந்தனர். குற்றுயிராய் துடித்துக் கொண்டிருந்த செந்தில்குமாரின் சட்டையைப் பிடித்துத் தூக்கிய வீரா,

"செல்லியும், என் மக்களும் எரிந்து சாம்பலானது போல் நீயும் எரிந்து சாம்பலா போ..." என்று ஆக்ரோசத்துடன் கூறியவன் அவரை எரிந்து கொண்டிருந்த ராகேஷின் சிதையில் தள்ளினான். அடுத்த நொடி நெருப்பின் நாக்குகள் செந்தில்குமாரை துவம்சம் செய்யத் துவங்கியது.

இதை எல்லாம் கண்ட கந்தன் அதிர்ச்சியில் நெஞ்சை பிடித்துக் கொண்டு கீழே சரிந்தார். அடுத்தச் சில நொடிகளில் அவரது உயிர் கூடு அவரை விட்டு பிரிந்து சென்றது.

வீரா நேரே செல்வாவின் முன் போய் நின்றான். இரத்த கறையுடன் வந்து நின்ற வீராவை கண்டு செல்வா திகைத்துப் போனான்.

"மாமா, என்னாச்சு...?" என்று கேட்க...

"செந்திலை கொன்னுட்டேன்... மாப்ள, இது மாயம்மா செய்யலை. மனுசன் நான் தான் செஞ்சேன். நீங்க போலீசுக்கு சொல்லிருங்க..." என்று வீரா கூற...

செல்வாவின் கண்கள் கலங்கி போனது. நடக்கும் குற்றத்துக்குத் தண்டனை வாங்கித் தர அவன் விரும்பினான் தான்... ஆனால் அரக்கர்களை வதம் செய்த காரணத்துக்காக வீராவிற்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க அவனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை.

ஆனாலும் அவன் தனது கடமையைச் செய்யத் தவறவில்லை.

வீராவின் வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அவனுக்காக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திறமையாக வாதாடினார்.

"மிஸ்டர். செந்தில்குமார் மகன் இறந்த துக்கம் தாங்காது மகனது சிதையில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். அதைக் கண்ட அதிர்ச்சியில் கந்தனுக்கு மாரடைப்பு வந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அதற்குச் சாட்சி இதோ..." என்று வேங்கையன், ராசைய்யாவை அழைத்தார்.

அப்போது தான் அந்தத் திருப்பம் நிகழ்ந்தது. செந்தில்குமாரின் மனைவி சாந்தி அங்கு வாக்குமூலம் கொடுக்க வந்தார்.

"மகன் இறந்த துக்கத்தில் என் கணவர் மனசு சரியில்லாமல் இருந்தார். அதனால் அவர் விரக்தியில் எங்கள் மகனது சிதையில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்." என்று சாந்தி தனது வாக்குமூலத்தைத் தெளிவாகப் பதிந்தார்.

சாந்தியின் வாக்குமூலம் வீராவிற்கு விடுதலையை வாங்கித் தந்தது. வீரா அவளைக் கண்டு கை கூப்பி நன்றி தெரிவித்தான்.

"நன்றி தங்கச்சி..."

"நன்றி எல்லாம் வேண்டாம்... உங்க தோழிக்கு நேர்ந்த கொடுமைக்கு என்னாலான சிறு பிராயச்சித்தம்." என்றவர் திரும்பி பார்க்காது சென்றுவிட்டார்.

வீராவின் விடுதலையைப் பெரிதாகக் கொண்டாடி விட்டான் செல்வா... எல்லோரும் சந்தோசமாக இருக்கும் போது செல்வா தனது தாய்மாமனிடம்,

"நான் பொம்மியை காதலிக்கிறேன் மாமா... எனக்கு அவளைக் கட்டி கொடுங்க..." என்று பட்டென்று கேட்டு விட்டான்.

"அடப்பாவி மகனே, இப்படித் தடாலடியாவா பொண்ணு கேட்ப?" சுபத்ரா ஆச்சரியத்தில் வாயில் கை வைத்தார்.

"தடாலடியா பொண்ணைத் தூக்கலாம்ன்னு தான் இருந்தேன். ஆனா என் மாமன் பாவம்ன்னு விட்டு விட்டேன்." என்று செல்வா சிரித்தான்.

பொம்மி பயத்துடன் தனது தகப்பனை பார்த்தாள். அவளுக்கு அவளது அத்தையின் காதல் திருமணம் பற்றித் தெரியுமாதலால் தனது தந்தையை நினைத்து அவளுக்குத் திக்கென்று இருந்தது. வேங்கையன் யோசனையாக மருமகனை பார்த்தான்.

"என் பொண்ணுக்கு என்ன சீரு தருவீக மாப்ள...?" என்று கேட்க...

"என்னடா இது? பொதுவா பொண்ணு வீட்டில் தானே சீர் கொடுக்கணும்." சுபத்ரா அங்கலாய்க்க...

"அது பெத்தவங்க பார்த்து வைக்கிற கண்ணாலம். இது காதல் கண்ணாலம்..." வீரா வேங்கையனுக்கு எடுத்துக் கொடுத்தான்.

"என்னோட காதல்... காலம் பூரா உங்க பொண்ணை நான் காதலிச்சிட்டே இருப்பேன் மாமா..." என்றவனது பார்வை மாமன் மீது இல்லாது மாமன்மகளின் மீதிருந்தது. பொம்மி ஆவென விழிக்க...

"பாரு மாமோய்... என்ற மருமவன் கிட்ட இருந்து எப்படிக் காதலிக்கணும்ன்னு கத்துக்கோ..." மாயி கணவனிடம் கிசுகிசுத்தாள்.

"இந்த வயசுக்கு மேல காதல்ல பாடம் படிக்கணுமா புள்ள...?" வேங்கையன் பரிதாபமாகக் கேட்டான்.

"ஆமா..." மாயி உறுதியாகக் கூறினாள்.

"அப்போ பொம்மிக்கு தம்பியோ, தங்கச்சியோ ரெடி பண்ணலாம்ங்கிற..." வேங்கையன் மீசையை முறுக்கி கொண்டு கேட்க... அதைக் கேட்ட மாயி திகைத்து போய் விழித்தாள். இருவரது பேச்சை கேட்டு அனைவரும் சிரித்தனர்.

"மாமா, என்னோட மகனுக்கு வழி சொல்ல சொன்னா... நீங்க எனக்கு மச்சானை ஏற்பாடு பண்ண பார்க்கிறீங்களே." செல்வா மாமனை கலாய்த்தான்.

"உனக்கு இல்லாத பொண்ணா மாப்ள... என் பொண்ணைத் தூக்கிட்டுப் போய்த் தாலி கட்டிக்கோ..." என்று வேங்கையன் தனது சம்மதத்தைத் தெரிவிக்க...

"என்ன பொம்மி... ரெடியா?" என்று கண்சிமிட்டியபடி செல்வா கேட்க... அவள் நாணத்துடன் தலைகவிழ்ந்தாள்.

"என்னது தூக்கிட்டு போயா? அவன் சும்மாவே காய்ஞ்சு போய்க் கிடக்கான். அவன் கிட்ட போய் இப்படி ஒரு வார்த்தை சொல்வீங்களா அண்ணே... முதல்ல கல்யாணத்துக்கு நல்ல முகூர்த்தமா பாருங்க." சுபத்ரா அவனது எண்ணத்திற்குத் தடை போட்டார்.

"எனக்கு வில்லி யாருமே இல்லை. நீங்க தான்ம்மா..." செல்வா பல்லை கடித்தான்.

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா மை சன்..." என்று கெத்து காட்டினார் சுபத்ரா...

"ம்மா, பொம்மி கிட்ட பேசவாவது செய்யலாமா?"

"ம், ம்..." சுபத்ரா போனால் போகுது என்று சம்மதம் சொன்னார்.

செல்வா பொம்மியை அழைத்துக் கொண்டு செல்லும் போது சுபத்ரா அவனிடம், "ஒன்லி ஸ்பீச்... நோ டச்சிங்... ஓகே மை சன்..." என்று கத்தி கூற...

"ம், திரும்பி வரும் போது உங்க பேர புள்ளையோட வர்றோம்." என்று அன்னையைக் கலாய்த்து விட்டு அவன்

செல்ல... சுபத்ரா ஆவென்று வாயை பிளந்தார்.

செல்வா, பொம்மி இருவரும் மெல்ல நடந்து கொண்டிருந்தனர். இருவருக்கும் இடையில் கனத்த மௌனம் நிலவியது.

"நான் ராஜகுமாரன் இல்லைன்னாலும் இந்தச் சாதாரண ஆபிசரை கட்டிக்க உனக்குச் சம்மதமா?" என்று அவன் கேட்க... அவள் அமைதியாக வந்தாள்.

"ஏய், நில்லுடி... நான் உனக்கு வேணுமா? வேணாமா?" அவளது கையைப் பிடித்து நிறுத்தியவன் அவளை முகத்தை நிமிர்த்த... அடுத்த நொடி பெரும் கேவலுடன் பொம்மி அவனை அணைத்து கொண்டாள்.

"எத்தனை நாள் அவஸ்தை இது தெரியுமா? மனசு வேணும்ன்னு அடிச்சிக்கும். ஆனா அறிவு வேண்டாம்ன்னு திட்டும். எனக்குள் போராடி போராடி ரொம்பவே ஓய்ஞ்சு போயிட்டேன். இப்பத்தான் நிம்மதியா இருக்கு." என்றவளை சந்தோசத்துடன் அணைத்து கொண்டவன்,

"இதுக்கு எல்லாம் என்ன அர்த்தம் பொம்மி...?" என்று அவளது காதருகில் குனிந்து கேட்டான்.

"பிடிச்சிருக்கு, பிடிச்சிருக்கு... வேணும், வேணும்..." என்று கூறியவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

அடுத்த முகூர்த்தத்தில் செல்வா, பொம்மி இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. அதுவும் மலைவாழ் மக்களின் முறையோடு... அதற்குச் செல்வாவின் தம்பி மணிமாறன், மனைவி சித்ராவோடு வந்திருந்தான். சுபத்ரா சித்ராவிடம் மாயமான் அம்மனிடம் வேண்டி கொள்ளச் சொன்னார்.

"இந்த அம்மன் சக்தி வாய்ந்தவள். நீ நல்லா வேண்டிக்கோ. நிச்சயம் உனக்குக் குழந்தை வரத்தை கொடுப்பாள்." என்று சொல்ல... சித்ராவும் வேண்டி கொண்டாள்.

செல்வா, பொம்மியின் வாழ்க்கை சீராகச் சென்றது. இருவரது வாழ்க்கையைக் கண்டு செல்லியின் ஆன்மா

சந்தோசப்பட்டது. தான் வாழாத காதல் வாழ்க்கையைத் தன் மகன் வாழ்வது கண்டு அவள் சந்தோசம் கொண்டாள்.

"செல்வா, உன் பொண்டாட்டி எங்கே போனாள்டா? ஆளையே காணோம்..." சுபத்ரா மருமகளைத் தேடியபடி வந்தார்.

"எந்த மரத்தில் ஏறி உட்கார்ந்து இருக்காளோ..." என்று சலித்தபடி அவன் வெளியில் வந்தான்.

செல்வா நினைத்தபடி பொம்மி மாமரத்தில் அமர்ந்து மாங்காயை பறித்து உண்டு கொண்டிருந்தாள். அதைக் கண்டு செல்வா தலையில் அடித்துக் கொள்ள... சுபத்ரா சிரித்தபடி மருமகளைப் பார்த்தார்.

"ம்மா, நீங்க சொன்னது பலிச்சிருச்சு... இப்போ சந்தோசம் தானே..." அவன் கோபத்துடன் கேட்க... சுபத்ரா புரியாது மகனை பார்த்தார்.

"வானரங்களைப் பார்த்து என் குழந்தைகள்ன்னு சொன்னீங்கல்ல... இப்போ வானரமா மாறியிருக்கிற உங்க மருமகளைப் பாருங்க... நிச்சயம் எனக்கு வானரம் தான் பிறக்க போகுது..." அவன் வராத கண்ணீரை போலியாகத் துடைத்துக் கொண்டான்.

"உனக்கு எப்படிடா பிறக்கும்? என் மருமகளுக்குத் தானே குழந்தை பிறக்கும்..." சுபத்ரா மகனை பார்த்து கவுண்ட்டர் கொடுத்தார்.

"நீங்க நல்ல மாமியாரா மாறி அவளைக் கீழே இறங்க சொல்லி அதட்டுங்க..."

"அயித்த, உங்க மகனோட வானர புள்ள மாங்கா கேட்கிறான்னு அவரு கிட்ட சொல்லுங்க..." பொம்மி சொன்னதைக் கேட்டு இருவரது முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"இந்த மாதிரி சமயத்தில் இப்படி எல்லாம் மரமேற கூடாது பொம்மி. பார்த்து மெல்ல இறங்கு..." சுபத்ரா அக்கறையாக

மருமகளிடம் சொன்னவர் உள்ளே இனிப்பு எடுக்கச் சென்றுவிட்டார்.

அவர் சென்றதும் பொம்மி தொப்பென்று கீழே குதிக்க... அவள் கீழே விழும் முன் செல்வா பதறி போய் அவளைத் தனது கைகளில் தாங்கி கொண்டான்.

"என்ன காரியம் பண்ற? நீயெல்லாம் எப்படிடி டாக்டருக்கு படிச்ச..." அவன் மனைவியைக் கடிந்தான்.

"எல்லாம் நீ இருக்கிற தைரியம் தான் மாமோய்..." என்று சிரித்தவள் அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"மாமோய், சந்தோசமான விசயம் சொல்லியிருக்கேன். கிப்ட் எதுவும் கிடையாதா?"

"கிப்ட் தானே கொடுத்துட்டா போச்சு..." என்றவன் மனைவியின் முகம் நோக்கி குனிய...

"பொம்மி, ஸ்வீட் எடுத்துக்கோ..." என்றபடி சுபத்ரா அங்கு வர...

"எனக்கு வில்லி யாரும்மில்ல... என் அம்மா தான்..." என்றவன் அன்னையை முறைத்தான்.

"என்னடா முறைப்பு வேண்டி கிடக்கு..." என்ற சுபத்ரா கையிலிருந்த இனிப்பை எடுத்து மகனது வாயில் வைத்து அடைத்தார்.

பொம்மி குழந்தை உண்டாகி இருப்பதை அறிந்து எல்லோரும் அவளைப் பார்க்க வந்துவிட்டனர். அங்கே எல்லையில்லா சந்தோசம் நிலவியது.

"உனக்குச் செல்லி வந்து மகளா பிறக்கோணும் புள்ள..." வீரா விழிகள் கலங்க, மனம் நெகிழ கூறினான். அதைக் கேட்டு அனைவரது விழிகளும் கலங்கியது.

மாயமான் அம்மன் கோவிலை புணரமைக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது செல்லி புதைத்து வைத்திருந்த ஓலைச்சுவடிகளைக் கண்டெடுத்தனர். அதிலிருந்த

மருத்துவக் குறிப்புகள் பொம்மிக்கு பெரும் உதவியாக இருந்தது. அவள் அதில் தனது ஆராய்ச்சியை மேற்கொண்டாள். அதே போல் குழந்தை பாக்கியம் இல்லாத சித்ராவுக்குச் சிகிச்சை அளிக்கத் துவங்கி இருந்தாள். அதன் விளைவு சித்ரா கருவுற்றாள்.

சித்த மருத்துவம் சரியானவர்களின் கையில் இருப்பதைக் கண்டு செல்லியின் ஆன்மா சந்தோசித்தது. நல்லது நினைப்பவர்களுக்கு நல்லதே நடக்கும்...!!!

*****************

எல்லோரும் செல்லி செல்வா, பொம்மி தம்பதிக்கு மகளாக வந்து பிறப்பாள் என்று எண்ணி கொண்டிருக்க... அவளோ காட்டில் செம்மரங்களை வெட்டி, கடத்த வந்த ஐவரை ஓட ஓட விரட்டி கொண்டிருந்தாள். மறுநாள் அந்த ஐவரும் சடலமாகக் காட்டில் கண்டெடுக்கப்பட்டனர். வழக்கம் போல் எல்லோரும் இது மாயம்மாவின் மகிமை என்று பக்தி பரவசத்தில் திளைக்க... செல்லி அனைத்தையும் புன்னகையுடன் பார்த்திருந்தாள்.

செல்லியின் ஆன்மாவிற்கு ஒரு போதும் அழிவு கிடையாது. அவள் தெய்வமாக இருந்து காட்டின் இயற்கை வளத்தை அழிவில் இருந்து காப்பாற்றுவாள். அவள் மாயமான் உருவத்தில் மாயம் செய்து பூமியின் பொக்கிசமான வனத்தை என்றும் காப்பாள். அவளைப் போன்றோர் இருக்கும் வரை இயற்கைக்கு அழிவேது...!!!

முற்றும்...!!!